# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

## DIRECTORATE OF DISTANCE & CONTINUING EDUCATION

## TIRUNELVELI – 627012, TAMIL NADU

# B.A – Tamil

## இலக்கணம் - 1

*நன்னூல் - எழுத்து*

## மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

## தொலைதூரத் தொடர்கல்வி இயக்ககம்

## திருநெல்வேலி – 627017

## தமிழ்நாடு

# இலக்கணம் 1– நன்னூல் (எழுத்து)

**அலகு 1 பாயிரம்**

சிறப்புப்பாயிரம் - பொதுப்பாயிரம் - மூவகை நூல் - பத்துக்குற்றம் - பத்து அழகு – முப்பத்திரண்டு உத்திகள் - நூலின் உறுப்புகள் - நல்லாசிரியர் இலக்கணம் - ஆசிரியர் ஆகாதார் - கற்பிக்கும் முறை - மூவகை மாணாக்கர் - பாடம் கேட்டலின் இயல்பு – நூல் பயிலும் முறை – நூல் யாப்பு.

**அலகு 2 எழுத்தியல்**

எழுத்திலக்கணத்தின் பாகுபாடு – பெயர் - முறை – பிறப்பு – சார்பெழுத்துகள் - உருவம் - மாத்திரை – மொழி முதல் எழுத்துகள் - இறுதிநிலை எழுத்துகள் - மெய்ம்மயக்கம் - போலி – சாரியை.

**அலகு 3 பதவியல்**

பதம் - வரையறை – ஓரெழுத்து ஒரு மொழி – பகாப்பதம் - பகுப்பதம் - பகுபத உறுப்புகள் - மையீற்று பண்புப்பகுதிகள் - தெரிநிலை வினைப்பகுதி – விகுதி - இடைநிலை – தற்சமம் - தற்பவம் - எழுத்துத்திரிபு – தமிழுக்குரிய சிறப்பு எழுத்துக்கள்.

**அலகு 4 உயிரீற்றுப் புணரியல்**

வேற்றுமை, அல்வழிப்புணர்ச்சி – தொகைநிலை, தொகாநிலைத்தொடர் - விகாரப்புணர்ச்சி – பொதுப்புணர்ச்சி – உடம்படுமெய் - மரப்பெயர் முன் வல்லினம் - உயிரீற்றுச் சிறப்பு விதி – திசைப்பெயர் புணர்ச்சி – எண்ணுப்பெயர் புணர்ச்சி – சிறப்பு விதிகள்.

**அலகு 5 மெய்யீற்றுப் புணரியல், உருபுப் புணரியல்**

மெய்யீற்றின் முன் உயிர் புணர்தல் - தனிக்குறில் முன் ஒற்று – ணகர னகர ஈற்றுப் புணர்ச்சி – மகர ஈற்றுப் புணர்ச்சி – யரழ ஈறு – லகர ளகர ஈற்றுப் புணர்ச்சி – உருபுப் புணரியல்.

## நூலாசிரியர்

தொல்காப்பியம் தமிழ் நாகரிகம் காட்டும் இலக்கணச் செப்பேடு மொழிப் பெருமை விளக்கும் மெய்க்கீரத்தி: கால வெள்ளத்தை நீந்திவந்த பெருநூல். இந்நூலின் சார்பால் எழுந்த இலக்கணங்கள் பல. அவற்றுள் ஒன்றே நன்னூல்.

நன்னூலின் ஆசிரியர், பவணந்தி முனிவர், இவர் சமண சமய துறவி. மொழிக்கு முதற் காரணம் அணுத்திரள் என்று கூறியமையாலும் அசோக மரத்தின் நிழலில் அமர்ந்த அருகக் கடவுளை வணங்குவதாலும் இது பெறப்படும். இவரது ஊர், சனகை என்னும் சனநாதபுரம். இது, மைசூரில் நரசபுரம் தாலுகாவில் உள்ளது என்பர்.

பவணந்தியாரை ஆதரித்தவன் சீயகங்கன். இவன் கங்க நாட்டினையாண்ட குறுநில மன்னன். பவணந்தியார் காலம் கி. பி 12 ஆம் நூற்றாண்டின் இறுதியும் கி.பி.13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியும் ஆகும்.

## நூலமைப்பு

எழுத்து. சொல், பொருள். யாப்பு, அணி என்னும் ஐம்பகுப்பையும் ஐந்திலக்கணம் என்று கூறுபர். இவ்வகையில் நன்னூலில் எழுத்து, சொல் என இரண்டு இலக்கணங்களே உள்ளன. ஆனால் சிலர், நன்னூல் ஐந்திலக்கணமும் கொண்டதாக இருந்திருக்க வேண்டும் என்று கருதுவர். நன்னூல் சிறப்புப் பாயிரத்தில் அரும் பொருள் ஐந்தையும் யாவரும் உணர என வரும் தொடரை இதற்குச் சான்றாகக் காட்டுவர் 'தமிழுக்கு எழுத்து முதலான அஞ்சு லஷணத்தையும் அறுதியிடுவதான நன்னூல் என்று ஒரு சாஸ்திரம் உண்டு' என்று பிள்ளை லோகாசாரியார் எழுதியிருத்தலும் இக்கருத்துக்கு அரணாம் என்பர்.நன்னூலில் 462 நூற்பாக்கள் உள்ளன. இவற்றுள் ஒரு செய்யுள் சிறப்புப் பாயிரம். 55 நூற்பாக்கள் பொதுப் பாயிரம். 407 நூற்பாக்கள் நூலுக்கு உரியன.

பொதுப்பாயிரத்தில் அமைந்த நூற்பாக்கள் தொல்காப்பியம், இறையனார் களவியல் உரை, யாப்பருங்கல விருத்தியுரை, தொல்காப்பிய இளம்பூரணர் உரை ஆகியவற்றில் காணப்படுவன. எனவே இப்பொதுப்பாயிரச் சூத்திரங்களில் பல நன்னூலாருக்கு முற்பட்டன. நன்னூலார் இவற்றைத் தொகுத்தும் சூத்திரங்கள் சிலவற்றை இயற்றிச் சேர்த்தும் இப்பொதுப்பாயிரத்தைக் கோவையாக அமைத்துள்ளார்.

எழுத்ததிகாரம். சொல்லதிகாரம் ஆகிய இரண்டும் ஐந்து ஐந்து இயல்கள் கொண்டன. எழுத்ததிகார நூற்பாக்கள் 202 சொல்லதிகார நூற்பாக்கள் 205.

## அலகு - 1

# சிறப்புப் பாயிரம்

*மலர்தலை உலகின் மல்குஇருள் அகல*
*இலகுஒளி பரப்பி யாவையும் விளக்கும்*
*பரிதியின் ஒருதான் ஆகி முதல்ஈறு*
*ஒப்புஅளவு ஆசை முனிவுஇகந்து உயர்ந்த*
*அற்புத மூர்த்திதன் அலர்தரு தன்மையின்*

*மனஇருள் இரிய மாண்பொருள் முழுவதும்*
*முனிவுஅற அருளிய மூவறு மொழியுளும்*
*குணகடல் குமரி குடகம் வேங்கடம்*
*எனும்நான்கு எல்லையுள் இருந்தமிழ்க் கடலுள்*
*அரும்பொருள் ஐந்தையும் யாவரும் உணரத்*
*தொகைவகை விரியில் தருகஎனத் துன்னார்*
*இகல்அற நூறி இருநிலம் முழுவதும்*
*தனது எனக் கோலித் தன்மத வாரணம்*
*திசைதொறும் நிறுவிய திறல்உறு தொல்சீர்க்*
*கருங்கழல் வெண்குடைக் கார்நிகர் வண்கைத்*
*திருந்திய செங்கோல் சீய கங்கன்*
*அருங்கலை வினோதன் அமரா பரணன்*
*மொழிந்தனன் ஆக முன்னோர் நூலின்*
*வழியே நன்னூல் பெயரில் வகுத்தனன்*
*பொன்மதில் சனகைச் சன்மதி முனிஅருள்*
*பன்அரும் சிறப்பின் பவணந்தி*
*என்னும் நாமத்து இருந்தவத் தோனே.*

பரந்து காணப்பெறும் இவ்வுலகத்தில் நிறைந்திருக்கும் புற இருளை நீக்கிப் பொருள்களைக் கண்ணுக்குப் புலப்படுமாறு விளங்கச் செய்பவன் கதிரவன். அவனைப் போல அனைத்து உலகங்களையும் விளங்கச் செய்யும் ஒரு முதல்வனாக இருப்பவன் அருகதேவன். அவ்இறைவன் பிறப்பும் இறப்பும் ஒப்பும் அற்றவன். அளவிட முடியாதவன்.

விருப்பு, வெறுப்பு ஆகியவற்றைக் கடந்து நிற்பவன். அறிவையே தனது உடம்பாகக் கொண்ட அவ்விறைவன் உலகத்து உயிர்களின் மனத்திருள் நீங்கும்படியாக அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு பொருள்களைத் தன் அருளால் தோன்றிய பதினெட்டு மொழிகளின் வாயிலாக வெளிப்படுத்தினான்.

அவற்றுள் தமிழ் மொழியும் ஒன்று. இம்மொழி கிழக்கில் குணகடலும் தெற்கில் குமரியும் மேற்கில் குடகு மலையும் வடக்கில் திருவேங்கடமும் ஆகிய நான்கு எல்லைக்கு உட்பட்ட நிலத்தில் வழங்கப்பட்டு வருகிறது. இத்தமிழாகிய பெரிய கடல், எழுத்து முதலான ஐந்திலக்கணங்களை உடையது. இம்மொழியின் இயல்பை எளியவர்களும் அறிந்து கொள்ளும் பொருட்டு நூலாக்க வேண்டுமென எண்ணினான் சீயகங்கன்.

இவன் கங்க நாட்டை ஆண்ட குறுநில மன்னன். ஆயினும் பகைவரை அழித்து இப்பெரிய நிலவுலகத்தைத் தன்னுடையதாக்கிக் கொண்டவன். தன் யானைகளைத் திசை யானைகள் போலத் திசைதோறும் நிறுத்திய வெற்றி உடையவன். தொன்றுதொட்ட புகழை உடையவன். வீரக்கழலை அணிந்தவன். வெண்கொற்றக் குடைக்கீழ் இருந்து ஆட்சி புரிபவன். மேகம் போல அளவின்றிக் கொடுக்கும் வள்ளன்மை கொண்டவன். வளையாச் செங்கோலை ஏந்தியவன். நூல்களை ஆராய்வதையே தன் பொழுதுபோக்காகக் கொண்டவன். போரில் ஏற்பட்ட விழுப்புண்களையே அணிகலன்களாக அணிந்தவன். இச்சிறப்புப் பொருந்திய சீயகங்கன் ஓர் இலக்கண நூலைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் தரும்படியாகப் பவணந்தி முனிவரிடம் வேண்டினான்.

இவர், பொன் மதிலால் சூழப்பட்ட சனகாபுரத்தில் வாழ்ந்த சன்மதி முனிவரின் மகனாவார். சிறந்த ஒழுக்கங்களையும் பெரிய தவத்தினையும் உடையவர். அரசனின் வேண்டுகோளுக்கு இணங்கப் பவணந்தியார் முன்னோருடைய நூலைப் பின்பற்றி நன்னூல் என்ற பெயரில் இவ்அரிய இலக்கண நூலை ஆக்கித் தந்தார்.

## பொதுப்பாயிரவியல்

### பாயிரத்தின் பெயர்கள்

பாயிரம் என்னும் சொல்லுக்குப் பரந்து பட்டது என்பது பொருளாகும். அது நூலின் வரலாற்றை விளங்க உரைப்பதாகும். இதனை முன்னுரை என்றும் கூறலாம். ஒருவரை இன்னார் எனக்காட்டும் முகம்போல இது நூற்பொருளை அறிய உதவும். நூலில்

கூறப்படும் பொருளைத் தன்னுள் அடக்கி நிற்கும் இப்பாயிரம் பொதுப்பாயிரம். சிறப்புப்பாயிரம் இருவகைப்படும். எல்லா நூல்களுக்கும் பொதுவாகப் பொருந்துவது பொதுப்பாயிரம் ஒரு குறிப்பிட்ட நூலுக்கு மட்டும் சிறப்பாகப் பொருந்துவது சிறப்புப் பாயிரம். இப்பாயிரம் வேறு பெயர்களாலும் அழைக்கப்பெறும்.

**பாயிரத்தின் வேறு பெயர்கள்**

***முகவுரை பதிகம் அணிந்துரை நூன்முகம்***
***புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்***

முகவுரை பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை புனைந்துரை ஈறாகிய ஏழும் பாயிரத்தின் வேறு பெயர்களாகும்.

**பாயிரத்தின் வகைகள்**

***பாயிரம் பொதுச் சிறப்பு எனஇரு பாற்றே.***

பாயிரம் பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் என இருவகைப்படும்.

**பொதுப்பாயிரத்தின் இலக்கணம்**

***நூலே நுவல்வோன் நுவலும் திறனே***
***கொள்வோன் கோடல் கூற்றாம் ஐந்தும்***
***எல்லா நூற்கும் இவைபொதுப் பாயிரம்.***

நூலினது இலக்கணம், நூலைக் கற்பிக்கும் ஆசிரியரின் இலக்கணம், ஆசிரியர் மாணவர்க்குப் பாடம் சொல்லும் முறை, கற்கும் மாணாக்கரின் இயல்பு, மாணவர் பாடம் கேட்கும் முறை ஆகிய ஐந்தையும் கூறுவது பொதுப்பாயிரம். இவ்ஐந்தும் எல்லா நூல்களுக்கும் பொதுவானவை. எனவே இவற்றை விளக்கமுற உணர்த்துவது பொதுப்பாயிரம் ஆகும்.

**நூல்**

நூல் என்பது பொதுவாக எல்லா வகை இலக்கண இலக்கியங்களையும் உணர்த்தும் பொதுச் சொல் ஆகும். ஆயினும் இவ்விடத்தில் நூல் என்பது இலக்கண நூலையே சிறப்பாகச் சுட்டுகிறது.

## நூலின் இலக்கணம்

*நூலின் இயல்பே நுவலின் ஓர்இரு*
*பாயிரம் தோற்றி மும்மையின் ஒன்றாய்*
*நாற்பொருள் பயத்தோடு எழுமதம் தழுவி*
*ஐஇரு குற்றமும் அகற்றி அம் மாட்சியோடு*
*எண்நான்கு உத்தியின் ஒத்துப் படலம்*
*என்னும் உறுப்பினில் சூத்திரம் காண்டிகை*
*விருத்தி ஆகும் விகற்பநடை பெறுமே.*

நூலானது பொது, சிறப்பு ஆகிய இரு வகைப் பாயிரங்களையும் பெற்றிருத்தல், முதல், வழி, சார்பு என்ற பொருளுடன் ஒன்றாய் அமைதல், அறம் முதலான நாற் பொருள்களைப் பயத்தல், எழுவகை மதங்களைத் தழுவி நிற்றல், பத்துக் குற்றங்களை நீங்கி நிற்றல், பத்து அழகுகளைப் பெற்றுத் திகழ்தல், முப்பத்திரண்டு உத்திகளைப் பொருந்தி நிற்றல், ஒத்து (இயல்), படலம் (அதிகாரம்) என்னும் உறுப்புக்களைப் பெற்று இருத்தல், சூத்திர (நூற்பா) யாப்பால் இயற்றப்பட்டிருத்தல். காண்டிகை, விருத்தி உரைகளைப் பெற்றதாகவோ, பெறத்தக்கதாகவோ, அமைந்து இருத்தல் எனக் கூறப்பட்ட இப்பதின்மூன்று வேறுபட்ட நடைகளைப் பெற்று வருதல் வேண்டும்.

## நூல்களின் வகைகள்

*முதல் வழி சார்பு" என நூல்மூன்று ஆகும்.*

முதல்நூல், வழிநூல், சார்புநூல் என நூல் மூன்று வகைப்படும்.

## முதல் நூல்

*அவற்றுள்*
*வினையின் நீங்கி விளங்கிய அறிவின்*
*முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்.*

இயல்பாகவே நல்வினை, தீவினைகளில் இருந்து நீங்கியவன் இறைவன். அவன் தெளிந்த அறிவுடையவன். அவ்இறைவனால் செய்யப்பட்ட நூல் முதல் நூல் என்று சிறப்பிக்கப் பெறுவதாகும். இறைவனே அன்றி இறைவனுடைய அருள் பெற்ற சான்றோர்களால் இயற்றப் பெறுவதும் முதல் நூலாகவே கருதப்பெறும்.

**வழிநூல்**

***முன்னோர் நூலின் முடிபுஒருங்கு ஒத்துப்***
***பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி***
***அழியா மரபினது வழிநூல் ஆகும்.***

முன்னோர் இயற்றிய நூல்களின் முடிபுகளைப் பெரிதும் தழுவி நின்று நூல் செய்வோன், காலத்திற்கு ஏற்ற மாற்றங்களைத் தம் நூலுள் இணைத்து எல்லாராலும் போற்றப்பெறும் பெருமை உடையதாகச் செய்வது வழிநூல் ஆகும்.

**சார்பு நூல்**

***இருவர் நூற்கும் ஒருசிறை தொடங்கித்***
***திரிபுவேறு உடையது புடைநூல் ஆகும்.***

முதல் நூல், வழிநூல் ஆகியவற்றின் முடிபைச் சிறுபான்மை ஒத்தும் பெரும்பான்மை பொருந்தாமல் வேறுபட்டும் நிற்பது புடை நூலாகும். இதனைச் சார்புநூல் என்றும் கூறுவர். (எ.டு) முதல்நூல் - அகத்தியம்; வழிநூல் - தொல்காப்பியம்; சார்பு நூல் – நன்னூல்.

**வழிநூல் சார்பு நூல்களுக்குச் சிறப்பு விதி**

***முன்னோர் மொழிபொருளே அன்றி அவர் மொழியும்***
***பொன்னேபோல் போற்றுவம் என்பதற்கும் - முன்னோரின்***
***வேறுநூல் செய்துமெனும் மேற்கோளில் என்பதற்கும்***
***கூறுபழஞ்சூத்திரத்தின் கோள்.***

முன்னோர் மொழிந்த பொருளையேயன்றி, அவர்களின் சொல்லையும் பொன்னைப்போல போற்றிக் காத்துக் கொள்வோம் என்பதற்கு அடையாளமாகவும் முன்னோர் நூலையே சொல்லாமல் வழி நூல், சார்பு இல்லை என்று சொல்லும் குற்றம் நீங்குவதற்காகவும் அவர்கள் சொல்லிய பழஞ்சூத்திரங்களையும் சிலவிடங்களில் எடுத்துச் சொல்வாய்.

## நற்பொருட் பயன்

***அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற் பயனே***

அறமும் பொருளும் இன்பமும் வீடும் ஆகிய இந்நான்கு உறுதிப் பொருள்களையும் அடைவது, நூலால் அடையும் பயன் ஆகும்.

## குற்றங்கள்

எச்செயலையும் குற்றமின்றிச் செய்தலே நன்மை பயப்பதாகும். பலரும் கற்பதற்குரிய நூலைக் குற்றமின்றி அமைப்பதே முறையானதாகும். அதுவே நூல் நெடுங்காலம் நிலைப்பதற்குக் காரணமாகவும் அமையும். நூலில் இடம்பெறக் கூடாத குற்றங்கள் பத்தாக வரையறை செய்யப்பட்டுள்ளன.

## பத்துக் குற்றங்கள்

***குன்றக் கூறல் மிகைபடக் கூறல்***
***கூறியது கூறல் மாறுகொளக் கூறல்***
***வழூஉச்சொல் புணர்த்தல் மயங்க வைத்தல்***
***வெற்றெனத் தொடுத்தல் மற்றொன்று விரித்தல்***
***சென்றுதேய்ந்து இறுதல் நின்றுபயன் இன்மை***
***என்றுஇவை ஈர்ஐங் குற்றம் நூற்கே.***

குன்றக்கூறல் முதலாகக் கூறப்படுவன பத்தும் நூலில் பொருந்தக் கூடாத குற்றங்களாகும். அவை. பொருளை விளக்க வேண்டிய இடத்தில் சுருக்கிக் கூறுதல், எளிதில் விளங்குவனவற்றிற்கு விரித்துப் பொருள் கூறுதல், கூறியதைப் பயனின்றித் திரும்பக் கூறுதல், ஒன்றை ஏற்புடையது எனக் கூறிப் பின்னர் அதையே மறுத்துக் கூறுதல், குற்றமுடைய சொற்களைச் சேர்த்தல், இதற்குப் பொருள் இதுவோ அதுவோ எனத் தடுமாறும்படி கூறுதல், தேவையற்ற செய்திகளைக் கூறுதல், சொல்லத் தொடங்கியதைப் பாதியில் விட்டு வேறொரு பொருள் பற்றிப் பேசுதல், தொடக்கத்தைச் சிறப்பாக அமைத்துப் பின் சிறப்பின்றி முடித்தல், சொற்கள் இருந்தும் எவ்விதப் பயனும் இல்லாதிருத்தல் என்பனவாகும்.

## அழகுகள்

ஒரு நூலுக்குச் சிறப்பைத் தருவனவற்றுள் முதன்மை பெறுவது அழகாகும். இது சொல்லால் அமைக்கப் பெறுவதாகும். அவ்அழகு பத்தாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளது.

## பத்து அழகுகள்

*சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்*
*நவின்றோர்க்கு இனிமை நன்மொழி புணர்த்தல்*
*ஓசை உடைமை ஆழமுடைத்து ஆதல்*
*முறையின் வைப்பே உலகம்மலை யாமை*
*விழுமியது பயத்தல் விளங்கு உதாரணத்த(து)*
*ஆகுதல் நூலிற்கு அழகுஎனும் பத்தே.*

சுருங்கச் சொல்லல் முதலாகக் கூறப்பட்ட பத்தும் நூலிற்குரிய அழகுகளாகும். அவை சொற்களைத் தேவையின்றி விரிக்காமல் சுருக்கிக் கூறுதல், சுருங்கச் சொல்லினும் தெளிவுபடக் கூறுதல், கற்போர்க்கு இனிமை தரும் சொற்களைக் கூறுதல், குற்றமற்ற சொற்களைச் சேர்த்தல், இடத்திற்கு ஏற்ற சந்த நயம் புலப்பட அமைத்தல், கற்கக் கற்க ஆழ்ந்த கருத்தை உடையதாதல், எழுத்து, சொல், பொருள், இயல், அதிகாரம் போன்றவற்றைக் காரண, காரிய முறைப்படி அமைத்தல், சான்றோர் வழக்கோடு மாறுபாடு இன்றிக் கூறுதல், சிறந்த பொருளை வெளிப்படுத்துதல், எடுத்துக்காட்டுக்களைக் கொண்டு பொருளை விளங்க வைத்தல் என்பனவாகும். இப்பத்தும் நூலில் இன்றியமையாது பொருந்த வேண்டிய அழகுகள் ஆகும்.

## உத்திகள்

யுக்தி என்னும் சமற்கிருதச் சொல் தமிழில் உத்தி என வழங்கப்படுகிறது. இதற்குத் தமிழில் பொருந்தும் முறை என்பது பொருளாகும். இது நூலாசிரியரின் அறிவு நுட்பத்தால் அமைவதாகும். ஒரு கருத்தை வெளிப்படுத்த நூலாசிரியன் கடைப்பிடிக்கும் முறையே உத்தி எனவும் கூறப்படுகிறது. இது முப்பத்திரண்டாகப் பாகுபடுத்தப் பட்டுள்ளது.

## முப்பத்திரண்டு உத்திகள்

*நுதலிப் புகுதல் ஒத்துமுறை வைப்பே*
*தொகுத்துச் சுட்டல் வகுத்துக் காட்டல்*
*முடித்துக் காட்டல் முடிவுஇடம் கூறல்*
*தான்எடுத்து மொழிதல் பிறன்கோள் கூறல்*
*சொற்பொருள் விரித்தல் தொடர்ச்சொல் புணர்த்தல்*
*இரட்டுற மொழிதல் ஏதுவின் முடித்தல்*

*ஒப்பின் முடித்தல் மாட்டுஉறிந்து ஒழுகல்*
*இறந்தது விலக்கல் எதிரது போற்றல்*
*முன்மொழிந்து கோடல் பின்னது நிறுத்தல்*
*விகற்பத்தின் முடித்தல் முடிந்தது முடித்தல்*
*உரைத்தும் என்றல் உரைத்தாம் என்றல்*
*ஒருதலை துணிதல் எடுத்துக் காட்டல்*
*எடுத்த மொழியின் எய்த வைத்தல்*
*இன்னது அல்லது இதுவென மொழிதல்*
*எஞ்சிய சொல்லின் எய்தக் கூறல்*
*பிறநூல் முடிந்தது தான் உடன் படுதல்*
*தன்குறி வழக்கம் மிகஎடுத்து உரைத்தல்*
*சொல்லின் முடிவின் அப்பொருள் முடித்தல்*
*ஒன்றின முடித்தல் தன்னினம் முடித்தல்*
*உய்த்து உணர வைப்பு என உத்திஎண் நான்கே.*

நுதலிப் புகுதல் முதலாகக் கூறப்பட்ட முப்பத்திரண்டும் உத்திகளாகும். அவை நான் இதனைச் சொல்லப் போகின்றேன் எனக் கூறித் தொடங்குதல், இயல்களைக் காரண, காரிய முறைப்படி அமைத்தல், பல பொருள்களையும் ஓரிடத்தில் தொகுத்துச் சொல்லுதல், தொகுத்துக் கூறியதை வேறு வேறாக வகுத்துக் காட்டுதல், விரித்துச் சொன்ன பொருள்களை முடித்துக் காட்டுதல், சொல்லும் இலக்கணத்திற்குரிய இலக்கியம் தோன்றும் இடத்தைக் கூறுதல், முன்னோரின் கூற்றுக்களை அப்படியே எடுத்துக் காட்டுதல், பிறர் கொள்கைகளைக் கூறுதல், சொல்லின் பொருள் தெளிவுபட விளங்குமாறு விரித்துரைத்தல், ஒன்றற்கொன்று தொடர்புடைய சொற்களை ஓரிடத்தில் கூறுதல், இரண்டு பொருள்படச் சொல்லுதல், முன்னர்க் காரணம் கூறாமல் கூறியவற்றைப் பின்னர்க் காரணம் காட்டி நிறுவுதல், ஒன்றற்குரிய இலக்கணத்தைப் பொருந்தும் பிறவற்றிற்கும் இலக்கணமாகக் கூறுதல், ஒன்றற்குக் கூறிய இலக்கணம், அதனைப் பெறுதற்குரிய மற்றவற்றோடு தொடர்புபடுத்திக் கூறுதல், வழக்கு இழந்தவற்றை நீக்குதல், புதிதாய்த் தோன்றியதனைத் தழுவி இலக்கணம் அமைத்தல், பின்பு எடுத்து ஆள்வதற்கு உரிய ஒன்றை முன்னரே கூறுதல், பின்னர் எடுத்தாளுவதற்கு ஏதுவாக ஒன்றைப் பொருத்தம் கருதிப் பின்னே வைத்தல், மாறுபட வருவனவற்றை வேறுவேறாக முடித்துக் காட்டுதல், வேறு வேறாக முடிந்ததைப் பொது இலக்கணத்தால் தொகுத்துக் கூறுதல், இவ்விதியைப்

பின்பு சொல்வோம் எனக் கூறுதல், இவ்விதியை முன்னர்ச் சொன்னோம் எனக் கூறுதல், மாறுபட்ட இருவரின் கொள்கைகளுள் ஒன்றைத் துணிந்து ஏற்றுக் கொள்ளல், தான் கூறிய இலக்கணத்திற்கு உரிய இலக்கியத்தைத் தானே எடுத்துக் காட்டல் தான் சொல்லும் இலக்கணத்தைத் தான் எடுத்துக் காட்டிய இலக்கியத்தில் பொருந்தும்படி அமைத்துக் காட்டுதல், ஐயம் தோன்றிய இடத்தில் அவ்ஐயத்தை நீக்கும் முகமாக இதுதான் எனத் துணிந்து சொல்லுதல், சொல்லியவற்றைக் கொண்டு சொல்லப்படாதவற்றிற்கும் இலக்கணம் பொருந்தக் கூறுதல், பிற நூல்களின் முடிவுகளை ஏற்றுக் கொள்ளுதல், தன்னால் புதிதாக எடுத்துரைக்கப்பட்டதைப் பல இடங்களிலும் கூறுதல், சொல் முடிந்த இடத்திலேயே அதன் பொருளையும் முடிவு பெறுமாறு அமைத்துக் காட்டுதல், ஒன்றற்குக் கூறப்பட்ட விதி அதனோடு ஒற்றுமைப்பட்டதற்கும் அவற்றோடு இனமானவற்றிற்கும் பொருந்தும்படி அமைத்தல், சில விதிகளைக் கொண்டு ஒரு பொருளை ஆராய்ந்து அறியும்படி அமைத்துக் காட்டுதல் என்பன.

**உத்தி**

***நூற்பொருள் வழக்கொடு வாய்ப்பக் காட்டி***
***ஏற்புழி அறிந்து இதற்கு இவ்வகை யாம் எனத்***
***தகும்வகை செலுத்துதல் தந்திர வுத்தி***

ஒரு நூலால் உணர்த்தப்படும் பொருளை, நூல் வழக்கோடும் உலக வழக்கோடும் பொருந்துமாறு காண்பித்து ஏற்குமிடத்தை அறிந்து இவ்விடத்தில் இவ்வாறு சொல்லுதல் பொருந்தும் என நினைத்துத் தக்கபடியாகச் செலுத்துதல் தந்திரவுத்தி ஆகும்.

**நூலின் உறுப்புக்கள்**

உலகத்துப் பொருள்கள் ஒவ்வொன்றும் பல உறுப்புக்களை உடையதாய்க் காணப்படும். அதுபோல நூலும் பல உறுப்புக்களை உடையது. அவை ஒத்து, படலம் என்பன. ஒத்து என்பது இயலையும் படலம் என்பது அதிகாரத்தையும் குறிப்பனவாகும்.

**ஒத்து**

***நேரின மணியை நிரல்பட வைத்து ஆங்(கு)***
***ஓரினப் பொருளை ஒருவழி வைப்ப(து)***
***ஒத்துஎன மொழிப உயர்மொழிப் புலவர்.***

ஒரு சாதி மணிகளை ஒரு வரிசையாகப் பதித்து வைப்பது உலக இயல்பாகும். அதுபோல ஒரு சாதியாய் உள்ள பொருள்களை ஒன்றுபடக் கூறுவது ஒத்து என்னும் உறுப்பாகும் என்று இலக்கணம் அறிந்த புலவர்கள் கூறுவர்.

அதாவது, ஓரினப் பொருளைப் பற்றிப் பேசும் பல சூத்திரங்கள் சேர்ந்தது ஒத்து ஆகும். எழுத்தியலில் எழுத்துக்களைப் பற்றிய பல சூத்திரங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**படலம்**

***ஒருநெறி இன்றி விரவிய பொருளால்***
***பொதுமொழி தொடரின் அதுபடலம் ஆகும்.***

ஒரு வகையாய் அமையாது கலப்புற்ற பல்வகைப் பொருள்களைப் பொது வகையால் தொகுத்து அமைப்பது படலமாகும். அதாவது, இனப்பொருள்கள் தனித்தனியாக அமைந்த பல இயல்கள் சேர்ந்தது படலமாகும். எழுத்து, பதம், புணர்ச்சி போன்ற தனித்தனி இயல்கள் பொது வகையால் எழுத்ததிகாரமாயின.

**சூத்திரம்**

***சில்வகை எழுத்தில் பல்வகைப் பொருளைச்***
***செவ்வன் ஆடியில் செறித்து இனிது விளக்கித்***
***திட்ப நுட்பம் சிறந்தன சூத்திரம்***

பெரிய உருவங்களின் நிழலைத் தன்னுள்ளே செவ்வையாக அடக்கி இனிதாகக் காட்டும் சிறிய கண்ணாடிபோல, சிலவகை எழுத்துக்களால் ஆகிய வாக்கியத்தில் பலவகைப்பட்ட விரிந்த பொருள்களை, செவ்வையாக அடக்கி இனிதாக அப்பொருளை விளங்கச் செய்து குற்றமில்லாமையால் சொல்வலிமை பொருள் வலிமைகளும் ஆழமுடைமையால் பொருள் நுணுக்கங்களும் சிறந்து வருவன சூத்திரங்கள் ஆகும்.

**சூத்திர நிலை**

***ஆற்றொழுக்கு அரிமா நோக்கம் தவளைப்***
***பாய்த்துப் பருந்தின்வீழ்வு அன்னசூத் திரநிலை***

சூத்திரங்கள் ஒன்றோடு ஒன்று பொருளால் தொடாந்து நிற்கும் நிலைகள், இடையறாது ஒருமுகமாக ஓடுகின்ற ஆற்று நீரோட்டத்தையும், முன்னும் பின்னும் பார்க்கின்ற சிங்கத்தின் பார்வையையும், இடை இடையே இடம் விட்டுக் குதித்துச் செல்கின்ற தவளையின் பாய்ச்சலையும், நெடுந்தூரத்திலிருந்து ஒன்றைக் கவர்ந்து போவதற்குத் தலைகீழாக வீழ்கின்ற பருந்தின் வீழ்ச்சியையும் போல்வன.

### சூத்திர வகை

*பிண்டம் தொகைவகை குறியே செய்கை*
*கொண்டியல் புறனடைக் கூற்றன சூத்திரம்*

சூத்திரங்கள், பிண்ட சூத்திரமும், தொகைச்சூத்திரமும், வகைச் சூத்திரமும், குறிச்சூத்திரமும், செய்கைச் சூத்திரமும் இவைகளை ஏற்றுக் கொண்டு இவைகளின் புறத்து அடையாய் வரும் புறனடைச் சூத்திரமும் என ஆறு பிரிவுகளை உடையன.

### நூல் என்னும் பெயர்க்குக் காரணம்

தன்சொற்கள் பஞ்சாகவும், செய்யுள் இழையாகவும், செவ்விய சொற்களை அறிந்த புலவன் நூற்கின்ற பெண்ணாகவும், குறைவில்லாத வாய் கையாகவும், அறிவு நூற்கும் கதிராகவும், குற்றமில்லாத கல்விநூல் முடியும் வழி இதுவாகும்.

*உரத்தின் வளம்பெருக்கி உள்ளிய தீமைப்*
*புரத்தின் வளமுருக்கிப் பொல்லா – மரத்தின்*
*கனக்கோட்டம் தீர்க்குநூல் அஃதேபோல் மாந்தர்*
*மனக்கோட்டம் தீர்க்குநூல் மாண்பு.*

உடலில் இருக்கின்ற அறிவு வளத்தை வளரச்செய்து நினைக்கப்பட்ட தீமையாகிய அறியாமையின் மிகுதியைக் கெடுத்து, வளைதலால் கோட்ட மரத்தினது மிக்க கோண்லைப் போக்குகின்ற எற்று நூலின் தன்மையைப் போலவே மனிதருடைய மனத்தின் கோணலைப் போக்குவது கல்வி நூலின் சிறப்பாகும்.

### நூலைக் கற்பிக்கும் ஆசிரியனது வரலாறு

ஆசிரியர் என்னும் சொல்லுக்குக் குற்றம் களைபவர் (ஆசு-குற்றம், இரிதல்-நீக்குதல்) என்பது பொருளாகும். தான் குற்றமற்றவராக நின்று தன்னிடம் கற்க வருவோரைக் குற்றமற்றவராக்கும் பணியைச் செய்பவரே ஆசிரியர். இவரை நன்னூலார் நுவல்லோன் எனக் குறிப்பிடுகின்றார். இதற்குச் சொல்லுவோன் என்பது பொருளாகும். நன்னூலார் ஆசிரியரை நூலுரை ஆசிரியர், ஆசிரியர் ஆகாதார் என இருவகையினராகக் காட்டுகிறார்.

### நல்லாசிரியரின் இலக்கணம்

*குலன் அருள் தெய்வம் கொள்கை மேன்மை*
*கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை*

*நிலம்மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்*
*உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும்*
*அமைபவன் நூல்உரை யாசிரி யன்னே.*

நற்குடிப் பிறத்தல் முதலாகிய குணங்களைப் பெற்றவனே நூலை உரைக்கும் ஆசிரியன் ஆவான். நற்குடிப்பிறப்பு, இரக்க உணர்வு, தெய்வ வழிபாடு, பெருந்தன்மை, பல நூல்களைக் கற்றுத் தெளிந்த அறிவு, சுவைபடவும் தெளிவாகவும் விளக்கும் சொல்லாற்றல், நிலம், மலை, நிறைகோல், மலர் என்பவற்றை ஒத்த சிறந்த குணங்கள் உடைமை, காலத்திற்கு ஏற்பச் சிந்திக்கும் ஆற்றல், இவற்றைப் போன்ற பிற உயர்ந்த குணங்களையும் பெற்றிருத்தல். ஆசிரியர்க்கு நிலம், மலை, நிறைகோல், மலர் ஆகியவை உவமைகளாகக் காட்டப்பட்டுள்ளன.

**நிலத்தின் மாண்புகள்**

*தெரிவரும் பெருமையும் திண்மையும் பொறையும்*
*பருவ முயற்சி அளவிற் பயத்தலும்*
*மருவிய நன்னில மாண்பா கும்மே.*

பிறரால் அறியப்படாத உருவப்பரப்பின் பெருமையும் தன்மேல் பொருந்திய சுமைகளால் கலங்காத வலிமையும் தன்னைச் சார்ந்த மக்கள் தோண்டுதல் முதலிய குற்றங்களைச் செய்தாலும் பொறுக்கின்ற பொறுமையும், பருவ காலத்தில் உழவர் செய்யும் முயற்சியின் அளவுக்கு ஏற்ப அவர்களுக்குப் பயனைத் தருதலும் நல்ல நிலத்தின் சிறந்த குணங்கள் ஆகும்.

**மலையின் மாண்புகள்**

*அளக்க லாகா அளவும் பொருளும்*
*துளக்க லாகா நிலையும் தோற்றமும்*
*வறப்பினும் வளம்தரும் வண்மையும் மலைக்கே*

அளவிட முடியாத தன் வடிவத்தின் அளவும், அளவிட முடியாத பல்வேறு பொருளும், எத்தகைய வலிமையுடையவராலும் அசைக்க இயலாத வடிவத்தின் நிலையும், நெடுந் தொலைவில் உள்ளவராலும் காணப்படும் உயர்ச்சியும், மழை பெய்யாமல் வறண்ட காலத்திலும் தன்னைச் சேர்ந்த உயிர்களுக்கு நீர்வளம் கொடுக்கும் கொடையும் மலைக்குள்ள குணங்கள் ஆகும்.

### நிறைகோல் (துராசு) மாண்புகள்

*ஐயம் தீரப் பொருளை உணர்த்தலும்*
*மெய்ந்நடு நிலையும் மிகுநிறை கோற்கே.*

நிறுக்கப்பட்ட பண்டத்தின் அளவை ஐயம் நீங்கக் காட்டுதலும், உண்மை பெறத் தான் இரு தட்டுகளுக்கும் நடுவே நிற்றலும் ஆகியவை தராசுக்கோலின் குணங்களாக மிகும்.

### மலரின் மாண்புகள்

*மங்கலம் ஆகி இன்றி யமையாது*
*யாவரும் மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்*
*பொழுதின் முகமலர் உடையது பூவே.*

நல்ல நிகழ்ச்சிகளுக்கு உரிய பொருளாகி, யாதொரு செயலும் தான் இன்றி முடியாததாகி, கண்டவர் அனைவரும் மகிழ்ந்து தன்னைச் சூடிக்கொள்ள மென்மையான குணம் உடையதாகி மலர்வதற்கு உரிய காலத்திலே இதழ் விரிதலை உடையது பூவாகும்.

### ஆசிரியர் ஆகாதாரின் இயல்பு

*மொழிகுணம் இன்மையும் இழிகுண இயல்பும்*
*அழுக்காறு அவா வஞ்சம் அச்சம் ஆடலும்*
*கழற்குடம் மடற்பனை பருத்திக் குண்டிகை*
*முடத்தெங்கு ஒப்புஎன முரண்கொள் சிந்தையும்*
*உடையோர் இலர் ஆசிரியர் ஆகுதலே.*

பாடஞ்சொல்லும் குணமில்லாமையும், இழிந்த குணமாகிய இயல்பும்,மாணாக்கருக்கு வரும் கல்வியைக் குறித்துத் தான் கொள்ளும் பொறாமையும், பொருளின்மேல் மிகுதியாகக் கொள்ளும் ஆசையும். மெய்ப்பொருளை மறைத்துப் பொய்ப்பொருளைக் கூறி வஞ்சித்தலும், கேட்போருக்கு அச்சம் உண்டாகப் பேசுதலும், கழற்குடமும் மடற்பனையும் பருத்திக் குண்டிகையும் முடத்தெங்கும் ஒப்பு என்று கூறும்படி முரண்பட்ட கருத்தும் உடையவர்கள் கற்பிக்கும் ஆசிரியர் ஆகார்.

### கழற்குடத்தின் தன்மை

*பெய்தமுறை அன்றிப் பிறழ உடன்தரும்*
*செய்தி கழற்பெய் குடத்தின் சீரே.*

தன்னுள்ளே போட்ட முறைப்படி இல்லாமல் முன் போடப்பட்ட வற்றையும், பின் போடப்பட்டவற்றையும் அம்முறை மாறிப்போகும்மாறு. கொட்டும்போது விரைவிலே தன்னுள்ளே கொண்ட கழற் காய்களைக் கொடுக்கும் செயல், கழற்காய் போட்ட குடத்தின் இயல்பாம்.

**மடற்பனையின் தன்மை**

***தானே தரக்கொளின் அன்றித் தன்பால்***
***மேவிக் கொளக்கொடா இடத்தது மடற்பனை.***

தானே தன்பழங்களைக் கொடுக்கக் கொண்டால் அல்லது ஒருவர் தன்னிடம் நெருங்கி வந்து பறித்துக் கொள்ள இடங்கொடுக்காதது, மடற் பனையின் இயல்பாம்.

**பருத்திக் குண்டிகையின் நன்மை**

***அரிதிற் பெயக்கொண்டு அப்பொருள் தான்பிறர்க்கு***
***எளிது ஈ வில்லது பருத்திக் குண்டிகை.***

பஞ்சை உள்ளே கொண்டபோதும் மிக முயன்று சிறிது சிறிதாக அசைக்கத் தன்னுள்ளே கொண்டு, அப்பஞ்சினைக் கொடுக்கும்போதும் தான் பிறருக்கு எளிதில் கொடுக்காதது, பருத்திக் குண்டிகையின் இயல்பாம்.

**முடத்தெங்கின் தன்மை**

***பல்வகை உதவி வழிபடு பண்பின்***
***அல்லோர்க்கு அளிக்கும் அதுமுடத் தெங்கே.***

நீர்பாய்ச்சுதல் முதலான பலவகை உதவிகளையும் செய்து தன்னை வழிபாடு செய்கின்ற பண்பு இல்லாத பிறருக்குத் தன் காய்களைக் கொடுப்பது முடத்தெங்கின் இயல்பாம்.

**கற்பிக்கும் தன்மை**

ஆசிரியர் மாணவருக்குப் பாடத்தைச் சொல்லித் தரும் முறையே நுவலும் திறன் ஆகும்.

***ஈதல் இயல்பே இயம்பும் காலைக்***
***காலமும் இடனும் வாலிதின் நோக்கிச்***
***சிறிந்துழி இருந்துதன் தெய்வம் வாழ்த்தி***
***உரைக்கப் படும்பொருள் உள்ளத்து அமைத்து***
***விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து***

***கொள்வோன் கொள்வகை அறிந்துஅவன் உளங்கொளக்***
***கோட்டமில் மனத்தின்நூல் கொடுத்தல் என்ப.***

உரிய இடத்தையும் உரிய காலத்தையும் தேர்ந்தெடுத்தல் முதலாக அமைவதே கற்பிக்கும் திறனாகும். நல்ல இடத்தையும் ஏற்ற காலத்தையும் தேர்ந்தெடுத்தல், தான் மாணவர்களைக் காணும்படியாகவும் தன்னை மாணவர்கள் காணும்படியாகவும் இடத்தில் இருத்தல், கடவுளைத் தொழுத பின்னரே கற்பிக்கத் தொடங்குதல், கற்பிக்கப் போகும்பொருளைத் தன் மனத்துள் முன்னரே நன்றாக நிறைத்து வைத்தல், பொறுமையுடனும், சினம் இல்லா இனிய முகத்துடனும், விருப்பத்தோடும் கற்பித்தல், மாணாக்கரின் மனநிலை அறிந்து அதற்கு ஏற்றபடி எடுத்துரைத்தல், தன்மனம் கோணாமலும், மாணவர் மனம் கோணாமலும் நூலைக் கற்றுக் கொடுத்தல் இவையே ஆசிரியர் மாணாக்கர்க்குக் கற்றுக் கொடுக்கும் முறையாகும்.

**மாணவர்**

மாணவர் என்பது இருபாற் பொதுச்சொல். இது ஆண், பெண் என்னும் இருவரையும் குறிக்கும். மாணவர் என்னும் சொல்லுக்கு மாண்புடையவர் என்பது பொருளாகும். மாணவனை நன்னூலார் கொள்வோன் எனக் குறிப்பிடுகின்றார். நூலை மனத்தில் ஏற்றுக் கொள்ளுகின்ற காரணத்தால் கொள்வோன் என்பது காரணப் பெயராகும்.

**மாணாக்கர் ஆதற்கு உரியவர்**

***தன்மகன் ஆசான் மகனே மன்மகன்***
***பொருள்நனி கொடுப்போன் வழிபடு வோனே***
***உரைகோ ளாளற்கு உரைப்பது நூலே.***

நூலைக் கற்பிக்கும் ஆசிரியர் தன் மகன், தன் ஆசிரியர் மகன், அரசன் மகன், மிகுந்த பொருளைக் கொடுப்பவன், தன்னை வழிபடுபவன், தான் உரைப்பதை விரைந்து ஏற்கும் அறிவுடையவன் ஆகியோர்க்கு நூலைக் கற்பிப்பர். எனவே இவ்அறு வகையினரும் மாணவர் ஆதற்குத் தகுதி உடையவர் ஆவர்.

**மாணாக்கர் வகைகள்**

நூலைக் கற்கும் மாணவர்கள் அவர்களின் கற்கும் தன்மைக்கு ஏற்ப மூவகையாகப் பாகுபடுத்தப்படுவர்.

***அன்னம் ஆவே மண்ணொடு கிளியே***
***இல்லிக் குடம் ஆடு எருமை நெய்யரி***
***அன்னர் தலைஇடை கடைமா ணாக்கர்.***

அன்னமும் பசுவும் போன்றவர் தலைமாணாக்கர்; மண்ணும் கிளியும் போன்றவர் இடை மாணாக்கர்; இல்லிக் குடம், ஆடு, எருமை. நெய்யரி போன்றவர் கடை மாணாக்கர்.

### பாடம் கேட்கும் முறை

ஆசிரியரிடத்து மாணவன் நூலைக் கற்றுக் கொள்ளுகின்ற முறையே பாடம் கேட்கும் முறையாகும்.இதனைப் பொதுப் பாயிரம் கோடற் கூற்றெனக் குறிக்கிறது.

*கோடன் மரபே கூறும் காலைப்*
*பொழுதொடு சென்று வழிபடல் முனியான்*
*குணத்தொடு பழகி அவன்குறிப் பிற்சார்ந்து*
*இருஎன இருந்து சொல்எனச் சொல்லிப்*
*பருகுவன் அன்ன ஆர்வத்தன் ஆகிச்*
*சித்திரப் பாவையின் அத்தக அடங்கிச்*
*செவிவா யாக நெஞ்சு களனாகக்*
*கேட்டவை கேட்டுஅவை விடாது உளத்து அமைத்துப்*
*போஎனப் போதல் என்மனார் புலவர்.*

பாடங்கேட்கும் இயல்பைக் கூறும்போது. தகுந்த காலத்திலே போய், வழிபாடு செய்வதில் வெறுப்பில்லாதவனாய், ஆசிரியரின் குணத்திற்கு ஏற்பப் பழகி, அவரது குறிப்பினை அறிந்து அக்குறிப்பின்படி சேர்ந்து, ‘இரு’ என்று ஆசிரியர் கூறியபின் இருந்து, “படி“ என்று ஆசிரியர் கூறிய பின் படித்து, நீர் வேட்கை கொண்டவனின் விருப்பம் போலக் கற்பதில் விருப்பம் உடையவனாகி, ஓவியத்தில் எழுதிய பாவை அசைவற்று இருத்தல் போல மனம் மொழி மெய்களால் அடங்கி, காதுகளையே கல்வியைப் பருகும் வாயாகவும், மனத்தையே கொள்ளும் இடமாகிய வயிறாகவும் கொண்டு, ஆசிரியரிடத்தில் பல முறையும் கேட்ட கருத்துக்களை மறந்துவிடாமல் உள்ளத்தில் பதியவைத்துக் கொண்டு, ஆசிரியர் ‘போ’ என்று சொல்லிய பின்னர்ப் போதல் என்று கூறுவர் புலவர்.

### நூல் பயிலும் முறைஸ

மாணவர் நூலைப் பயிலும் போது பின்பற்ற வேண்டிய கடமைகளைக் கூறுவது நூல் பயிலும் முறையாகும். இவ்வாறு செய்வதால் மாணாக்கர் நிறை புலமை பெறுவர்.ஸ

*நூல்பயில் இயல்பே நுவலின் வழக்குஅறிதல்*
*பாடம் போற்றல் கேட்டல் நினைத்தல்*

*ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல்*
*அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்*
*வினாதல் வினாயவை விடுத்தல் என்றுஇவை*
*கடனாக் கொளினே மடம்நனி இகக்கும்.*

நூலைக் கற்கும் மாணவன் உலக வழக்கையும், செய்யுள் வழக்கையும் அறிதல் மூல பாடத்தை உயர்வாகப் போற்றிப் பலகாலும் சிந்தித்தல், கேட்ட பாடத்தை நினைத்துப் பார்த்தல், மீண்டும் ஆசிரியனிடம் சென்று கேட்டவற்றைக் குறைதீரப் பதியும்படிக் கேட்டல், எப்போதும் கல்வியைப் பற்றிப் பேசும் மாணவர்களிடம் பழகுதல், தன் ஐயத்தைப் பிறரிடம் கூறித் தெளிவு பெறுதல், பிறரது ஐயத்தைத் தெளிவுபடுத்தல். இவ்ஏழு செயல்களையும் மாணவன் தனக்குரிய கடமைகளாகக் கொண்டு செயல்பட்டால் அவனது அறியாமை விரைவில் நீங்கும்.

**இருமுறை பாடம் கேட்டல்**

*ஒருகுறி கேட்போன் இருகால் கேட்பின்*
*பெருக நூலிற் பிழைபா டிலனே.*

ஒருமுறை பாடம் கேட்டவன் அப்பாடத்தை மறுமுறையும் கேட்க அந்நூலைப் பெரிதும் பிழையின்றி உணர்வான்.

**மும்முறை பாடம் கேட்டல்**

*முக்கால் கேட்பின் முறையறிந்து உரைக்கும்.*

மூன்று முறை பாடம் கேட்டால் (ஆசிரியன் கற்பித்த முறை அறிந்து) மாணவன் என்னும் நிலையிலிருந்து மாறி அப்பாடத்தை விளங்க உரைக்கும் ஆசிரியனாகும் தன்மை பெறுவான்.

**ஆசிரியரால் மாணவர் பெறும் அறிவு**

*ஆசான் உரைத்தது அமைவரக் கொளினும்*
*கால்கூறு அல்லது பற்றலன் ஆகும்.*

மாணவன் ஆசிரியன் கற்பித்தவற்றைத் தன் அறிவொடு பொருந்தக் கற்றான் ஆயினும் கால் பங்குப் புலமையை மட்டுமே பெறுவான்.

**முழுப் புலமை பெற வழி**

***அவ்வினை யாளரொடு பயில்வகை ஒருகால்***
***செவ்விதின் உரைப்ப அவ்விரு காலும்***
***மையறு புலமை மாண்புடைத்து ஆகும்.***

தன்னொடு கற்கும் மாணவருடன் பாடத்தைப் பற்றிப் பேசுவதன் வாயிலாக மேலும் கால் பங்குப் புலமை பெறுவான். எஞ்சிய அரைப்பங்கினைத் தன்னோடு கற்பவருக்கும் பிறருக்கும் எடுத்துரைப்பதால் பெறுவான்.

**நூல் யாப்பு**

யாப்பு என்பது பொதுவாக வெண்பா, ஆசிரியப்பா போன்ற செய்யுள் வகையைக் குறிக்கும். சிறப்புப் பாயிரத்துள் ஒன்றான யாப்பு என்பதற்குத் தொடர்ச்சி என்பது பொருளாகும். அவ்இரண்டற்கும் மாறானது நூல் யாப்பு. இது நூல் யாக்கப்படும் (செய்யப்படும்) முறையைக் குறிப்பதாகும். முதல் நூலை அடிப்படையாகக் கொண்டு வழிநூல் அமைத்தலைச் சிறப்பிப்பதே நூல் யாப்பாகும்.

**நூல் யாப்பின் வகைகள்**

***தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்ப்பு***
***எனத்தகும் நூல்யாப்பு ஈர்இரண்டு என்ப.***

விரிந்து கிடந்ததைத் தொகுத்துச் செய்தல், தொகுத்துக் கிடந்ததை விரித்துச் செய்தல், சிலவற்றைத் தொகுத்தும் சிலவற்றை விரித்தும் செய்தல், ஒரு மொழியிலுள்ள நூலை மற்றொரு மொழியில் பெயர்த்தல் என்று தகுந்த நூல் யாப்பு (நூல் செய்தல்) நான்கு வகைப்படும்.

**(எ.டு)**

1. தொகுத்தல் - புறப்பொருள் வெண்பாமாலை (பன்னிருபடலத்தைத் தொகுத்துச் செய்யப்பெற்ற நூல்),
2. விரித்தல் - பெரிய புராணம், (திருத்தொண்டத் தொகையை விரித்துப் பாடிய நூல்),
3. தொகைவிரி - நன்னூல் (தொல்காப்பியக் கருத்துக்களைத் தொகுத்தும் விரித்தும் கூறிய நூல்),
4. மொழிபெயர்ப்பு - கம்பராமாயணம்.

## அலகு - 2

# எழுத்ததிகாரம்

எழுத்துக்களின் இலக்கணத்தைக் கூறுகின்ற பல இயல்களைக் கொண்டதால் இது எழுத்ததிகாரம் எனப் பெயர் பெற்றது. இதில் எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என்னும் ஐந்து இயல்கள் உள்ளன. இவ்அதிகாரம் 202 நூற்பாக்களைக் கொண்டது.

### எழுத்தியல்

தனி நின்ற எழுத்துக்களின் பல் வகை இயல்புகளையும் தொகுத்து உணர்த்துவதால் இவ்வியல் எழுத்தியல் எனப் பெயர் பெற்றது. இவ்வியலில் அமைந்த நூற்பாக்கள் 62.

### கடவுள் வணக்கமும் அதிகாரமும்

***பூமலி அசோகின் புனைநிழல் அமர்ந்த***
***நான்முகன் தொழுதுநன்கு இயம்புவன் எழுத்தே.***

பூக்கள் நிறைந்து இருக்கும் அழகிய அசோக மரத்தினது நிழலில் வீற்றிருப்பவன் நான்கு திருமுகங்களை உடைய அருகதேவன். யான் அக்கடவுளை வழிபட்டு எழுத்திலக்கணத்தை நன்கு எடுத்துக் கூறுவன்.

### எழுத்திலக்கணத்தின் பகுதி

***எண் பெயர் முறை பிறப்பு உருவம் மாத்திரை***
***முதல் ஈறு இடைநிலை போலி என்றா***
***பதம் புணர்பு எனப்பன் னிருபாற் றதுவே***

எழுத்துக்களின் தொகை, பெயர், நிற்கும் முறை, பிறக்கும் முறை, வடிவம், ஒலிக்கும் அளவு, மொழிக்கு முதலில் நிற்பவை, ஈற்றில் நிற்பவை, இடையில் நிற்பவை, போலி, எழுத்துக்களால் ஆகும். பதம், மொழிகள் புணரும் புணர்ச்சி என்பன ஆகும். இவற்றுள் எண் முதலாகப் போலி ஈறாகிய பத்தும் அகத்திலக்கணம். எஞ்சியவை புறத்திலக்கணம்.

**எழுத்தின் விளக்கமும் வகையும்**

*மொழிமுதல் காரண மாம்அணுத் திரள்ஒலி*
*எழுத்து; அது முதல் சார்பு எனஇரு வகைத்தே.*

சொல்லுக்கு முதற்காரணமாகிய அணுக்கூட்டத்தின் காரியமாக வருகின்ற ஓசை (ஒலி) எழுத்தாகும். அவ்வெழுத்து முதல் எழுத்து, சார்பு எழுத்து என இருவகைப்படும்.

**முதல் எழுத்துக்கள்**

சொல்லுக்கு முதற்காரணமாய் நிற்கும் ஓசையே எழுத்தாகும். அது முதல் எழுத்து, சார்பெழுத்து என இருவகைப்படும். மொழிக்கு முதன்மையானதாகவும் அடிப்படையாகவும் சார்பெழுத்துக்கள் தோன்றுவதற்குக் காரணமாகவும் இருப்பதால் முதலெழுத்து என்பது காரணப் பெயராகும்.

**முதலெழுத்துக்களின் தொகை**

*உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே*

உயிரெழுத்துப் பன்னிரண்டு, மெய்யெழுத்துப் பதினெட்டு ஆகிய முப்பதும் முதல் எழுத்துக்களாகும்.

**சார்பெழுத்துக்கள்**

தானே தனித்து நில்லாமல் முதலெழுத்தைச் சார்ந்து வருவன சார்பெழுத்துக்கள். இவை மூன்று என்பது தொல்காப்பியம். ஆனால் நன்னூல் பத்து எனக் கூறுகின்றது.

**சார்பெழுத்துக்களின் வகைகள்**

*உயிர்மெய் ஆய்தம் உயிரளபு ஒற்றளபு*
*அ.்.கிய இஉ ஐஔ ம.்.கான்*
*தனிநிலை பத்தும் சார்பெழுத்து ஆகும்.*

உயிர்மெய், முற்றாய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் என்னும் பத்தும் சார்பெழுத்துக்களின் வகைகள் ஆகும். அ.்.கிய (குறுகிய) என்பதனை இ, உ, ஐ, ஔ, தனிநிலை அனைத்தொடும் கூட்டி உரைக்க வேண்டும்.

**சார்பெழுத்துக்களின் விரி**

*உயிர்மெய் இரட்டுநூற்று எட்டு; உயர் ஆய்தம்*
*எட்டு: உயிர் அளபுஎழு மூன்று; ஒற் றளபெடை*
*ஆறேழ்: அ.்.கும் இம்முப் பான்ஏழ்;*

***உகரம் ஆறாறு: ஐகான் மூன்றே:***
***ஔகான் ஒன்றே ம.்.கான் மூன்றே***
***ஆய்தம் இரண்டொடு சார்பெழுத்து உறுவிரி***
***ஒன்றொழி முந்நூற்று எழுபான் என்ப.***

உயிர்மெய் இருநூற்றுப் பதினாறு: முற்றாய்தம் எட்டு, உயிரளபெடை இருபத்தொன்று, ஒற்றளபெடை நாற்பத்திரண்டு; குற்றியலிகரம் முப்பத்தேழு; குற்றியலுகரம் முப்பத்தாறு; ஐகாரக்குறுக்கம் மூன்று; ஔகாரக் குறுக்கம் ஒன்று; மகரக் குறுக்கம் மூன்று: ஆய்தக்குறுக்கம் இரண்டுடன் சார்பெழுத்தின் விரி முந்நூற்றறுபத்தொன்பது என்று சொல்லுவர் புலவர்.

**பெயர்**

ஒரு பொருளுக்குப் பெய்து வழங்குவது பெயர் ஆகும். அப்பெயர் இடுகுறியாகவும் (Arbitrary noun) காரணம் பற்றியும் (Deritative noun) இடம்பெறும். காரணமின்றிக் கடவுளானும் அறிவுடையோரானும் தொன்றுதொட்டு இடப்பட்டது இடுகுறிப்பெயர். காரணத்தான் அமைவது காரணப்பெயர்.

**பெயரின் பொது இலக்கணம்**

***இடுகுறி காரணப் பெயர்பொதுச் சிறப்பின.***

பொருள்களுக்குக் காரணம் கருதியும் இடுகுறியாகவும் பெயரிடப் பெறும். அப்பெயர் பல பொருள்களுக்குப் பொதுப் பெயராயும், ஒரு பொருளுக்கே உரிய சிறப்புப் பெயராயும் வரும். உலகத்துப் பெயர்கள் எல்லாம் இவ்விரு முறையன்றி வேறு வகையாக வாரா. **(எ.டு.)**

மரம் - இடுகுறிப்பொதுப்பெயர் (காரணம் இல்லை)

பனை - இடுகுறிச் சிறப்புப் பெயர் (காரணம் இல்லை)

அணி - காரணப் பொதுப்பெயர் (அணிதல் காரணம்)

முடி - காரணச் சிறப்புப் பெயர் (முடியில் அணிவதால்)

இடுகுறியாகவும் காரணமாகவும் அமையும் பெயர்கள் இடுகுறி, காரணம் என்னும் இரண்டற்கும் பொதுவாக நிற்கும், இடுகுறிக்குச் சிறப்பாக அமையும், காரணத்திற்குச் சிறப்பாக அமையும் என இரட்டுற மொழிதல் என்னும் உத்தியால் மூன்றாகும். இம்மூன்றையும் வடநூலார் முறையே யோகம், ரூடி, யோகரூடி என்பர்.

இடுகுறிச் சிறப்புப் பெயர் - வேம்பு, பனை (ரூடி).

காரணச் சிறப்புப் பெயர் - வளையல், முடி (யோகம்)

காரண இடுகுறிப்பெயர் - முக்கண்ணன், நாற்காலி (யோகரூடி)

## எழுத்துக்களின் பெயர்

***அம்முதல் ஈர்ஆறு ஆவி கம்முதல்***
***மெய்ம்மூ வாறு என விளம்பினர் புலவர்.***

அகரம் முதலிய பன்னிரண்டு எழுத்துக்கள் உயிர் எழுத்துக்களாகும். ககரம் முதலிய பதினெட்டு எழுத்துக்கள் மெய் எழுத்துக்களாகும் என்று கற்று வல்லோர் கூறுவர்.

ஆவி (உயிர்) அ, ஆ, இ. ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ

உடம்பு (மெய்); க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற்,ன்

## குறில் எழுத்து

குறுகிய ஓசையை உடைய உயிரெழுத்துக்கள் குறில் எனவும் குற்றெழுத்து எனவும் கூறப்படும்.

***அவற்றுள்***
***அஇ உஎ ஒக்குறில் ஐந்தே.***

பன்னிரண்டு உயிரெழுத்துக்களுள் அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தும் குற்றெழுத்துக்களாகும்.

## நெடில் எழுத்து

நீண்ட ஓசையை உடைய எழுத்துக்கள் நெடில் எனவும் நெட்டெழுத்து எனவும் கூறப்பெறும்.

***ஆஈ ஊஏ ஐஓ ஔநெடில்,***

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் எழுத்துக்கள் ஏழும் நெட்டெழுத்துக்கள் ஆகும்.

## சுட்டெழுத்து

ஒன்றைச் சுட்டிக் காட்டுவதற்குப் பயன்படுவது சுட்டெழுத்தாகும்.

***அஇ உம்முதல் தனிவரின் சுட்டே.***

அ, இ, உ என்னும் எழுத்துக்கள் சொல்லின் முதலில் தனித்து வரின் அவை சுட்டெழுத்துக்கள் எனக் கூறப்பெறும்.

சொல்லில் இடம்பெறும் சுட்டெழுத்துக்களை அகச்சுட்டு, புறச்சுட்டு என்று பாகுபடுத்தலாம். சொல்லுக்குள்ளே பிரியாமல் அமைவது அகச்சுட்டு, சொல்லுக்குப் புறமாக அமைவது புறச்சுட்டாகும்.

அ - தொலைவில் உள்ள பொருளைச் சுட்டுவதால் சேய்மைச்சுட்டு

இ - அருகில் உள்ள பொருளைச் சுட்டுவதால் அண்மைச்சுட்டு

உ - இடைப்பட்ட பொருளைச் சுட்டுவதால் இடைமைச்சுட்டு

| **அகச்சுட்டு (பிரிக்க இயலாதவை)** | **புறச்சுட்டு (பிரிக்கக் கூடியவை)** |
|---|---|
| அவள் | அக்கொற்றன் (அ+கொற்றன்) |
| இவன் | இவ்விடு (இ+வீடு) |
| உவன் | உம்மணி (உ+ மணி) |

**வினா எழுத்து**

ஒன்றனை வினவுதற்குப் பயன்படுவது வினாவெழுத்தாகும்.

***எயா முதலும் ஆஓ ஈற்றும்***
***ஏஇரு வழியும் வினாவா கும்மே.***

ஏ, யா என்னும் இரண்டும் சொல்லுக்கு முதலில் வந்து வினாப்பொருளில் அமையும். ஆ. ஓ என்னும் இரண்டும் சொல்லுக்கு ஈற்றில் நின்று வினாப் பொருளைத் தரும். ஏ என்பது சொல்லுக்கு முன்னும் பின்னும் வந்து வினாப் பொருளைத் தரும்.

(எ.டு)

1. என்ன, யார் -மொழி முதல்
2. வந்தானா, வந்தானோ - மொழி இறுதி
3. ஏன்.மெய்தானே - மொழி முதலிலும் ஈற்றிலும் வந்தன.

இவ்வினாவையும் அகவினா, புறவினா என இரண்டாகப் பிரிக்கலாம்

**(எ.டு)**

எவன் - அகவினா; எக்காடு (எ+காடு) புறவினா.

## மூவினம்

### வல்லினம்

***வல்லினம் க ச ட த பற என ஆறே***

க ச ட த ப ற என்ற ஆறும் வல்லெழுத்துக்கள் ஆகும்.

### மெல்லினம்

***மெல்லினம் ங ஞ ண ந ம ன என ஆறே***

ங ஞ ண  ந ம ன என்ற ஆறும் மெல்லெழுத்துக்கள் ஆகும்.

### இடையினம்

***இடையினம் ய ர ல வ ழ ள என ஆறே***

ய ர ல வ ழ ள என்ற ஆறும் இடையெழுத்துக்கள் ஆகும்.

### இனவெழுத்து

***ஐ ஒள இ உச் செறிய முதலெழுத்து***
***இவ்விரண்டு ஓரினம் ஆய்வரல் முறையே***

இனம் இல்லாத ஐகார ஔகாரங்கள் இகர உகரங்களைத் தமக்கு இனமாகப் பொருத்தும். இவ்வாறு முதலெழுத்துக்கள் இரண்டிரண்டு ஓரினமாக வருதல் முறை ஆதலான் அவை இனவெழுத்து எனப் பெயர் பெறும்.

**(எ.டு)**

அ ஆ, இ ஈ, உ ஊ, எ ஏ, ஐ இ, ஒ ஓ, ஔ உ,

க ங, ச ஞ, ட ண, த ந, ப ம, ற ன, என்பன இன எழுத்துக்கள்.

### இனம் என்றதற்குக் காணரம்

***தானம் முயற்சி அளவு பொருள் வடிவு***
***ஆனஒன்று ஆதிஓர் புடையொப்பு இனமே.***

பிறப்பிடம், தொழில், மாத்திரை, பொருள், வடிவு ஆகிய இவற்றுள் ஒன்று முதலாக ஒருபுடை யொத்திருத்தல் இனம் என்பதற்குக் காரணம் ஆகும்.

(எ.டு) அது, ஆது, இங்கு, ஈங்கு என்பன. இவற்றில் பொருள் ஒற்றுமை காணலாம்.

### முறை

தமிழ் எழுத்துக்கள் ஒரு வரிசை முறையில் அமைக்கப்பட்டுள்ளன. அதுவே முறை எனக் கூறப்படும். உயிர் அகரம் முதல் ஔகாரம் ஈறாகவும் மெய் ககரம் முதல் னகரம்

ஈறாகவும் நிறுத்தப்பட்டுள்ளன. இவையே தமிழ் எழுத்துக்களின் நெடுங்கணக்கு எழுத்து முறையாகும்.

**முறைக்குரிய காரணம்**

***சிறப்பினும் இனத்தினும் செறிந்துஈண்டு அம்முதல்***
***நடத்தல் தானே முறையா கும்மே.***

சிறப்பின் காரணமாகவும் இனத்தின் காரணமாகவும் எழுத்துக்கள் ஒன்றன்பின் ஒன்றாய் நிறுத்தப்பட்டுள்ளன. அவற்றை அகரம் முதலாகத் தொன்று தொட்டு வழங்குதலே எழுத்துக்களின் முறையாகும்.

**பிறப்பு**

செவிப்புலனாகும் எழுத்துக்கள் பிறக்கும் முறையே பிறப்பு எனக் கூறப்படும். இப்பிறப்பு பொதுப்பிறப்பு, சிறப்புப்பிறப்பு என இரு வகைப்படும்.

**எழுத்துக்களின் பொதுப்பிறப்பு**

***நிறைஉயிர் முயற்சியின் உள்வளி துரப்ப***
***எழும்அணுத் திரள்உரம் கண்டம் உச்சி***
***மூக்கு உற்று இதழ்நா பல்அணத் தொழிலின்***
***வெவ்வேறு எழுத்தொலி ஆய்வரல் பிறப்பே.***

எவ்வாற்றாலும் குறைவின்றி நிறைந்த உயிரினது முயற்சியால் உள்ளே நின்ற காற்று எழுப்ப எழுகின்ற செவிப் புலனாகின்ற அணுக்கூட்டம் மார்பு, கழுத்து, தலை, மூக்கு ஆகிய நான்கு இடங்களிலும் பொருந்தி நிற்கும். அது உதடு, நாக்கு, பல், மேல் வாயாகிய அண்ணம் ஆகிய கருவிகளில் தொழில் முயற்சியால் வெவ்வேறு எழுத்தாகிய ஓசைகளாய்த் தோன்றும். அதுவே எழுத்துக்களில் பொதுப் பிறப்பாகும்.

**முதல் எழுத்துக்களின் பிறப்பிடம்**

***அவ்வழி***
***ஆவி இடைமை இடம்மிடறு ஆகும்***
***மேவும் மென்மைமூக்கு உரம்பெறும் வன்மை***

எழுத்துக்கள் பிறக்கும் இடத்து உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும், இடையின எழுத்துக்கள் ஆறும், கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கும். மெல்லினம் மூக்கை இடமாகப் பொருந்தும். வல்லினம் மார்பை இடமாகப் பெறும்.

### அ, ஆ பிறக்கும் முறை

***அவற்றுள்***
***முயற்சியுள் அஆ அங்காப்பு உடைய.***

உயிரெழுத்துக்களுள் அகர, ஆகாரம் ஆகிய இரண்டும் அண்ணத்தின் தொழிலாகிய வாயைத் திறக்கும் முயற்சியால் பிறப்பன.

### இ,ஈ,எ,ஏ,ஐ பிறக்கும் முறைஸ

***இஈ எஏ ஐஅங் காப்போடு***
***அண்பல் முதல்நா விளிம்புற வருமே.***

இ,ஈ, எ, ஏ, ஐ ஆகிய ஐந்து எழுத்துக்களும் வாயைத் திறக்கும் முயற்சியோடு மேல்வாய்ப்பல்லை நாவின் அடியோரம் பொருந்தப் பிறக்கும்.

### உ,ஊ,ஒ,ஓ,ஔ பிறக்கும் முறை

***உஊ ஒஓ ஔஇதழ் குவிவே.***

உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகிய ஐந்து எழுத்துக்களும் இதழைக் குவித்துக் கூறுகின்ற முயற்சியால் பிறப்பன.

### க, ங, ச, ஞ, ட, ண பிறக்கும் முறை

***கஙவும் சஞவும் டணவும் முதல்இடை***
***நுனிநா அண்ணம் உறமுறை வருமே.***

முதல் நா (நாவின் அடி) மேல்வாயின் அடிப்பகுதியைப் பொருந்த க், ங் என்பன பிறக்கும், நடு நாநடு அண்ணத்தைப் பொருந்த ச், ஞ் ஆகிய இரண்டும் பிறக்கும், நாவின் நுனி மேல்வாய் நுனியைப் பொருந்த ட், ண் பிறக்கும்.

### த, ந பிறக்கும் முறை

***அண்பல் அடிநா முடியுறத் தந வரும்.***

மேல்வாய்ப் பல்லின் அடியை நாவின் நுனி பொருந்த த். ந் ஆகிய எழுத்துக்கள் பிறக்கும்.

### ப,ம பிறக்கும் முறை

*மீகீழ் இதழ்உறப் பம்மப் பிறக்கும்.*

மேல் உதடும் கீழ் உதடும் பொருந்த ப், ம் என்னும் எழுத்துக்கள் பிறக்கும்.

### ய பிறக்கும் முறை

*அடிநா அடிஅணம் உறயத் தோன்றும்.*

நாவின் அடி மேல்வாயின் அடியைப் பொருந்த ய் பிறக்கும்.

### ர, ழ பிறக்கும் முறை

*அண்ணம் நுனிநா வருட ரழ வரும்.*

மேல்வாயை நாவின் நுனி தடவ ர், ழ் என்பவை பிறக்கும்.

### ல,ள பிறக்கும் முறை

*அண்பல் முதலும் அண்ணமும் முறையின்*
*நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்*
*லகார ளகாரம்ஆய் இரண்டும் பிறக்கும்.*

மேல்வாய்ப் பல்லினது அடியை நாவின் ஓரம் தடித்து ஒற்ற (நெருங்க) லகரம் (ல்) பிறக்கும். மேல் வாயை நாவின் ஓரம் தடித்துத் தடவ ளகரம் (ள்) பிறக்கும்.

### வ பிறக்கும் முறை

*மேற்பல் இதழ்உற மேவிடும் வவ்வே.*

மேற்பல்லானது கீழ் இதழைப் (உதட்டைப்) பொருந்த வகரம் (வ்) பிறக்கும்.

### ற, ன பிறக்கும் முறை

*அண்ணம் நுனிநா நனிஉறின் றனவரும்.*

மேல்வாயை நாவின் நுனி பொருந்த ற், ன் பிறக்கும்.

**சார்பெழுத்துக்களுக்கு இடமும் முயற்சியும்**

***ஆய்தக்கு இடம்தலை; அங்கா முயற்சி,***
***சார்பெழுத்து ஏனவும் தம்முதல் அனைய.***

ஆய்த எழுத்துத் தலையை இடமாகக் கொண்டு பிறக்கும். முயற்சி வாயைத் திறத்தலாகும். ஆய்தம் தவிரப் பிற சார்பெழுத்துக்கள் தத்தம் முதலெழுத்துக்களின் இடத்தையும் முயற்சியையும் பொருந்தி நிற்பன.

**பிறப்புக்குக் புறனடை**

***எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பின்***
***திரிபும் தத்தமில் சிறிதுஉள ஆகும்.***

எழுத்துக்கள் பலவற்றிற்குப் பிறப்பு ஒன்றாகக் கூறப்பட்டாலும் உயர்த்திக் கூறுதல், தாழ்த்திக் கூறுதல், உயர்த்தியும் தாழ்த்தியும் கூறுதல் ஆகிய ஒலி முயற்சியினால் ஒன்றுக்கு ஒன்று பிறப்பு வேறுபாடுகளும் அவ்வவற்றில் சிறிது சிறிது உள்ளன ஆகும்.

**உயிர்மெய்**

***புள்ளிவிட்டு, அவ்வொடு முன்உரு வாகியும்***
***ஏனை உயிரோடு உருவு திரிந்தும்***
***உயிரள வாய் அதன் வடிவுஒழித்து இருவயிற***
***பெயரொடும் ஒற்றுமுன் னாய்வரும் உயிர்மெய்.***

மெய்யெழுத்து அகர உயிரோடு கூடியவழி புள்ளியை விட்டு அவ்வாறு விட்ட வடிவே வடிவாகப் பெறும். 'ஆ' முதலிய ஏனைய உயிர்களோடு மெய்யெழுத்துக் கூடியவழி புள்ளியை விடுதலோடு வடிவும் வேறுபடும். மெய்யும் உயிரும் சேரும் போது மெய்யின் மாத்திரை தோன்றாமல் உயிரின் மாத்திரையையே உயிர்மெய் பெறும். வரிவடிவில் உயிரின் வடிவத்தை நீக்கி மெய்யெழுத்தின் விகாரப்பட்ட வடிவையே கொள்ளும். உயிரும் மெய்யும் ஆகிய இரண்டிடத்தும் பிறந்த உயிர்மெய் என்னும் பெயரை ஏற்கும். மெய்யின் ஒலி முன்னும் உயிரின்ஒலி பின்னுமாகி ஒலிக்க உயிர்மெய்யெழுத்து வரும்.

### முற்றாய்தம்

***குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி***

***உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே.***

மூன்று புள்ளி வடிவினையுடைய ஆய்த எழுத்து, குற்றெழுத்தின் முன்னர், உயிரோடு கூடிய வல்லெழுத்து ஆறினுள் ஒன்றன் மேலதாய் வரும்.

(எ.டு)

எ∴கு க∴சு; ஒன்ப∴து: ப∴றி முதலியன

### உயிரளபெடை

***இசைகெடின் மொழிமுதல் இடைகடை நிலைநெடில்***

***அளபெழும் அவற்றவற்று இனக்குறில் குறியே.***

செய்யுளில் ஓசை குறைந்தால் மொழிக்கு முதலிலும் இடையிலும் இறுதியிலும் நின்ற நெட்டெழுத்துக்கள் ஏழும் அவ்வோசையை நிறைவு செய்யத் தத்தம் மாத்திரையின் மிகுந்து ஒலிக்கும். அவ்வாறு அளபெடுத்தமையை அறிதற்கு அவற்றின்பின் அவற்றுக்கு இனமான குற்றெழுத்துக்கள் வரிவடிவில் அடையாளமாக வரும்.

**(எ.டு)**

ஓஒதல் வேண்டும் - மொழிக்கு முதலில் அளபெடுத்தது

செறாஅய் வாழிய நெஞ்சு - மொழிக்கு இடையில் அளபெடுத்தது

நல்ல படாஅ பறை - மொழிக்கு இறுதியில் அளபெடுத்தது.

இனி, செய்யுளில் ஓசை குறையாத இடத்தும் இனிய ஓசையைத் தருவதற்காகவும், ஒருசொல் மற்றொரு சொல்லின் இசையை நிறைவு செய்வதற்காகவும் அளபெடைகள் வருதல் உண்டு. இனிய ஓசைக்காக வரும் அளபெடையை இன்னிசை அளபெடை என்பர்.

(எ.டு)

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே

எடுப்பதூஉம் எல்லாம் மழை

இங்கே கெடுப்பதும். எடுப்பதும் என இருந்தாலும் செய்யுளில் ஓசை குறையாது. ஆயினும் இனிய ஓசையைத் தருதற்காகக் குற்றெழுத்து நெட்டெழுத்தாய் நீண்டு அளபெடுத்தது.

ஒரு சொல் மற்றொரு சொல்லின் இசையை நிறைவு செய்ய வரும் அளபெடையைச் சொல்லிசை அளபெடை என்பர்.

(எ.டு) உரன்நசைஇ யுள்ளம் துணையாகச் சென்றார்

வரன்நசைஇ இன்னும் உளன்.

இங்கே உரன்நசை, வரன்நசை என இருந்தாலும் செய்யுளில் ஓசை குறையாது. ஆயினும் விருப்பம் எனப் பொருள் தரும் இசை என்னும் பெயர்ச்சொல், விரும்பி என வினையெச்சப் பொருள்படும் பொருட்டு. வினையெச்சச் சொல் ஆவதற்கு நசைஇ என அளபெடுத்தது.

எனவே உயிரளபெடைகள் செய்யுள் இசைநிறை அளபெடை, இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை என மூன்றாம். உயிரளபெடை இருபத்தொன்று.

நெட்டெழுத்துக்கள் ஏழும் மொழிக்கு முதலிலும், இடையிலும் கடையிலும் என மூன்றிடங்களிலும் அளபெடுக்க (7×3=21) இருபத்தொன்றாம். இவற்றுள் ஔகாரம் மொழிக்கு இடையிலும், கடையிலும் வராது. இவ்விரண்டையும் கழிக்கச் செய்யுள் இசை நிறை அளபெடை 19.

இவற்றுடன் இன்னிசை அளபெடை ஒன்றும் சொல்லிசை அளபெடை ஒன்றும் ஆக இரண்டும் கூட்ட உயிரளபெடை இருபத்தொன்றும்

**ஒற்றளபெடை**

***ங ஞ ண நமன வயலள ஆய்தம்***
***அளபாம் குறிலிணை குறில்கீழ் இடைகடை***
***மிகலே அவற்றின் குறியாம் வேறே.***

செய்யுளில் ஓசை குறைந்தால் ங. ஞ, ண, ந, ம, ன வ, ய. ல. ள ஆய்தம் என்னும் பதினொரு எழுத்தும் குறிலிணையின் பின்னும், குற்றெழுத்தின் பின்னும் மொழிக்கு இடையிலும் கடையிலும் அவ்வோசையை நிறைவுசெய்யத் தத்தம் மாத்திரையின் மிகுந்து ஒலிக்கும். அவ்வாறு அளபெடுத்தமையை அறிதற்கு அவற்றின் பின் அவ்வவ்வெழுத்துக்களே அடையாளமாக வரிவடிவில் வரும்.

குறிலிணை - இரண்டு குற்றெழுத்துக்கள் சேர்ந்து வருவது. குறில் - தனிக் குற்றெழுத்து மட்டும் வருவது

**(எ.டு.)**

| | | |
|---|---|---|
| இலங்ங்கு வெண்பிறை | - | குறிலிணையின் கீழ் மொழிக்கு இடையில் அளபெடுத்தது. |
| எங்ங்கு இறைவன் | - | குறிற்கீழ் மொழிக்கு இடையில் அளபெடுத்தது. |
| மடங்ங் கலந்த | - | குறிலிணையின் கீழ்மொழிக்கு இறுதியில் அளபெடுத்தது. |
| அங்ங் கனிந்த | - | குறிற்கீழ் மொழிக்கு இறுதியில் அளபெடுத்தது. |

வில.்..்.கி வீங்கிருள் - குறிலிணையின் கீழ் மொழிக்கு இடையில் ஆய்தம் அளபெடுத்தது.

எ.்..்.கு இலங்கிய - குறிற்கீழ் மொழிக்கு இடையில் ஆய்தம் அளபெடுத்தது.

**குற்றியலிகரம்**

***யகரம் வரக்குறள் உத்திரி இகரமும்***
***அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய.***

யகரத்தை முதலிலே உடைய சொல் வருமொழியாய் வரக் குற்றியலுகரம் திரிந்த இகரமும், முன்னிலை அசைச்சொல்லாகிய ‘மியா’ என்பதில் மகரத்தின் மேலுள்ள இகரமும் குற்றியலிகரங்கள் ஆகும்.

குற்றியலிகரம் - குறைந்த ஓசையையுடைய இகரம். எனவே இதற்கு மாத்திரை அரை.

(எ.டு.) நாகு+யாது = நாகியாது
எ.்.கு + யாது = எ.்.கியாது
வரகு + யாது = வரகியாது
கொக்கு + யாது = கொக்கியாது
குரங்கு + யாது = குரங்கியாது
தெள்கு + யாது = தெள்கியாது
கேண்மியா

**குற்றியலுகரம்**

***நெடிலோடு ஆய்தம் உயிர்வலி மெலிஇடைத்***
***தொடர்மொழி இறுதி வன்மையூர் உகரம்***
***அ.்.கும் பிறமேல் தொடரவும் பெறுமே.***

தனி நெட்டெழுத்துக்கள் ஏழுடன் ஆய்தம் ஒன்றும், சொல்லுக்கு நடுவிலும் இடையிலும் வராத ஔகாரம் நீங்கிய உயிர் பதினொன்றும். வல்லினமெய் ஆறும், மெல்லினமெய் ஆறும், வல்லெழுத்துக்களோடு தொடரா வகரம் நீங்கிய இடையினமெய் ஐந்தும் ஆகிய முப்பத்தாறு எழுத்துக்களும் ஒன்றினால் ஈற்றுக்கு அயலெழுத்தாகத் தொடரப் பெற்றுச் சொல்லின் இறுதியில் வல்லினமெய்களுள் யாதாயினும் ஒன்றின்மேல் ஏறிவரும் உகரம் தனக்குரிய மாத்திரையிலிருந்து குறுகும். இவற்றுள் ஆய்தத் தொடர் முதலிய ஐந்து தொடர்களிலும் பிற எழுத்துக்கள் ஒன்றோ பலவோ ஈற்றயலெழுத்தைத் தொடர்ந்தும் வரும்.

ஈற்றுக்கு அயலெழுத்தைக்கொண்டு குற்றியலுகரத்தை அறுவகைத் தொடராகவும், முப்பத்தாறு வகையாகவும் கொள்ளுதல் வேண்டும்.

1. நெடிற்றொடர்க் குற்றியலுகரம் - நாகு
2. ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் - எ.்.கு
3. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் - வரகு
4. வன்றொடர்க் குற்றியலுகரம் - கொக்கு
5. மென்றொடர்க் குற்றியலுகரம் - வண்டு
6. இடைத்தொடர்க் குற்றியலுகரம் - வெய்து

**ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம்**

***தற்சுட்டு அளபுஒழி ஐம்மூ வழியும்***
***நையும் ஔவும் முதலற்று ஆகும்.***

ஐகாரம் தன்னைக் குறித்துத் தன் பெயரைச் சொல்லும் போது குறுகாது. ஒழிந்த சொல்லுக்கு முதலிலும் இடையிலும் கடையிலும் வரும் போது தன் மாத்திரையில் குறுகும். ஔகாரம் தன்னைக் குறித்துத் தன்பெயர் சொல்லும் போது குறுகாது; சொல்லுக்கு முதலில் தன் மாத்திரையில் குறுகும்.

இடவகையால் ஐகாரக் குறுக்கம் மூன்றும், ஔகாரக் குறுக்கம் ஒன்றும் ஆகும். இக்குறுக்கங்களுக்கு மாத்திரை ஒன்று.

**(எ.டு.)** ஐப்பசி, இடையன், குவளை,
மௌவல்

**மகரக் குறுக்கும்**

***ணன முன்னும் வ.்.கான் மிசையுமக் குறுகும்.***

ணகர னகர மெய்களுள் ஒன்றன்பின்னும் வகரத்தின் முன்னும் வரும் மகரமெய் தன் மாத்திரையில் குறுகும்.

மகரக் குறுக்கத்திற்கு மாத்திரை கால். இக்குறுக்கம் இடவகையால் மூன்றாம்.

(எ.டு.) மருணம் - ணகரத்தின் பின் குறுகியது.
போனம் - னகரத்தின் பின் குறுகியது.
தரும் வளவன் - வகரத்தின் முன் குறுகியது.

**ஆய்தக் குறுக்கம்**

***லளவீற்று இயைபினால் ஆய்தம் அ.்.கும்***

லகர ளகர ஈற்று புணர்ச்சியினால் வருகின்ற ஆய்தம் தனக்குரிய அரை மாத்திரையிலிருந்து குறுகும்.

ஆய்தக் குறுக்கத்திற்கு மாத்திரை கால்; இக்குறுக்கம் இடவகையால் இரண்டாம். தனிக் குற்றெழுத்தை அடுத்து வரும் ல, ள என்ற மெய்களுக்கு முன் வருமொழியில் தகரம் வந்தால் ல, ள என்ற இரண்டும் ஆய்தமாகத் திரியும். இவ்வாய்தமே குறுகும்.

(எ.டு) அல் + திணை = அ.ஃறிணை
முள் + தீது = மு.ஃடீது.

**உருவம்**

தமிழ் எழுத்துக்கள் தொன்றுதொட்டு எழுதப்பட்டு வருகின்ற வரிவடிவமே எழுத்தின் வடிவமாகும். அவை காலந்தோறும் மாறுபட்டு வந்துள்ளதைக் கல்வெட்டுக்களால் அறியலாம். மாறுபடினும் அடிப்படையில் அவை பல ஒப்புமைகளைப் பெற்றுள்ளன. அவ்வடிவமே தமிழ் எழுத்துக்களின் வடிவமாகும்.

***தொல்லை வடிவன எல்லா எழுத்தும்; ஆண்டு***
***எய்தும் எகரம் ஒகரமெய் புள்ளி.***

எல்லா எழுத்துக்களும் பல்வேறு வகைப்பட எழுதி வழங்கும் பழைய வடிவினை உடையன. அவற்றுள் எகரம், ஒகரம் ஆகிய உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் புள்ளியைப் பெற்று நிற்கும்.

எ் (குறில்) ஒ் (குறில்) க் ...ன் (மெய்புள்ளி பெறுதல்)

தற்காலத்தில் மெய் எழுத்துக்கள் புள்ளி வைத்தும் எகர ஒகரம் புள்ளி, இன்றியும் (ஏ. ஓ என்னும் வடிவில்) எழுதப் பெறுகின்றன.

**மாத்திரை**

எழுத்துக்களை ஒலிக்கும் (உச்சரிக்கும்) கால அளவே மாத்திரை. உலகத்தில் பொருள்களை அளக்கப் பல கருவிகள் பயன்படுதல் போல ஒலி அளவைக் கணக்கீடு செய்வதே மாத்திரை. கண்ணை இமைப்பதற்கு ஆகும் கால அளவும் கையை நொடிப்பதற்கு ஆகும் கால அளவும் ஒரு மாத்திரை எனப்படும்.

## எழுத்துக்களுக்குரிய மாத்திரை

*மூன்றுஉயிர் அளபு; இரண் டாம்நெடில்; ஒன்றே*
*குறிலோடு ஐ ஔக் குறுக்கம்.ஒற்றளபு;*
*அரை ஒற்று இஉக் குறுக்கம் ஆய்தம்*
*கால்குறள் ம.்.கான் ஆய்தம் மாத்திரை.*

உயிரளபெடைக்கு மாத்திரை மூன்று, நெட்டெழுத்திற்கு மாத்திரை இரண்டு, ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், ஒற்றளபெடை என்பனவற்றிற்கு மாத்திரை ஒவ்வொன்று, மெய்யெழுத்து, குற்றியலிகரம், குற்றியலுகரம் என்பனவற்றிற்குத் தனித்தனி மாத்திரை அரை தனித்தனி மகரக்குறுக்கும் ஆய்தக் குறுக்கம் என்பனவற்றிற்கு மாத்திரை கால்.

## மாத்திரை அளவு

*இயல்பெழு மாந்தர் இமை நொடி மாத்திரை.*

மக்கள் இயல்பாகக் கண்ணை இமைப்பதற்கு ஆகும் கால அளவும், கையை நொடிப்பதற்கு (சொடக்குப் போடுதல்) ஆகும் கால அளவும் ஒரு மாத்திரை ஆகும்.

## மாத்திரைக்குப் புறனடை

*ஆவியும் ஒற்றும் அளவிறந்து இசைத்தலும்*
*மேவும் இசைவிளி பண்டமாற்று ஆதியின்*

உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் இராகம், அழைத்தல், பண்டமாற்று முதலிய இடங்களில் தமக்கு உரிய மாத்திரையாகிய அளவைக் கடந்து ஒலிக்கும்.

## மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்

*பன்னீருயிரும் க ச த ந ப ம வ ய*
*ஞ ங ஈரைந்து உயிர் மெய்யும் மொழிமுதல்*

பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ, ங என்னும் பத்து உயிர்மெய்யெழுத்துக்களும் சொல்லுக்கு முதலில் வரும்.

**(எ-டு)**

அடை, ஆடை, இடை, ஈடு, உடை, ஊக்கம், எடு, ஏடு ஐயம், ஒற்றுமை, ஓதி, ஔவை.
களி, சவடி, தளிர், நலம், படை, மலை, வளம், யவனர், ஞமலி, (அங்) ஙனம்.

### வகரத்திற்குச் சிறப்புவிதி

***உ ஊ ஒ ஓ அலவொடு வம்முதல்.***

வகரமெய் உ ஊ ஒ ஓ என்னும் நான்கு உயிரும் அல்லாத ஏனைய எட்டு உயிர்களுடன் சொல்லுக்கு முதலில் வரும்.

**(எ.டு)**

வடை வாடை விதி, வீதி, வெல், வேல், வையம், வௌவால்

### யகரத்திற்குச் சிறப்புவிதி

***அ ஆ உ ஊ ஓ ஔயம் முதல்***

யகரமெய் அ ஆ உ ஊ ஓ ஔ என்னும் ஆறு உயிர்களுடன் சொல்லுக்கு முதலில் வரும்

(எ.டு) யவனர், யானை, யுகம். யூகம், யோகம், யௌவனம்

### ஞகரத்திற்குச் சிறப்புவிதி

***அ ஆ எ ஒவ்வோடு ஆகும் ஞம் முதல்.***

ஞகரமெய் அ ஆ எ ஒ என்னும் நான்கு உயிர்களுடன் சொல்லுக்கு முதலில் வரும்.

(எ.டு) ஞமலி ஞாலம், ஞெகிழி, ஞொள்கிற்று.

ஞமலி - நாய், ஞெகிழி - கொள்ளிக்கட்டை, ஞொள்கிற்று - இளைத்தது.

### ஙகரத்திற்குச் சிறப்புவிதி

***சுட்டு, யா, எகர வினாவழி அவ்வை***
***ஒட்டி ஙவ்வும் முதலா கும்மே.***

ஙகரமெய், மூன்று சுட்டும் யாவினாவும் எகர வினாவும் ஆகிய இடைச்சொற்களின் பின்னே அகரத்தைச் சேர்ந்து சொல்லுக்கு முதலில் வரும்.

**(எ.டு)**

அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம - சுட்டு

எங்ஙனம் - வினா

**இறுதிநிலை எழுத்துக்கள்**

தமிழ் எழுத்துக்கள் பல. ஆயினும் அவை அனைத்தும் சொற்களில் ஈறாக வருவதில்லை. இன்னின்ன எழுத்துக்களே ஈறாக வரலாம் என்பதை இலக்கண நூல்கள் வரையறுத்துள்ளன. ஈற்றில் வருகின்ற எழுத்துக்கள் இறுதிநிலை எழுத்துக்கள் என அழைக்கப் பெறுகின்றன.

**மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள்**

***ஆவி ஞ ணநமன யரல வழள மெய்***
***சாயும் உகரம் நாலாறும் ஈறே.***

தனித்தும் மெய்யுடன் கூடியும் வரும் பன்னிரண்டு உயிர்களும் ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்னும் பதினொரு மெய்களும், குற்றியலுகரமும் சொல்லுக்கு இறுதியில் வரும்.

(எ.டு) ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ

உரிஞ், மண், பொருத், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வாள், அஃது

வல்லின மெய்கள் ஆறும், ஙகர மெய்யும் சொல்லுக்கு இறுதியில் வராது.

**இறுதி நிலைக்குச் சிறப்பு விதி**

***குற்றுயிர் அளபின் ஈறாம்; எகரம்***
***மெய்யொடு ஏலாது, ஒந் நவ்வொடு ஆம், ஔ***
***ககர வகரமொடு ஆகும் என்ப.***

அ. இ, உ, எ, ஒ என்னும் குற்றெழுத்துக்கள், தனித்து இறுதியில் வராது, அளபெடையில் வரிவடிவில் அடையாளமாக இறுதியில் வரும்

ஏகரம், மெய்யொடு இறுதியில் வராது. ஒகரம், நகர மெய்யுடன் மட்டும் இறுதியில் வரும். ஔகாரம், ககர வகரங்களுடன் சேர்ந்து இறுதியில் வரும். இவ்வாறு புலவர் சொல்லுவர்.

(எ.டு)

பலாஅ. தீஇ, சேஎ, கைஇ, கோஒ, கௌஉ அளபெடையில் உயிர்க் குற்றெழுத்துக்கள் இறுதியில் வந்தன.

நொ - ஒகரம், நகரத்துடன் இறுதியில் வந்தது.

கௌ,வௌ - ஔகாரம் ககர வகரங்களுடன் இறுதியில் வந்தது.

**உயிர்மெய் எழுத்தின் முதலும் ஈறும்**

***நின்ற நெறியே உயிர்மெய் முதல் ஈறே.***

மெய்யெழுத்து முன்னும் உயிரெழுத்துப் பின்னுமாக ஒலித்து நின்ற வழியே உயிர்மெய்யெழுத்திற்கு மெய், முதலெழுத்தாகும் உயிர் இறுதியெழுத்தாகும்.

**இடைநிலை எழுத்துக்கள்**

**மொழிக்கு இடையில் வரும் எழுத்துக்கள்**

மொழியின் நடுவில் ஓரெழுத்து மற்றோர் எழுத்துடன் சேர்ந்து நிற்பதே இடைநிலை மயக்கம் எனப்படும். சேர்ந்திருத்தல், அடுத்தித்தல், மயக்கம், கூட்டம் என்பன ஒரு பொருளன. 1. உயிர் உயிருடன் சேர்ந்து நிற்றல் இல்லை 2. உயிரும் மெய்யும் சேர்ந்து நிற்றலுக்கு வரையறை இல்லை 3. மெய்யுடன் மெய் மயங்கும் மயக்கமே இடைநிலை மயக்கம் எனக் குறியீடு பெறுகிறது. இது உடனிலை மெய்ம்மயக்கம் எனவும் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் எனவும் இருவகைப்படும்.

**மெய்ம்மயக்கம்**

***கசதப ஒழித்த ஈர்ஏழன் கூட்டம்***
***மெய்ம்மயக்கு; உடனிலை ரழஒழித்து ஈர்எட்டு***
***ஆகும்; இவ் இருபான் மயக்கும் மொழிஇடை***
***மேவும்; உயிர்மெய் மயக்குஅளவு இன்றே.***

க, ச, த, ப என்னும் நான்கு அல்லாத பதினான்கு மெய்களும் மற்ற மெய்யெழுத்துக்களுடன் கூடும் கூட்டம் வேற்று நிலை மெய்ம்மயக்கமாகும். ர, ழ அல்லாத பதினாறு மெய்களும் தம்முடன் கூடும் கூட்டம் உடனிலை மெய்ம்மயக்கம். இவ்விருவகை மயக்கமும் ஒரு மொழி இடையிலும் தொடர்மொழி இடையிலும் வரும்.

உயிரும் மெய்யும் மாறி மயங்கும் மயக்கத்திற்கு வரையறை இல்லை. வேண்டியவாறே மயங்கும்.

(எ.டு)

1. தம்மோடு தாம் மயங்குவன - க, ச, த, ப (சுக்கு, கச்சு, பத்து, உப்பு)
2. தம்மொடு பிற மயங்குவன - ர, ழ (சேர்தல், வாழ்தல்)
3. தம்மொடு தாமும் பிறவும் மயங்குவன - ங,ஞ, ட, ண, ந, ம, ய, ல, வ, ள, ற, ன (அங்ஙனம், அங்கு, மஞ்ஞை, மஞ்சள்)

## சிறப்பு விதி

***ஙம்முன் கவ்வாம் வம்முன் யவ்வே.***

ஙகர முன் ககரம் மயங்கும். வகர முன் யகரம் மயங்கும்.

(எ.டு) கங்கன், தெவ்யாது.

***ஞநமுன் தம்மினம் யகரமொடு ஆகும்.***

ஞகர, நகர மெய்களின் முன் அவற்றிற்கு இனமான சகரமும் தகரமும் யகரமும் மயங்கும்.

(எ.டு) மஞ்சள், உரிஞ்யாது

கந்தன், பொருந்யாது

***டறமுன் கசப மெய்யுடன் மயங்கும்.***

டகர, றகர என்னும் எழுத்துக்களின் முன் க ச ப என்னும் மூன்று மெய்களும் மயங்கும்.

(எ.டு) ட - க, ச, ப - கட்கம், கட்சி

ற - க, ச, ப - கற்க, கற்சிறார்.

***ணனமுன் இனம் கச ஞபமய வவ்வரும்.***

ண, ன என்னும் இரண்டின் முன் அவற்றுக்கு இனமான ட, ற என்பவற்றுடன் க, ச, ஞ, ப, ம, ய, வ, முதல் ஏழு மெய்களும் மயங்கும்.

**(எ.டு)** ண - ட, க, ச, ஞ, ப, ம, ய, வ - விண்டு, வெண்கலம்

ன - ற, க, ச, ஞ, ப, ம, ய, வ - புன்றலை, புன்கண்

***மம்முன் பயவ மயங்கும் என்ப.***

மகர மெய் முன் ப, ய, வ என்னும் மூன்றும் மயங்கும்.

**(எ.டு)** ம - ப, ய, வ - கம்பன், கலம் யாது.

***ய ர ழ முன்னர் மொழிமுதல் மெய்வரும்.***

ய, ர, ழ என்னும் மூன்று மெய்களின் முன்னர் மொழிக்கு முதலாகிய பத்து மெய்களும் வரும்.

**(எ.டு)** ய - க, ச, த, ந, ப, ம, ஞ, ய, வ, ங - வேய்கடிது, வேய்ங்குழல்

ர - க, ச, த, ந, ப, ம, ஞ, ய, வ, ங - வேர்கடிது, வேர்சிறிது

ழ - க, ச, த, ந, ப, ம, ஞ, ய, வ, ங - வீழ்கடிது, வீழ்சிறிது

***லளமுன் கசப வயஒன் றும்மே.***

ல், ள் என்னும் மெய்களின் முன் க, ச, ப, வ, ய என்னும் ஐந்தும் மயங்கும்.

**(எ.டு)** ல - க, ச, ப, வ, ய - வேல்கடிது, வேல்சிறிது

ள - க, ச, ப, வ, ய - வாள்கடிது, வாள்சிறிது.

**உடனிலை மெய்ம்மயக்கச் சிறப்பு விதி**

***ரழஅல்லன தம்முன் தாம்உடன் நிலையும்.***

ர, ழ என்னும் இரண்டு அல்லாத மற்ற பதினாறு மெய்களும் தம்முன் தாமே மயங்கும்.

| | | | |
|---|---|---|---|
| (எ-டு) | பக்கம் | பத்து | அவ்வை |
| | அங்ஙனம் | வெந்நீர் | வெள்ளம் |
| | அச்சம் | காப்பு | கொற்றம் |
| | மஞ்ஞை | அம்மை | அன்னை |
| | எட்டு | அய்யன் | |
| | வண்ணம் | வில்லி | |

**ஈரொற்று நிலையும், தனிக்குறிலுடன் நில்லாதவையும்**

***யரழஒற் றின்முன் கசதப ஙஞநம***

***ஈரொற் றாம்; ரழத் தனிக்குறில் அணையா.***

ய், ர், ழ் என்னும் மூன்றின் முன் க், ச், த், ப், ங், ஞ், ந், ம் ஆகிய எட்டு மெய்களும் ஈரொற்றாக அமையும். ர, ழ என்பன தனிக்குற்றெழுத்தின் பின் வருதல் இல்லை. நெட்டெழுத்தின் பின்னரே வரும்.

**(எ-டு)**

வேய்க்குறை, வேர்க்குறை, வீழ்க்குறை.

### திரிந்து இரண்டு ஒற்றாய் நிற்கும் சொற்கள்

***லளமெய் திரிந்த னணமுன் மகாரம்***
***நைந்துஈர் ஒற்றாம் செய்யுள் உள்ளே.***

செய்யுட்களில் ல, ள என்னும் மெய்கள் திரிந்து ன, ண என்னும் மெய்களாக மாறும். இவற்றின் முன் வரும் மகரம் குறுக்கமடைந்து இரண்டு மெய்யெழுத்துக்களாய் மயங்கி நிற்கும்.

(எ.டு) திசையறி மீகானும் போன்ம் - போலும்
மயிலியல் மாதர் மருண்ம் - மருளும்

### மொழியில் நிற்கும் எழுத்துக்களின் புறனடை

***தம்பெயர் மொழியின் முதலும் மயக்கமும்***
***இம்முறை மாறியும் இயலும் என்ப***

எழுத்துக்களின் பெயரைச் சொல்லி நிலைமொழி வருமொழிகளாகப் புணர்க்கும்போது மொழி முதலுக்கும் இடைநிலை மயக்கத்திற்கும் என மேற்கூறிய இவ்வாறு விதிக்கப்பட்டனவும் விலக்கப்பட்டனவும் ஆகிய எழுத்துக்கள் எல்லாம் மொழிக்கு முதலாகியும் மயங்கியும் வரும்.

(எ.டு)

“லஃகான் முன்னர்” - இதில் மொழிக்கு முதலாகாத ‘லகரம்’ மொழிக்கு முதலாகி வந்தது.

“அவற்றுள் “லஃகான்” - இதில் லகரமெய் ளகரமெய்யுடன் மயங்கி வந்தது.

“கெப்பெரிது” - இதில் மொழிக்கு இறுதியில் வராத எகரம், மொழிக்கு இறுதியில் மெய்யுடன் சேர்ந்து வந்தது

### போலி எழுத்துக்கள்

ஒரு சொல்லில் ஓர் எழுத்து நிற்க வேண்டிய இடத்தில் வேறோர் எழுத்து வந்து பொருள் மாறுபடாமல் இருப்பின் அவ்வெழுத்தைப் போலி என்பர். போல வருவது போலியாகும். இது மூன்று வகைப்படும்.

**மொழி இறுதிப்போலி**

***மகர இறுதி அ.ஃறிணைப் பெயரின்***

***னகரமோடு உறழா நடப்பன உளவே.***

பால்பகா அ.ஃறிணைப் பெயர்களின் இறுதியில் நின்ற மகரமெய் னகரமெய்யுடன் ஒத்து நடக்கும் இடங்களும் உண்டு.

பால்பகா அ.ஃறிணைப் பெயர்களின் இறுதியில் மகர மெய்க்குப் போலியாக னகரமெய் வரும்.

(எ-டு) அகம் - அகன், நிலம்-நிலன், முகம் - முகன்.

**மொழி முதற்போலியும், மொழி இடைப்போலியும்**

***அஐ முதலிடை ஒக்கும் சஞயமுன்***

அகரமும் ஐகாரமும் சொல்லுக்கு முதலிலும் நடுவிலும் ச. ஞ, ய என்னும் மெய்களுக்கு முன் தம்முள் வேறு பாடில்லாமல் ஒத்து நடக்கும்.

| **(எ.டு)** | **முதற்போலி** | | **இடைப்போலி** |
|---|---|---|---|
| | பசல்-பைசல் | - | அமச்சன் -அமைச்சன் |
| | மஞ்சு — மைஞ்சு | - | இலஞ்சி - இலைஞ்சி |
| | மயல்-மையல் | - | அரயன்- அரையன் |

**மொழியிடைப் போலி**

***ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி***

***ஞ.ஃகான் உறழும் என்மரும் உளரே.***

சொல்லுக்கு நடுவில் சிலவிடங்களில் ஐகாரத்தின் பின்னும், யகர மெய்யின் பின்னும் வருகின்ற நகர மெய்யோடு ஞகர மெய் போலியாக வரும் என்று சொல்லுபவரும் உளர்.

(எ.டு) கைந்நின்ற - கைஞ்ஞின்ற
செய்ந்நின்ற - செய்ஞ்ஞின்ற
இவை செய்யுளில் வருவன
சேய்நலூர் - சேய்ஞலூர்
இவை வழக்கில் வருவன

**சந்தியக்கரம்**

***அம்முன் இகரம் யகரம் என்றிவை***

***எய்தின் ஐ ஒத்து இசைக்கும் அவ்வோடு***

***உவ்வும் வவ்வும் ஔவோர் அன்ன.***

அகரத்தின் முன் இகரமும், யகரமெய்யும் தம்முள் ஒத்துப் பொருந்தினால் ஐ என்னும் நெட்டெழுத்து ஒலிக்கும். அகரத்தோடு உகரமும் வகர மெய்யும் தம்முள் ஒத்துப் பொருந்தினால் ஔ என்னும் நெட்டெழுத்து ஒலிக்கும்.

(எ.டு) அய்இ = ஐ

அவ்உ = ஔ

சந்தியக்கரம் - கூட்டெழுத்து

**சாரியை**

வேறாகி நிற்கும் இருமொழிகளுள் ஒன்றைச் சார்ந்து நிற்பது சாரியை ஆகும். விட்டிசையைத் தடுப்பதற்கும் இனிய ஓசைக்கும் சாரியை உதவுகிறது. இது மொழிச் சாரியை எனவும், எழுத்துச் சாரியை எனவும் இருவகைப்படும். எழுத்தை ஒலிக்கப் பயன்படுவன எழுத்துச் சாரியைகள். இவற்றிற்கெனத் தனித்த பொருள் ஏதும் இல்லை.

**எழுத்தின் சாரியைகள்**

***மெய்கள் அகரமும் நெட்டுஉயிர் காரமும்***
***ஐஔக் கானும் இருமைக் குறில்இவ்***
***இரண்டொடு கரமுமாம் சாரியை பெறும்பிற.***

பதினெட்டுத் தனி மெய்யெழுத்துக்களும் அகரச் சாரியை பெற்று இயங்கும். நெடில் உயிர்கள் ஏழும் காரச் சாரியை பெறும். நெட்டெழுத்தாகிய ஐ. ஔ என்பன கான் சாரியையும் பெறும், குற்றெழுத்துக்கள் காரம், கான் ஆகிய இரண்டொடு கரச்சாரியையும் பெறும்.

**(எ-டு)**

1. மெய்கள் அகரச் சாரியை - க் ….ன் = க,ன
2. நெடில்கள் காரச்சாரியை - ஆ, ஔ = ஆகாரம், ஔகாரம்
   கான் சாரியை - ஐ, ஔ = ஐகான், ஔகான்
3. உயிர்க்குறில் காரம், கான், கரம் - அ…. ஒ = அகாரம், அ∴கான், அகரம்
4. உயிர்மெய்க்குறில் காரம், கான், கரம் - க….ன = மகாரம், ம∴கான், மகரம்

பிற என்றமையால் குற்றெழுத்துடன் கான் சாரியையைக் கூட்டும் போது இடையில் ஆய்தம் தோன்றும் அ∴கான் ம∴கான்.

**எழுத்தியலுக்குப் புறனடை**

***மொழியாய்த் தொடரினும் முன்அனைத்து எழுத்தே.***

எழுத்துக்கள் தனித்தும் மொழியாய்த் தொடர்ந்தும் நிற்கும். அம்மொழிகள் தம்மொடு தாமும் புணரும். பிற உருபுகளோடும் புணரும். அந்நிலைகளிலும் எழுத்துக்கள் எண் முதல் போலி ஈறாகிய பத்து இலக்கணங்களையும் பொருந்தி நிற்கும். தனித்து நிற்கும் எழுத்து மொழியாகும் போதும் ஒரே இலக்கணத்தையே பெறும் என்பதே இந்நூற்பாவின் பொருளாகும்.

## அலகு - 3

# பதவியல்

எழுத்தியலில் கூறப்பட்ட எழுத்துக்களால் ஆகிய சொற்களின் இலக்கணத்தைக் கூறுவது பதவியலாகும். எழுத்துக்கள் பொருள் தரும் வகையில் அமைவதே சொல்லாகும். சொல், மொழி, கிளவி, வார்த்தை, பதம் என்பன ஒரு பொருளன. எழுத்துக்கள் சொற்களாகும் இயல்புகளை விளக்கும் இவ்வியல் வடமொழியைத் தழுவி அமைக்கப்பட்டதால் பதவியல் எனப் பெயரிடப்பட்டது.இவ்வியலில் அமைந்த நூற்பாக்கள் 23.

**பதம்**

***எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின்***
***பதமாம்; அதுபகாப் பதம்பகு பதம்என***
***இருபால் ஆகி இயலும் என்ப.***

எழுத்துக்கள் தனித்து நின்றோ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எழுத்துக்களாய்த் தொடர்ந்து நின்றோ பொருளைத் தந்தால் அது பதம் (மொழி) என்று கூறப்படும். அப்பதம் பகாப்பதம்; பகுபதம் என இருவகையினதாய் நடக்கும் என்று சொல்லுவர் புலவர்.

எல்லா மொழியும் ஓரெழுத்து ஒருமொழி தொடர்மொழி எனவும் பகுபதம் பகாப்பதம் எனவும் இரண்டாகக் கூறப்படும். இறிஞி, மிறிஞி என்பவற்றில் எழுத்துக்கள் தொடர்ந்து நின்றன. ஆயினும் பொருள் தராததால் அவை மொழியாகா.எனவே பொருள் தருவதே மொழியாகும்.

**ஓரெழுத்தொருமொழி**

***உயிர்மவில் ஆறும் தபநவில் ஐந்தும்***
***கவசவில் நாலும் யவ்வில் ஒன்றும்***
***ஆகும் நெடில்நொது ஆங்குறில் இரண்டோடு***
***ஓரெழுத்து இயல்பதம் ஆறேழ் சிறப்பின.***

உயிர் வரிசையில் ஆறும், மகரவரிசையில் ஆறும், தகர வரிசையில் ஐந்தும், பகர வரிசையில் ஐந்தும், நகர வரிசையில் ஐந்தும், ககர வரிசையில் நான்கும், வகர வரிசையில் நான்கும். சகர வரிசையில் நான்கும். யகர வரிசையில் ஒன்றும் ஆகிய

நெட்டெழுத்தால் ஆன மொழிகள் நாற்பதும் நொ, து என்னும் குற்றெழுத்தால் ஆகிய மொழிகள் இரண்டுடன் கூட ஓரெழுத்தாலாகிய மொழிகள் நாற்பத்திரண்டும் சிறப்புடையன (எ.டு)

| | | |
|---|---|---|
| ஆ, ஈ. ஊ, ஏ, ஐ, ஓ | - | (உயிர் வரிசை) |
| மா.மீ. மூ.மே.மை, மோ | - | (மகர வரிசை) |
| தா.தீ, தூ. தே. தை | - | (தகர வரிசை) |
| பா, பூ, பே, பை, போ | - | (பகர வரிசை) |
| நா, நீ, நே, நை, நோ | - | (நகர வரிசை) |
| கா, கூ, கை, கோ | - | (ககர வரிசை) |
| வா, வீ, வை, வௌ | - | (வகர வரிசை) |
| சா, சீ, சே, சோ | - | (சகர வரிசை) |
| யா, | - | (யகர வரிசை) |
| நொ, து | | |

### தொடரெழுத் தொருமொழி

***பகாப்பதம் ஏழும் பகுபதம் ஒன்பதும்***
***எழுத்தீ றாகத் தொடரும் என்ப.***

பாகாப்பதங்கள் இரண்டெழுத்து முதல் ஏழெழுத்து ஈறாகவும், பகுபதங்கள் இரண்டெழுத்து முதல் ஒன்பதெழுத்து ஈறாகவும் தொடரும் என்று புலவர் சொல்லுவர்.

**பகாப்பதம்:** அணி, அறம், அகலம். அருப்பம். தருப்பணம், உத்திரட்டாதி

**பகுபதம் :** கூனி, கூனன், குழையன், பொருப்பன், அம்பலவன், வுரங்கத்தான், உத்தராடத்தான், உத்திரட்டாதியான்.

### பகாப்பதம்

***பகுப்பால் பயனற்று இடுகுறி ஆகி***
***முன்னே ஒன்றாய் முடிந்துஇயல்கின்ற***
***பெயர்வினை இடைஉரி நான்கும் பகாப்பதம்***

பிரிக்கப்படுவதால் எவ்விதப் பயனும் இன்றிக் காரணம் கருதாது இடப்பெற்று (இடுகுறி) வழங்கும் பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு சொற்களும் பகாப்பதங்கள் ஆகும்.

மண், நீர், நீ - பெயர்ப் பகாப்பதம்

நட, வா, விடு - வினைப் பகாப்பதம்

| | | |
|---|---|---|
| மன், கொல், தில் | - | இடைப் பகாப்பதம் |
| உறு, தவ, நனி | - | உரிப்பகாப்பதம். |

**பகுபதம்**

***பொருள்இடம் காலம் சினைகுணம் தொழிலின்***
***வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே.***

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவை காரணமாக அமையும் பெயர்ச்சொற்களும் தெரிநிலையாகவும் குறிப்பாகவும் காலத்தைக் காட்டும் வினைச் சொற்களும் பகுபதங்கள் ஆகும்.

**பெயர்ச்சொற்கள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பொன்னன் | - | பொன் | - | பொருள் | - | பெயர்ப்பகுபதம் |
| அகத்தன் | - | அகம் | - | இடம் | - | இடப்பகுபதம் |
| ஆதிரையான் | - | ஆதிரை | - | காலம் | - | காலப்பகுபதம் |
| கண்ணன் | - | கண் | - | சினை | - | சினைப்பகுபதம் |
| கரியன் | - | கருமை | - | பண்பு | - | பண்புப்பெயர் |
| ஓதுவான் | - | ஓதல் | - | தொழில் | - | தொழில்பகுபதம் |

**வினைச்சொற்கள்**

| | | |
|---|---|---|
| நடந்தான் | - நட+த்+த்+ஆன் | - தெரிநிலை வினைப்பகுபதம் |
| பொன்னன் | - பொன் + அன் | - குறிப்பு வினைப்பகுபதம் |

| | | | |
|---|---|---|---|
| நடந்தவன் | - நட+த் + த் + அ + அன் - | தெரிநிலை | வினையால் அணையும் |
| இல்லாதவன் | - இன்மை + ஆ +த் + அ + அன் | குறிப்பு | பகுபதம் |

**பகுபத உறுப்புக்கள்**

பல வகை உறுப்புக்களைக் கொண்டு இயங்குவது உடல். அதுபோலப் பல வகை உறுப்புக்களைக் கொண்டு இயங்குவது சொல். அவை பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்பன. இவற்றுள் இரண்டு முதல் ஆறு ஈறான உறுப்புக்களைப் பெற்றுச் சொற்கள் அமையும்.

***பகுதி விகுதி இடைநிலை சாரியை***
***சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை***
***முன்னிப் புணர்ப்ப முடியும்எப் பதங்களும்***

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் ஆறு உறுப்புக்களும் பொருளமைதிக்கு ஏற்றவற்றை நினைத்து அறிவுடையோர் கூட்டி முடிக்க எவ்வகைப்பட்ட பகுபதங்களும் முடியும்.

**(எ.டு)**

கூனி = கூன் + இ - பகுதி, விகுதிகளைக் கொண்டு முடிந்தது.

உண்டான் = உண் + ட் + ஆன் - பகுதி, இடைநிலை, விகுதிகளைக் கொண்டு முடிந்தது.

படித்தனன் = படி + த் + த் + அன் + அன் - பகுதி, சந்தி, இடைநிலை, சாரியை, விகுதிகளைக் கொண்டு முடிந்தது.

நடந்தனன் = நட+த்(ந்)+ த் + அன்+ அன் - பகுதி, சந்தி, சந்தியால் வந்த விகாரம், இடைநிலை, சாரியை,விகுதி என்னும் ஆறு உறுப்புக்களையும் கொண்டு முடிந்தது.

**பகுதி**

**தத்தம்**
***பகாப்ப தங்களே பகுதி ஆகும்.***

பெயர்ப் பகுபதங்கள், வினைப்பகுபதங்கள் ஆகியவற்றுள் முதலில் நிற்கும் பகாப்பதங்களே பகுதியாகும்.

**(எ.டு)**

பொன்னன் - பொன் + அன் - பொன் - பெயர்ப்பகுதி

செய்யன் - செம்மை + அன் - செம்மை - பண்புப்பெயர்ப்பகுதி

நடந்தான் - நட+த்+த்+ஆன்-நட - வினைப்பகுதி

**மையீற்றுப் பண்புப் பகுதிகள்**

***செம்மை சிறுமை சேய்மை தீமை***
***வெம்மை புதுமை மென்மை மேன்மை***
***திண்மை உண்மை நுண்மை அவற்றுஎதிர்***
***இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே.***

செம்மை முதலான பதினொன்றும் பண்பும் பெயர்களாகும். இவற்றிற்கு எதிரான வெண்மை, கருமை, பொன்மை, பசுமை, பெருமை, அண்மை, நன்மை, தண்மை, பழமை,

வன்மை, கீழ்மை, நொய்ம்மை, இன்மை, பருமை ஆகியவையும் இவற்றைப் போன்ற பிறவும் பண்பும் பொருளில் இருந்து வேறுபொருள் பிரிக்க இயலாத நிலைப் பதமாகும்.

## மையீற்றுப் பண்புப் பெயரின் விகாரம்

மையீற்றுப் பண்புப் பகுதிகள் சொற்களாய் நின்று விகுதியோடும் பதத்தோடும் புணரும். அப்போது பல மாற்றங்களை அடையும். அவை பண்புப் பெயரின் விகாரங்கள் எனப்படும்.

***ஈறு போதல் இடைஉகரம் இய்யாதல்***
***ஆதி நீடல் அடிஅகரம் ஐயாதல்***
***தன்ஒற்று இரட்டல் முன்னின்ற மெய்திரிதல்***
***இனமிகல் இனையவும் பண்பிற்கு இயல்பே.***

இறுதியிலுள்ள மை விகுதி கெடுதல், நடுவில் நின்ற உகரம் இகரம் ஆதல், முதலில் நின்ற குற்றெழுத்து நெட்டெழுத்தாதல் முதலில் நின்ற அகரம் ஐகாரம் ஆதல், தன் மெய் இடையில் மிகுதல், முன் நின்ற மெய் வேறொரு மெய்யாகத் திரிதல், வரும் எழுத்திற்கு இன எழுத்து மிகுதல் என்பனவும் இவை போல்வன பிறவும் பண்புச் சொற்களுக்கு இயல்பு ஆகும்.

**(எ.டு.)**

1. மை விகுதி கெடல்; செம்மை+ மீன் - செம்மீன்;
   வெண்மை + பல் - வெண்பல்.

2 இடையில் உள்ள உகரம் இகரமாதல்: பெருமை + அன்
பெரு + அன் - பெரு - ர்(உ) இ = பெரி + அன்-பெரியன்

3. சொல்லின் முதலில் உள்ள குறில் நெடிலாதல்
   முதுமை + ஊர் – முது + ஊர் - மூது + ஊர் = மூதூர்

4. சொல்லின் முதலில் உள்ள அகரம் ஐகாரமாதல்
   பசுமை + தமிழ் -பசு + தமிழ் - ப + தமிழ் - பை + தமிழ் - பைந்தமிழ்

5. மை நீங்கிய பகுதியின் ஈற்றுமெய் இரட்டித்தல்
   புதுமை + ஊர் – புது+ஊர் - புத்து+ஊர் - புத்தூர்

6. மை முன் நின்ற ஒற்றுத் திரிதல்
   செம்மை+ஆம்பல் - செம்+ஆம்பல்
   சேம்+ ஆம்பல் - சேத் + ஆம்பல் - சேதாம்பல்

7. வல்லினத்திற்கு ஏற்ற மெல்லெழுத்து மிகுதல்
   பசுமை +தழை - பசு + தழை - பசுந்தழை

8 இனையவும் என்று கூறியதால் பைந்தமிழ், பைந்தார் போன்றவற்றில் ஈறு கெடுவதோடு இடையும் கெட்டது. கார்முகில், பாரிடம் போன்றவற்றில் உகரம் கெட்டது.

**செய்யென் ஏவல்வினைப் பகாப்பதங்கள்**

***நடவா மடிசீ விடுகூ ஏவை***
***நொப்போ வெளஉரிஞ் உண்பொருந் திரும்தின்***
***தேய்பார் செல்வவ் வாழ்கேள் அஃகுஎன்று***
***எய்திய இருபான் மூன்றாம் ஈற்றவும்***
***செய்என் ஏவல் வினைப்பகாப் பதமே.***

நட, வா, மடி, சீ, விடு, கூ, வே, வை, நொ, போ, வெள, உரிஞ், உண். பொருந், திரும், தின், தேய், பார், செல், வவ், வாழ், கேள், அஃகு என்று முதனிலையாக அமைகின்ற இருபத்து மூன்று ஈறுகளை உடைய இச்சொற்கள் செய் என்னும் ஏவலினது பகாப்பதமாகிய பகுதியும் ஏனை வினைப்பகாப்பதங்களாகிய பகுதியும் ஆகும்.

**(எ.டு)**

நட (அ) நடந்தான்; வா (ஆ) - வந்தான், மடி (இ) – மடிந்தான்

சீ (ஈ) சீத்தான்; விடு (உ) - விட்டான்; கூ (ஊ) - கூவினான்

வே (ஏ)- ஏவினான்; நொ (ஓ) - நொந்தான்; போ (ஓ) - போனான்

வெள (ஔ) - வெளவினான்

இவை உயிரீற்றுத் தெரிநிலை வினைப்பகுதிகள்.

உரிஞ் - உரிஞினான்; உண் - உண்டான்; பொருந் - பொருநினான்;

திரும் -திருமினான்; நில் - நின்றான்; தேய் - தேய்த்தான்,

பார் - பார்த்தான்:

செல் -சென்றான்; வவ் - வவ்வினான்; வாழ் - வாழ்ந்தான்;

கேள் - கேட்டான்

இவை பதினொன்றும் மெய்யீற்று வினைப்பகுதிகள்.

தொழு -தொழுதான் - இயல்பாகப் புணர்ந்தது

காண் -கண்டான் - முதல் குறுகியது

செல் - சேறல் - முதல் நீண்டது

பெறு - பெற்றான் - ஒற்று இரட்டித்தது

சா - செத்தான் - ஆ-எ ஆனது

செல் - சென்றான் - ல்,ன் ஆகத் திரிந்தது.

**ஏவல் பகுதிக்குச் சிறப்பு விதி**

***செய்யென் வினைவழி விப்பி தனிவரின்***

***செய்விஎன் ஏவல் இணையின்ஈர் ஏவல்.***

செய் என்பது ஏவல் வினையாகும். இதனுடன் வி, பி என்பனவற்றுள் ஒன்று வருமாயின் செய்யென் ஏவல் மேல் செய்வி என்னும் ஓர் ஏவலாய் அமையும். அவற்றின் பின் இவ்விகுதிகள் தன்னொடும் பிறிதொடும் இணைந்து வருமாயின் செய்விப்பி என்னும் வாய்பாட்டு ஏவல் பகுதி ஆகும்.

**(எ.டு)**

நட - நடப்பி - நடப்பியாய்
வா - வருவி - வருவியாய்
நடப்பிப்பியாய் - வருவிப்பியாய்

**விகுதி**

பகுபதங்களின் ஈற்றில் நிற்கும் உறுப்பு விகுதியாகும். இது திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் காட்டும். விகுதி இறுதி நிலை எனக் கூறப்பெறும். நன்னூலார் 37 விகுதிகளைக் காட்டுகிறார். இவற்றுள் பெரும்பான்மை தெரிநிலை வினைமுற்று விகுதிகளாம். சிறுபான்மை பெயர்ப் பகுபதங்களுக்கும் விகுதியாய் வரும்.

**விகுதிகள்**

***அன்ஆன்; அள்ஆள்; அர்ஆர் பம்மார்;***

***அஆ: குடுதுறு என்ஏன் அல்அன்***

***அம்ஆம் எம்ஏம் ஓம்மொடு உம்ஊர்***

***கடதற'; ஐஆய் இம்; மின் இர்ஈர்***

***ஈயர் கய; உம் என்பவும் பிறவும்***

***வினையின் விகுதி; பெயரினும் சிலவே.***

அன், ஆன், அள், ஆள், அர், ஆர், ப, மார், அ, ஆ, கு, டு, து, று, என், ஏன், அல், அன், அம், ஆம், எம், ஏம், ஓம், கும், டும், தும், றும், ஐ, ஆய், இ, மின், இர், ஈர், ஈயர், க, ய, உம் என்ற முப்பத்தேழு விகுதிகளும், பிற விகுதிகளும் தெரிநிலை வினைமுற்று விகுதிகள் ஆகும். இவற்றில் சில விகுதிகள் பெயர்ப்பகுபதங்களுள்ளும் வரும்.

(எ.டு)

| | |
|---|---|
| இசைத்தனன், இசைத்தான், - அன், ஆன் | - ஆண்பால் |
| இசைத்தனள்,இசைத்தாள் - அள், ஆள் | - பெண்பால் |
| இசைத்தனர், இசைந்தார் - அர், ஆர் | - பலர்பால் |
| நடப்ப, நடமார் - ப, மார் | - பலர்பால் |
| இசைத்தன, இசையா – அ, ஆ | - பலவின் பால் |
| உண்கு, உண்டு, நடந்து, சேறு – கு,டுது.று | - தன்மை ஒருமை |
| வந்தனென், வந்தேன் - என், ஏன் | - தன்மை ஒருமை |
| வருவல், வருவன் - அல், அன் | - தன்மை ஒருமை |
| வந்தனம், வந்தாம் - அம், ஆம் | - தன்மைப்பன்மை |
| வந்தனெம், வந்தேம் - எம், ஏம் | - தன்மைப்பன்மை |
| வந்தோம் - ஓம் | - தன்மைப்பன்மை |
| உண்கும், உண்டும் - கும், டும் | - தன்மைப்பன்மை |
| நடந்தும், சேறும் - தும், றும் | - தன்மைப்பன்மை |
| வந்தனை, வந்தாய் - ஐ, ஆய் | - முன்னிலை ஒருமை |
| சேறி (செல்லுவாய்) - இ | - முன்னிலை ஒருமை |
| சென்மின், சென்றனிர், சென்றீர் - மின், இர், ஈர் | - முன்னிலைப்பன்மை |
| நிலீயா, நடக்க, வாழிய - ஈயர், க, ய | - வியங்கோள் |
| செல்லும் - உம் | - செய்யும் வினைமுற்று |

**இடைநிலை**

பகுபதத்தின் பகுதியையும் விகுதியையும்: விரிக்க நடுவில் நிற்பது இடைநிலை ஆகும். இது பெயர் இடை நிலை, வினை இடைநிலை என இருவகைப்படும். இவற்றுள் பெயர் இடைநிலைகள் காலம் காட்டாது.

**பெயர் இடைநிலை**

***இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்***
***பகுதி விகுதி பகுத்து இடை நின்றதை***
***வினைப்பெயர் அல்பெயர்க்கு இடைநிலை எனலே.***

அறிவுடையோரால் செய்யப்பட்ட இலக்கியத்தைக் கண்டு அதற்கு அவ்விலக்கியத்தின் அமைதியையே இலக்கணமாகக் கூற வேண்டும். ஆதலால் பகுதியையும் விகுதியையும் பிரித்து நடுவில் நின்றதை வினையாலணையும் பெயர் அல்லாத பெயர்களுக்கு இடைநிலை என்று சொல்லுக.

| | | |
|---|---|---|
| அறிஞன், கவிஞன் | - | ஞ் இடைநிலை |
| ஓதுவான், பாடுவான் | - | வ் இடைநிலை |
| இடைச்சி, வலைச்சி | - | ச் இடைநிலை |
| வண்ணாத்தி, பாணத்தி | - | த் இடைநிலை |

## வினை இடைநிலை

### இறந்தகால இடைநிலை

***தடற ஒற்று இன்னே ஐம்பால் மூவிடத்து***
***இறந்த காலம் தரும்தொழில் இடைநிலை.***

தகர, டகர, றகர ஒற்றுக்களும் இன் என்னும் குற்றொற்றும் ஐம்பால் மூவிடத்தும் இறந்த காலத்தைத் தரும் வினைப்பகுபத இடைநிலைகள் ஆகும். (எ-டு)

| | | |
|---|---|---|
| பார்த்தான், நடந்தான் | - த் | இடைநிலை |
| உண்டான், கொண்டான் | - ட் | இடைநிலை |
| சென்றான், தின்றான் | - ற் | இடைநிலை |
| உறங்கினான், எழுதினான் | - இன் | இடைநிலை |

### நிகழ்கால இடைநிலை

***ஆநின்று கின்று கிறுமூ இடத்தின்***
***ஐம்பால் நிகழ்பொழுது அறைவினை இடைநிலை.***

ஆநின்று, கின்று, கிறு ஐம்பால் மூவிடத்தும் நிகழ்காலத்தைத் தரும் வினைப்பகுபத இடைநிலைகளாகும்.

**(எ.டு)**

நடவா நின்றான் (ஆநின்று)
நடக்கின்றான் (கின்று) நடக்கிறான் (கிறு)

### எதிர்கால இடைநிலை

***பவ்வ மூவிடத்து ஐம்பால் எதிர்பொழுது***
***இசைவினை இடைநிலை யாம்இவை சிலஇல.***

பகர ஒற்றும் வகர ஒற்றும் ஐம்பால் மூவிடத்தும் எதிர்காலத்தைத் தரும் வினைப்பகுபத இடைநிலைகளாம்.

**(எ.டு)**

புகு + ஆன் - புக்கான், நக்கான், பெற்றான், விட்டான்.
ஓடியது – (ஓடு + இ (ன்) + அது) -இன் கடைக்குறைந்து காலம் காட்டியது
போனது – (போ+ (இ)ன் + அது) – முதற்குறைந்து இறந்தகாலம் காட்டியது.

### காலம் காட்டும் விகுதிகள்

இடைநிலை, பகுதி ஆகியவை அன்றி விகுதியும் காலம் காட்டும். விகுதிகள் முக்காலங்களைக் காட்டுவதோடு ஒருமை, பன்மையையும் காட்டும்.

*றவ்வொடு உகர உம்மைநிகழ்பு அல்லவும்*
*தவ்வொடு இறப்பும் எதிர்வும் டவ்வொடு*
*கழிவும் கவ்வோடு எதிர்வும் மின்ஏவல்*
*வியங்கோள் இம்மார் எதிர்வும் பாந்தம்*
*செலவோடு வரவும் செய்யும்நிகழ்பு எதிர்வும்*
*எதிர்மறை மும்மையும் ஏற்கும் ஈங்கே.*

று, றும் இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் காட்டும். து, தும் இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் காட்டும். டு, டும் இறந்த காலத்தைக் காட்டும். கு, கும் எதிர்காலத்தைக் காட்டும். மின் விகுதியும் முன்னிலையேவல் விகுதிகளும், வியங்கோள் விகுதிகளும் இ விகுதியும் மார் விகுதியும் எதிர்காலத்தைக் காட்டும். 'ப' விகுதி இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் காட்டும். செய்யும் என்னும் வாய்பாட்டு முற்று விகுதி நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் காட்டும். எதிர்மறை ஆகார விகுதி. மூன்று காலத்தையும் காட்டும்.

**(எ.டு)**

சென்று (சென்றேன்) சென்றும் (சென்றோம்) - இறந்தகாலம்
சேறு (செல்வேன்) சேறும் (செல்வோம்) - எதிர்காலம்
வந்து (வந்தேன்) வந்தும் (வந்தோம்) - இறந்தகாலம்
வருது (வருவேன்) வருதும் (வருவோம்) – எதிர்காலம்
உண்கு (உண்பேன்); உண்கும் (உண்போம்) - எதிர்காலம்
உண்மின்; உண்ணீர்; உண்ணும் - எதிர்காலம்

இகர விகுதி, எழுத்துப் பேறாக வருகின்ற தகர மெய்யின் மேல் ஏறிவரும். இவ்விகுதி சென்றி (செல்+ற்+இ); செல்லாநின்றி (செல்+ஆநின்று+இ) என இறந்தகால, நிகழ்கால இடைநிலைகளோடு சேர்ந்து வரும் போது அவ்விடை நிலைகள் காலம் காட்டலால் இகரவிகுதி காலம் காட்டாது.

இச்சூத்திரத்தில் காலங்காட்டும் விகுதிகள் கூறப்பெற்றன. இவையே அல்லாமல் பகுதிகளும் வேறு இடைநிலைகளும் காலம் காட்டுதலும் உண்டு.

**(எ.டு)**

புக்கான் - புகு+ ஆன் - புகு என்னும் பகுதி இரட்டித்து இறந்த காலம் காட்டியது
தொட்டான் - தொடு +ஆன் - தொடு என்னும் பகுதி இரட்டித்து இறந்தகாலம் காட்டியது.

இடைநிலைகளில் ஆகிடந்து, ஆவிருந்து என்னும் இடைநிலைகள் நிகழ் காலத்தையும், இசின், ம், மன் என்னும் இடைநிலைகள் இறந்த காலத்தையும் காட்டும்.

**(எ.டு.)**

போயது; உண்ணாகிடந்தான்; உண்ணாவிருந்தான்: என்றிசினோர், என்மர்; என்மனார்.

**தற்சமம்**

ஆரிய மொழியில் இருந்து வந்து தமிழில் வழங்கும் சொற்கள் வடசொற்கள் எனக் கூறப்படும். அவை தமிழுக்கும் ஆரியத்திற்கும் உரிய பொதுவெழுத்தால் ஆகி எவ்விதத் திரிபும் இன்றி அப்படியே வழங்கும். அதனைத் தற்சமம் (அதற்குச் சமமானது) என்பர்.(எ.டு) அமலம், உருவம், காரணம்.

**தற்பவம்**

தமிழுக்கும் ஆரியத்திற்கும் உரிய பொது எழுத்துக்களாலும் ஆரியத்திற்கே உரிய சிறப்பு எழுத்துக்களாலும் ஆகித் தமிழ் ஒலிப்பிற்கேற்ப மாற்றி வழங்கப்படுவது தற்பவம் (அதிலிருந்து பிறந்தது) எனப்படும். (எ.டு) ஹரன்-அரன்; ஹரி - அரி.

**வடமொழியாக்கம்**

**பொதுவிதி**

***இடையில் நான்கும் ஈற்றில் இரண்டும்***
***அல்லா அச்சுஜ வருக்கம் முதல் ஈறு***
***யவ்வாதி நான்மை ளவ்வாகும் ஜஜம்***
***பொதுவெழுத்து ஒழிந்தநால் ஏழும் திரியும்.***

ஆரிய மொழியுள் அச்சு என்று வழங்கப்படும் உயிரெழுத்துக்கள் பதினாறு. அவற்றுள் ஏழாம் உயிர்முதல் நான்கும் (7,8,9,10), ஈற்றில் நின்ற இரண்டும் (15,16) ஆகிய ஆறும் ஒழிந்த பத்து எழுத்துக்களும் (ஆ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஓ,ஔ) இரு மொழிகளுக்கும் பொது.

ஆரிய மொழியுள் அல் என வழங்கும் மெய்யெழுத்துக்கள் 37. அவற்றுள் க, ச, ட, த, ப என்னும் ஐந்தில் ஒவ்வொன்றுக்கும் அமைந்த நான்கு வருக்கத்தில், முதலில் உள்ள க, ச, ட, த, ப என்னும் ஐந்தும் அவற்றை அடுத்து நிற்கும் ங, ஞ, ண, ந, ம என்னும் ஐந்தும், ய, ர, ல, வ என்னும் நான்கும், ள என்னும் ஒன்றும் ஆகிய பதினைந்தும் இரு மொழிகளுக்கும் பொது. (க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ள) ஆக உயிர் என்றும் மெய் என்றும் கூறப்பெறுகின்ற இருபத்தைந்து எழுத்துக்களும்

தமிழுக்கும் ஆரியத்துக்கும் பொதுவானவை. அவை நீங்கிய இருபத்தெட்டு எழுத்துக்கள் ஆரியத்துக்குரிய சிறப்பெழுத்துக்களாகும். இவை தமிழில் வந்து வழங்கும் போது தமிழ் ஒலிப்பிற்கேற்பத் திரிந்து வழங்கப்பெறும்.

ஆரியத்துக்கும் தமிழுக்கும் பொதுவெழுத்தால் ஆகித் தமிழில் இயல்பாக வந்து வழங்கும் வடமொழியைத் தற்சமம் எனபர்.

**(எ.டு)**

அமலம், கமலம், குங்குமம் முதலியன.

ஆரியத்திற்கே உரிய சிறப்பெழுத்தாலும் ஆரியத்திற்கே உரிய பொதுவும் சிறப்பும் ஆகிய ஈரெழுத்தாலும் ஆகித் திரிதல் முதலிய விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் வடமொழியைத் தற்பவம் என்பர்.

**(எ.டு)**

சுகி, போகி, சுத்தி - இவை வடமொழிக்கே உரிய சிறப்பெழுத்தால் ஆன சொற்கள், தமிழுக்கு ஏற்பத் திரிந்தன.

அரன், செபம், ஞானம் - இவை பொதுவெழுத்தாலும் சிறப்பெழுத்தாலும் ஆன சொற்கள், தமிழுக்கு ஏற்பத் திரிந்தன.

**ஆரியமொழி வடமொழியாதற்குச் சிறப்பு விதி**

***அவற்றுள்***
***ஏழாம்உயிர் இய்யும் இருவும்ஐ வருக்கத்து***
***இடையில் மூன்றும் அவ்வம் முதலும்***
***எட்டே யவ்வும், முப்பது சயவும்***
***மேலொன்று சடவும் இரண்டு சதவும்***
***மூன்றே யகவும் ஐந்திரு கவ்வும்***
***ஆஈறு ஐயும் ஈ ஈறு இகரமும்***

திரிந்து வரும் என்ற சிறப்பெழுத்துக்களுள் ஏழாம் உயிரெழுத்து, ‘இகர’மாகவும் ‘இரு’ ஆகவும் திரியும். ஐந்து வருக்கங்களிலும் இடையில் நின்ற மும்மூன்று எழுத்துக்களும் அவ்வவ் வருக்கத்தின் முதலில் நின்ற எழுத்தாகத் திரியும்: எட்டாம் மெய்யாகிய எழுத்து, மொழியின் இடையில் யகரமாகத் திரியும்: முப்பதாம் மெய்யாகிய எழுத்து, மொழிக்கு முதலில் சகரமாகவும் மொழிக்கு இடையில் சகர யகரங்களுள்

ஒன்றாகவும் திரியும். முப்பத்தொன்றாம் மெய்யெழுத்து. மொழிக்கு முதலில் சகரமாகவும், மொழிக்கு இடையில் டகரமாகவும் திரியும். முப்பத்திரண்டாம் மெய், மொழிக்கு முதலில் சகரமாகவும், மொழிக்கு இடையில் சகர தகரங்களுள் ஒன்றாகவும் திரியும் முப்பத்து மூன்றாம் மெய்யெழுத்து, மொழிக்கு முதலில் அகரமாகவும் மொழிக்கு இடையிலும், இறுதியிலும் ககரமாகவும் திரியும். முப்பத்தைந்தாம் மெய்யெழுத்து, இரண்டு ககரங்களாகத் திரியும். பொதுவெழுத்துக்களில் மொழியிறுதியில் வரும் ஆகாரம் ஐகாரமாகவும், ஈகாரம் இகரமாகவும் திரியும்.

**(எ.டு)**

இடபம், மிருகம் - ஏழாம் உயிர், இகரமும் இருவும் ஆயிற்று.

1. ஏழாம் உயிர் எழுத்து ரு (ர்) இ, இரு ஆதல்
   ர்ஷபம் -இடபம்; மிர்கம் - மிருகம்
2. க, ச, ட, த, ப எழுத்துக்கள் 2, 3, 4 ஆகியவை முதலெழுத்தாதல்
   2 3 4 1 1 1
   நகம். நாகம், மேகம் - நகம், நாகம், மேகம்
3. 8 ஆம் மெய் (ஜ) யகரம் ஆதல்
   பங்கஜம் - பங்கயம்
4. 30-ஆம் மெய் (Sa) மொழிமுதல் சகரம், இடையில் சகர, யகரம் ஆதல்
   Saங்கரன் - சங்கரன்; பாSaம் பாசம்; தேSaம் : தேயம்
5. 31 ஆம் மெய் (ஷ) மொழிமுதல் சகரம், இடை, ஈறு டகரம் ஆதல்
   ஷண்முகம் - சண்முகம், விஷம் - விடம், பாஷை - பாடை
6. 32 ஆம் மெய் (ஸ) மொழிமுதல் சகரம்; இடை, ஈறு சகரம், தகரம் ஆதல். ஸபை – சபை, மாஸம் - மாசம், மாதம்
7. 33-ஆம் மெய் (ஹ) மொழி முதல் அகரம், இடை, ஈறு ககரம் ஆதல்
   ஹரன் - அரன்; மோஹம் - மோகம்; மஹீ – மகீ

### மொழி முதலாகாச் சமற்கிருதச் சொற்கள் தமிழாதல்

***ரவ்விற்கு அம்முதல் ஆம்முக் குறிலும்,***
***லவ்விற்கு இம்முதல் இரண்டும், யவ்விற்கு***
***இய்யும் மொழிமுத லாகிமுன் வருமே.***

ர, ல, ய என்னும் மெய்களை முதலிற்கொண்ட ஆரிய மொழிகள் தமிழில் வரும்போது பின்வருமாறு திரியும். ரகத்திற்கு முன் அ, இ, உ வரும். லகரத்திற்கு முன் இ, உ வரும், யகரத்திற்கு முன் இகரம் வரும்.

**(எ.டு)**

அரங்கம், இராமன், உரோமம் - ரகரத்தின் முன் அ, இ, உ வந்தன.
இலாபம், உலோபன் - லகரத்தின் முன் இ, உ வந்தன.
இயக்கன் - யகரத்தின் முன் இகரம் வரும்.

### சொற்களின் இடையில் திரிதல்

***இணைந்தியல் காலை யரலக்கு இகரமும்***
***மவ்வக்கு உகரமும் நகரக்கு அகரமும்***
***மிசைவரும் ரவ்வுழி உவ்வும் ஆம்பிற***

ஆரிய மொழியில் இரண்டு எழுத்துக்கள் சேர்ந்து ஒரு எழுத்தைப் போல் நடக்கும்போது பின்னிற்கும் ய, ர, ல என்னும் எழுத்துக்களுக்கு முன் இகரம் வரும்; மகர, வகரங்களின் முன் உகரம் வரும், நகரத்தின் முன் அகரம் வரும். இணைந்து முன் நிற்கும் ரகர மெய்யின் முன் உகரம் வரும்.

**(எ.டு)**

தியாகம், வாக்கியம், கிரமம், வக்கிரமம், கிலேசம், சுக்கிலம் - ய, ர, ல முன் இகரம் வந்தது.
பதுமம், பக்குவம் - ம, வ முன் உகரம் வந்தது.
அரதநம் - ந முன் அகரம் வந்தது.
அருத்தம் - ரகரத்தின் பின் உகரம் வந்தது.

### தமிழுக்குரிய சிறப்பெழுத்துக்கள்

***ற ன ழ எ ஒவ்வும் உயிர்மெய் உயிரளபு***
***அல்லாச் சார்பும் தமிழ்பிற பொதுவே.***

முதலும் (30) சார்புமாக (10) விளங்கும் தமிழ் எழுத்துக்கள் நாற்பது. அவற்றுள் ற, ன, ழ, எ, ஒ இவ்வைந்து முதல் எழுத்துக்களும் உயிர்மெய், உயிரளபெடை அல்லாத எட்டுச் சார்பெழுத்துக்களும் தமிழுக்கே உரிய சிறப்பெழுத்துக்களாகும்.

**தமிழ் ஆரியப் பொது எழுத்துக்கள்**

உயிர் : அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ (10)
மெய் : க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ள (15)

**தமிழ்ச் சிறப்பெழுத்துக்கள்**

| | | |
|---|---|---|
| முதல்; (உயிர்) எ, ஒ; (மெய்) ழ, ற,ன | - | 5 |
| சார்பு; உயிர்மெய், உயிரளபெடை நீங்கியவை | - | 8 |
| | | **15** |

**ஆரியச் சிறப்பெழுத்துக்கள்**

| | | |
|---|---|---|
| உயிர் : ரு, ரூ, லு, லூ, அம், அ: | - | 6 |
| மெய் : க ச ட த ப வருக்கம் | - | 15 |
| ளகரத்தின் முன் 4 பின் 3 | - | 7 |
| | | **28** |

## அலகு - 4

# உயிரீற்றுப் புணரியல்

இரு சொற்கள் ஒன்றாகப் பொருந்தி நிற்பதே புணர்ச்சி ஆகும். நின்ற சொல்லின் ஈற்று எழுத்தோடு வரும் சொல்லின் முதல் எழுத்துப் பொருந்தி நிற்பதைப் புணர்ச்சி என்பர். இப்புணர்ச்சி மூன்றாகப் (உயிரீறு, மெய்யீறு, உருபு) பாகுபடுத்தப்பட்டுள்ளது. சொல்லின் இறுதியில் உயிர் எழுத்துக்களை உடைய நிலைமொழி நிற்க அதனுடன் உயிரையோ, மெய்யையோ முதலாக உடைய வருமொழிகள் வந்து புணர்வதைக் கூறுவதால் இவ்வியல் உயிரீற்றுப் புணரியல் என வழங்கப்படுகிறது. இதன்கண் அமைந்த நூற்பாக்கள் 53. இவ்வியலில் புணர்ச்சியைப் பற்றிய விளக்கமும் பொதுப் புணர்ச்சியைப் பற்றிய செய்திகளும் கூறப்படுகின்றன.

### புணர்ச்சி

***மெய்உயிர் முதல்ஈ றாம்இரு பதங்களும்***
***தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்***
***பொருளில் பொருந்துழி நிலைவரு மொழிகள்***
***இயல்பொடு விகாரத்து இயைவது புணர்ப்பே***

மெய்யையும், உயிரையும் ஈறாக உடைய பகாப்பதம் அல்லது பகுபதம் நிலைமொழியாக நிற்கும். அவற்றுள் ஒன்றை முதலாக உடைய வருமொழியோடு அல்வழிப் பொருளிலோ வேற்றுமைப் பொருளிலோ இயல்பாகவும் வேற்றுமை அடைந்தும் பொருந்துவது புணர்ச்சி ஆகும்.

**(எ.டு)**

தமிழ் - மெய்ம்முதல் மெய்யீறு
அறிவு - உயிர் முதல் உயிரீறு
பணி - மெய்ம்முதல் உயிரீறு
அவன் - உயிர் முதல் மெய்யீறு
இயல்பு, இயற்கை, தன்மை என்பன ஒருபொருட் சொற்கள்.
விகாரம், செயல், செயற்கை, விதி, என்பன ஒருபொருட் சொற்கள்.

### புணர்ச்சி வகைகள்

சொற்கள் புணருகின்ற போது வேற்றுமைப் பொருண்மையிலும் அல்வழிப் பொருண்மையிலும் புணரும். இதன் காரணமாகப் புணர்ச்சி வேற்றுமைப் புணர்ச்சி என்றும் அல்வழிப் புணர்ச்சி என்றும் இரு வகைப்படும்.

## வேற்றுமை, அல்வழிப் புணர்ச்சிகள்

*வேற்றுமை ஐம்முதல் ஆறாம்; அல்வழி*
*தொழில் பண்பு உவமை உம்மை அன்மொழி*
*எழுவாய் விளி ஈர் எச்சம்முற்று இடை உரி*
*தழுவு தொடர்அடுக்கு எனஈர் ஏழே.*

வேற்றுமைப்புணர்ச்சியாவது; ஐ, ஆல், கு, இன், அது, கண் என்னும் ஆறு உருபுகளும் மறைந்தாயினும் வெளிப்பட்டாயினும் வரப் பதங்கள் பொருந்தும் தொடர்ச்சியாகும்.

அல்வழிப் புணர்ச்சியாவது: வினைத்தொகையும், பண்புத்தொகையும், உவமைத் தொகையும், அன்மொழித்தொகையும், எழுவாய்த் தொடரும், விளித்தொடரும், பெயரெச்சத் தொடரும், வினையெச்சத் தொடரும், தெரிநிலை வினைமுற்றுத் தொடரும், குறிப்பு வினைமுற்றுத் தொடரும், இடைச் சொற்றொடரும், உரிச்சொற்றொடரும், அடுக்குத் தொடரும் எனப் பதங்கள் பொருந்தும் தொடர்ச்சி பதினான்கு ஆகும்.

**(எ.டு)**

| **வேற்றுமைத் தொகை** | **உருபு** | **வேற்றுமை விரி** |
|---|---|---|
| பாடம் படித்தான் | (ஐ) | பாடத்தைப் படித்தான் |
| கல்லெறிந்தான் | (ஆல்) | கல்லால் எறிந்தான் |
| கொற்றன்மகன் | (கு) | கொற்றனுக்கு மகன் |
| மலை வீழருவி | (இன்) | மலையின் வீழருவி |
| சாத்தன் கை | (அது) | சாத்தனது கை |
| குன்றக் கூகை | (கண்) | குன்றத்தின்கட் கூகை |

அல்வழிப் புணர்ச்சி; வேற்றுமையுருபு அல்லாத வழியில் புணர்வது. இது தொகைநிலைத் தொடர், தொகாநிலைத் தொடர் என இரண்டு வகைப்படும்.

1. கொல்யானை - வினைத்தொகை
2. கருங்குவளை - பண்புத் தொகை
3. மதிமுகம் - உவமைத் தொகை
4. இராப்பகல் - உம்மைத் தொகை
5. பொற்றொடி - அன்மொழித்தொகை

இவை ஐந்தும் தொகைநிலைத் தொடர்கள்.

| | | |
|---|---|---|
| வேலன் வந்தான் | - | எழுவாய்த்தொடர் |
| வேலா வா | - | விளித் தொடர் |
| வந்த வேலன் | - | பெயரெச்சத் தொடர் |
| வந்து போனான் | - | வினையெச்சத் தொடர் |
| வந்தான் வேலன் | - | தெரிநிலை வினைமுற்றுத் தொடர் |
| பெரியன் வேலன் | - | குறிப்பு வினைமுற்றுத் தொடர் |

| | | |
|---|---|---|
| மற்றொன்று | - | இடைச் சொற்றொடர் |
| நனிபேதை | - | உரிச்சொற்றொடர் |
| பாம்பு பாம்பு | - | அடுக்குத்தொடர் |

**இயல்பு புணர்ச்சி**

***விகாரம் அனைத்தும் மேவலது இயல்பே.***

சொற்கள் புணரும் போது எவ்வித மாற்றமும் பொருந்தாமல் அமைவது இயல்பு புணர்ச்சி ஆகும்.

(எ - டு) (பொன்+மலை) பொன்மலை;
(ஒளி+மணி) ஒளிமணி.

நிலைமொழியின் ஈற்றில் நிற்கும் மெய்யும் வருமொழியின் முதலில் வரும் உயிரும் சேர்ந்து உயிர்மெய்யாய் நிற்பதும் இயல்பு புணர்ச்சி ஆகும்.

(எ-டு) ஆல்+இலை -ஆலிலை.

**விகாரம்**

இருமொழிகள் புணரும் போது இடையில் தோன்றும் மாறுபாடுகளே புணர்ச்சி விகாரம் அல்லது விகாரப் புணர்ச்சி எனப்படும். அவை மூன்று வகைப்படும்.

**விகாரப் புணர்ச்சி**

***தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்***
***மூன்றும் மொழிமூ இடத்தும் ஆகும்.***

இருமொழிகளுக்கு இடையில் மெய், உயிர், உயிர்மெய், சாரியை ஆகியவற்றுள் ஒன்றும் பலவும் தோன்றுதலும் திரிதலும் கெடுதலும் விகாரம் ஆகும். இம்மூவகை விகாரமும் முதல், இடை, கடை என்னும் மூன்று இடங்களிலும் வரும்.

(எ-டு) பூ+கொடி - பூக்கொடி, பூங்கொடி (வருமொழி முதலில் மெய் தோன்றின)
பல்+தலை - ப.்.றலை (இருமொழியிலும் ல்,த் திரித்தன)
நிலம்+வளையம் - நிலவளையம் (நிலைமொழி இறுதி கெட்டது)
ஆறு + பத்து - அறுபது (முதல் ஆ. அ எனத் திரிந்தது)
பல+ பொருள் - பல்பொருள் (நிலைமொழி அகரம் கெட்டது)
நாழி + உரி - நாடுரி (ழி கெட்டது; ட் தோன்றியது)
பனை+காய் - பனங்காய் (அம் சாரியை தோன்றியது)
இவ் விகாரங்கள் நிலைமொழி, வருமொழி ஆகிய இரண்டிலும் அமையும்.

## செய்யுள் விகாரம்

**வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்**
**விரித்தல் தொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி**

மெல்லொன்றை வல்லொற்று ஆக்குதலும், வல்லொற்றை, மெல்லொற்று ஆக்கலும், குற்றெழுத்தை நெட்டெழுத்து ஆக்கலும், நெட்டெழுத்தைக் குற்றெழுத்து ஆக்கலும், இல்லாத எழுத்தை வருவித்தலும், உள்ள எழுத்தை நீக்குதலும் செய்யுளிலக்கணத்தை நோக்கி வேண்டுமிடத்து வரும்.

| | | |
|---|---|---|
| 1.மெல்லெழுத்து வல்லெழுத்தாதல் | - | குறுத்தாட் பூதம் - குறுந்தாள் என்பதில் 'நீ' 'த்' ஆனது. |
| 2. வல்லெழுத்து மெல்லெழுத்தாதல் | - | தண்டையின் இனக்கிளி கடிவோள் - தட்டை என்பதில் 'ட்' 'ண்' ஆனது. |
| 3. குறில் நெடில் ஆதல் | - | போத்தறார் புல்லறிவினார். 'பொ' என நிற்க வேண்டியது 'போ' என நீண்டது. |
| 4. நெடில் குறிலாகி நிற்றல் | - | நன்று என்றேன் தியேன் என்பதில் 'தீ' தி எனக் குறிலானது. |
| 5. இடையில் உள்ள எழுத்துக்கள் விரிந்து நிற்றல் | - | நெல் விளையும்மே' விளையுமே என்பதில் மகரம் விரிந்தது. |
| 6. எழுத்து மறைந்து வருதல் | - | 'சிறியிலை' சிறிய இலை என்பதில் உள்ள யகரம் மறைந்து நின்றது. |

## குறைச் சொற்கள்

செய்யுள்களில் சொற்கள் முழுமையாக நில்லாமல் அசை, சீா, தளைகளுக்காகக் குறைந்து நிற்கும். அவை குறைச்சொற்கள் எனப் பெயா பெறும்.

***ஒருமொழி மூவழிக் குறைதலும்அனைத்தே***

மொழியின் முதல், இடை, கடை என்னும் மூன்று இடங்களில் குறைந்து வருதலும் செய்யுள் விகாரம் ஆகும். (எ.டு)

| | | |
|---|---|---|
| 1. முதலெழுத்துக் குறைந்து நிற்பது | - | 'மரைமலர்' தாமரை என்பதில் உள்ள 'தா' குறைந்தது. |
| 2. இடையெழுத்துக் குறைந்து நிற்பது | - | 'ஓதி முது போத்து' ஓந்தி என்பதில் உள்ள 'ந்' குறைந்தது. |
| 3. ஈற்றெழுத்துக் குறைந்து நிற்பது | - | 'நீல் உண் துகிலிகை' நீலம் என்பதில் 'அம்' குறைந்தது. |

## புணர்ச்சி விகாரத்தில் வரும் ஐயத்தைப் போக்குதல்

*ஒரு புணர்க்கு இரண்டு மூன்றும் உறப்பெறும்*

ஒரு புணாச்சிக்கு இரண்டு, மூன்று விகாரங்களும் வரப்பெறும்

**(எ.டு)**

தமிழ் + செல்வம் = தமிழ்ச்செல்வம் - தோன்றல் என்னும் ஒரு விகாரம்.

நிலம் + பனை = நிலப்பனை – தோன்றல், கெடுதல் ஆகிய இரண்டு விகாரங்கள்.

பனை + காய் = பனங்காய் - கெடுதல், தோன்றல், திரிதல் ஆகிய மூன்று விகாரங்கள்.

## பொதுப்புணர்ச்சி

உயர்திணை, அ ்.றிணை என்னும் இருதிணை, ஐம்பால், அல்வழி, வேற்றுமை ஆகியவற்றிற்குப் பொதுவாக அமையும் புணர்ச்சி பொதுப்புணர்ச்சி.

*எண்மூ எழுத்துஈற்று எவ்வகை மொழிக்கும்*
*முன்வரு ஞநமய வக்கள் இயல்பும்*
*குறில்வழி யத்தனி ஐந்நொது முன்மெலி*
*மிகலுமாம் ணளனல வழிநத் திரியும்*

இருபத்து நானகு எழுத்துக்களையும் இறுதியாக உடைய பெயர், வினை, இடை, உரி ஆகிய எல்லா வகைச் சொற்களும் நிலைமொழியாக நிற்க ஞ, ந, ம, ய, வ ஆகிய எழுத்துக்கள் வந்தால் இயல்பாய் முடியும். குறிலை அடுத்த யகரத்தின் முன்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின்னும் வரும் ஞ, ந, ம மிக்கு முடியும். ண, ன, ல, ள முன்வரும் நகரம் திரியும்.

(எ-டு)

| | |
|---|---|
| விள+ஞான்றது - விளஞான்றது (எ.தொ) அல்வழி<br>விள+ ஞாற்சி - விளஞாற்சி<br>(6ஆம் வேற்றுமைத்தொகை) | இயல்பு |
| மெய் +ஞானம் - மெய்ஞ்ஞானம் (ப.தொ)<br>நொ + நாகா - நொந்நாகா (வி.தொ) | மெல்லினம் மிகுதல் |
| மண் + நன்று - மண்ணன்று<br>பொன் + நன்று - பொன்னன்று (எ.தொ.) | நகரம் திரிதல் |

**பொதுப்பெயர், உயர்திணைப் பெயர் முன் நாற்கணம் புணர்தல்**
(நாற்கணமாவன வன்கணம், மென்கணம், இடைக்கணம், உயிர்க்கணம்)

***பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கள் ஈற்றுமெய்***
***வலிவரின் இயல்பாம் ஆவி யரமுன்***
***வன்மை மிகாசில விகாரமாம் உயர்திணை.***

இருதிணைக்கும் பொதுவான பெயர், உயர்திணைப் பெயர் ஆகியவற்றின் முன்னர் வல்லெழுத்து வந்தால் இயல்பாகும். உயிரீற்றின் முன்னும் ய, ர முன்னும் வல்லெழுத்து வரின் இயல்பாகும். மெய், உயிர் ஈற்று உயர்திணைப் பெயர்கள் நாற்கணங்களோடும் புணரும் இடத்து விகாரப் படுவனவும் சில உள.

**(எ-டு)**

சாத்தன்+குறியன் - சாத்தன் குறியன்
சாத்தன்+குறிது - சாத்தன் குறிது } பொதுப்பெயர் இயல்பு

நம்பி+குறியன் - நம்பி குறியன்
சாத்தி + பெரியள் - சாத்தி பெரியன் } உயிரீறு உயர்திணையில் இயல்பு

சாந்தி+பெரிது - சாத்தி பெரிது - உயிரீறு அ∴றிணையில் இயல்பு

தாய்+பெரியள் - தாய் பெரியள்
தாய்+ பெரிது - தாய் பெரிது } யகர ஈறு இருதிணையிலும் இயல்பு

அவர் + பெரியர் – அவர் பெரியர்
ஒருவர் + குறியர் – ஒருவர் குறியர்
கபிலன் + பரணன் - கபிலபரணர்
(கபிலனும் பரணனும் - உ.தொ) } ரகர ஈறு உயர்திணையில் இயல்பு

ஆசீவகர் + பள்ளி - ஆசீவகப்பள்ளி
(ஆசீவகர்க்கு உரிய பள்ளி)
4 ஆம்வே.உ.ப.உ.தொகை. } திரிபு

**வினா, விளிப் பெயர் முன் வல்லினம் இயல்பாதல்**

**ஈற்றுயா வினாவிளிப் பெயர்முன் வலிஇயல்பே.**

சொல்லின் இறுதியில் வருகின்ற ஆ, ஏ, ஓ என்னும் வினாச் சொற்களின் முன்னும் யா என்னும் விளிப்பெயர் முன்னும் வல்லெழுத்து முதன் மொழி வந்தால் இயல்பாகும்.

(எ-டு).

அவனா + கொண்டான் - அவனா கொண்டான்
அவனே + கொண்டான் - அவனே கொண்டான் } இயல்பு
அவனோ + கொண்டான் - அவனோ கொண்டான்

யா + குறியன - யா குறியன
நம்பீ + கொள் - நம்பீகொள் } இயல்பு

**முன்னிலை ஏவல் முன் வல்லினம் புணர்தல்**

***ஆவி யரழ இறுதிமுன் னிலைவினை***
***ஏவல்முன் வல்லினம் இயல்பொடு விகற்பே.***

உயிர் எழுத்துக்களோடு ய.ர, ழ என்னும் மூன்று மெய்களை இறுதியில் உடைய முன்னிலை, ஏவல் வினைகளின் முன் வருகின்ற வல்லினம் இயல்போடு விகற்ப முடிபையும் பெறும்.

(எ-டு)

உண்டி + சாத்தா - உண்டி சாத்தா - முன்னிலை
கொணா + சாத்தா - கொணா சாத்தா - ஏ } இயல்பு

நட + கொற்றா - நடகொற்றா, நடக்கொற்றா
எய் + கொற்றா - எய்கொற்றா, எய்க்கொற்றா } உறழ்ச்சி
(இரு சொற்கள் புணரும் போது ஒற்றுப் பெற்றும்
பெறாமலும் அமைவதே உறழ்ச்சி (விகற்பம்) ஆகும்

**உடம்படுமெய்**

நிலைமொழியின் ஈற்று எழுத்தும் வரும்மொழியின் முதல் எழுத்தும் உயிராகவும் அமையும். அப்போது உயிரோடு உயிர்க்கு மயக்கம் இன்மையின் புணர்ச்சியின்றிச் சொற்கள் தனித்தனியே ஒலிக்கும். அவ்விரு உயிரையும் உடம்படுத்துதற் பொருட்டு இடையில் வரும் மெய் உடம்படுமெய் எனப்படும். ய், வ் என்பன உடம்படு மெய்யாகச் செயல்படும்.

**உயிரீற்றின் சிறப்புப் புணர்ச்சி**

***இஈ ஐவழி யவ்வும் ஏனை***
***உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் இருமையும்***
***உயிர்வரின் உடம்படு மெய்என்று ஆகும்.***

வருமொழியின் முதலில் உயிர் வந்தால் இ, ஈ, ஐ என்னும் எழுத்துக்களின் பின்னே 'ய' உடம்படு மெய்யாக வரும். அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் எழுத்துக்களின் பின்னே 'வ' உடம்படு மெய்யாக வரும். 'ஏ' என்பதன் பின் 'ய' 'வ' என்ற இரண்டும் உடம்படு மெய்யாக வரும்.

**(எ.டு)**

**1.நிலைமொழியில் இ, ஈ, ஐ நிற்க யகரம் தோன்றும்.**

அணி+ அழகு - அணி + ய் + அழகு - அணியழகு
தீ+ எழுந்தது - தீ+ய்+எழுந்தது - தீயெழுந்தது
அவை+அழகு - அவை+ய்+அழகு -அவையழகு

**2. பிற ஏழும் வர வகரம் தோன்றும்.**

விள+அழகு -விள + வ் + அழகு - விளவழகு
பூ+அழகி - பூ+ வ் + அழகி - பூவழகி

**3. ஏகாரம் ஈற்றில் நிற்க யகரமும் வகரமும் வரும்.**

ஏ+இவள் - ஏ+ய்+இவள் - ஏயிவள்
சே+அழகு - சே+வ்+அழகு - சேவழகு

'உயிரோடு உயிருக்கு மயக்கம் இன்மையின் வரும் உயிருக்கு உடம்பாக அடுக்கும் மெய்' என உடம்படுமெய்க்கு விளக்கம் தருகிறார் சங்கர நமச்சிவாயர். இவ்வாறு மெய்யெழுத்துத் தோன்றிப் புணரும் புணர்ச்சி இயல்பு புணர்ச்சி ஆகும்.

**வினா, சுட்டுக்களின் முன் நாற்கணமும் புணர்தல்**

***எகர வினாமுச் சுட்டின் முன்னர்***
***உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்***
***பிறவரின் அவையும் தூக்கிற் சுட்டு***
***நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே.***

எ என்னும் வினா இடைச்சொல் முன்னும் அ, இ, உ என்னும் சுட்டாகிய இடைச்சொல் முன்னும் உயிரும் யகரமும் வந்தால் வகரம் வரும். ஒழிந்த மெய்கள் வந்தால் அம்மெய்கள் மிக்கு வரும். செய்யுளில் சுட்டு நீண்டு ஒலித்தவிடத்து யகரம் மிகும்.

**(எ-டு)**

1. எ+ அணி – எ + வ் + அணி - எவ்வணி ('எ' முன் 'வ்')
   அ + அணி – அ+வ்+அணி - அவ்வணி
   இ+அணி - இ+வ்+அணி - இவ்வணி
   உ + அணி - உ+ வ்+ அணி - உவ்வணி
   (அவ்வணி, இவ்வணி, உவ்வணி – சுட்டின் முன் 'வ்')

2. அ + யானை – அ+ வ்+யானை - அவ்யானை - ய முன் வ்

அ + காலை - அ + க் + காலை - அக்காலை
எ + மலை - எ + ம் + மலை - எம்மலை
3. அ + இடை – ஆ+ ய் + இடை - ஆயிடை சு
} பிறவற்றின் முன் வந்த எழுத்தே வருதல்

**நெறிப்பட வருவன பிற**

யா+ ஙனம் - யா + ங் + ஙனம் - யாங்ஙனம் - யா முன் ங்
அ+ஙனம் - ஆ+ ங்+ ஙனம் - ஆங்ஙனம் - நீண்ட சுட்டின் முன் ங்

விண்+ அத்து+ கொட்கும் - விண் வத்துக் கொட்கும்
செல்+ உழி+ செல்க - செல்வுழிச் செல்க
சார்+ உழி+சார்ந்தாள் - சார்வுழிச் சார்ந்தாள்
இவ்வகரம் உடம்படுமெய் ஆகும்.
} இவை உயிர் வருங்கால் வகரம் பெற்றன.

**குற்றியலுகரம் முற்றியலுகரம் ஆகியவற்றின் முன் உயிரும் யகரமும் புணர்தல்**

***உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்;***
***யவ்வரின் இய்யாம்; முற்றும்அற்று ஒரோவழி.***

குற்றியலுகர ஈற்றுச்சொல் முன் உயிரை முதலாக உடைய சொல் வந்து புணரும் போது அவ் உகரம் தான் ஏறி நின்ற மெய்யை விட்டு நீங்கும். யகரத்தை முதலாக உடைய சொல்வரின் உகரம். இகரமாகத் திரியும். சில இடங்களில் முற்றியலுகரமும் இவ்விதியைப் பெறும்

**(எ-டு) குற்றியலுகரம்**

நாகு + அரிது – நாகரிது
நாகு+ இன் + வளர்ச்சி - நாகின் வளர்ச்சி
} உகரம் கெட்டது

நாடு + யாது – நாடியாது
நாகு + யாது – நாகியாது
} உகரம் இகரமாகியது

**முற்றியலுகரம்**

கதவு + அழகிது – கதவழகிது - உகரம் கெட்டது
கதவு + யாது – கதவியாது - உகரம் இகரமாகியது.

**உயிரீற்றின் முன் வல்லினம்**

***இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்***
***கசதப மிகும்; வித வாதன மன்னே.***

இயல்பினாலும் விதியினாலும் மொழிக்கு இறுதியில் நின்ற உயிர்களின் முன், சிறப்பு விதியில் எடுத்துக்கூறப்பெறாத க, ச,த, ப என்னும் எழுத்துக்கள் வருமொழியில் வந்தால் இரட்டிக்கும்.

**(எ-டு)**

| | | |
|---|---|---|
| நம்பி+கொற்றன் | - | நம்பிக்கொற்றன் (உயர்திணை) (எ.தொடர்) |
| தாரா+கடிது | - | தாராக்கடிது (அ∴றிணை) (எ.தொடர்) |
| ஆடி+ கொண்டாள் | - | ஆடிக்கொண்டான் (தெரிநிலை வினையெச்சம்) |
| இன்றி + காணார் | - | இன்றிக்காணார் (குறிப்பு வினையெச்சம்) |
| கூவிற்று+ கோழி | - | கூவிற்றுக் கோழி (தெரிநிலை வினைமுற்று) |
| குண்டு கட்டு + களிறு | - | குண்டுகட்டுக்களிறு (குறிப்பு வினைமுற்று) |
| ஆங்க+ கொண்டான் | - | ஆங்கக்கொண்டான் (இடைச்சொல்) |
| தவ + பெரியன் | - | தவப்பெரியன் (உரிச்சொல்) |
| சொன்றி+குழிசி | - | சொன்றிக் குழிசி (திசைச்சொல்) |
| கங்கை+ சடை | - | கங்கைச்சடை (வடமொழி) |
| தொ + கொற்றா | - | நொக்கொற்றா (ஓரெழுத்து ஒருமொழி) |

இயல்பு ஈறு: ஒரு சொல்லின் இறுதியில் இயல்பாக ஓர் எழுத்து நிற்பது இயல்பு ஈறாகும்.

நம்பி+ தெரு - நம்பி தெரு. இதில் நம்பி என்பதில் உள்ள இகரம் இயல்பு ஈறாகும்.

விதி ஈறு: மரம்+கிளை – மர+கிளை - மரக்கிளை. மரம் என்பது மகர ஈற்றுச் சொல்லாகும். இச்சொல்லின் முன் உயிர் முதன்மொழியோ மெய் முதன்மொழியோ வரின் நிலைமொழியில் உள்ள மகரம் கெடும் என்பது விதியாகும். மரம் என்னும் மெய்யீற்றுச் சொல் மர என விதியால் உயிர் ஈறாக நிற்பதே விதி ஈறாகும்.

**மரப்பெயர் முன் வல்லினம்**

***மரப்பெயர் முன்னர் இனமெல் லெழுத்து***
***வரப்பெறு நவும்உள வேற்றுமை வழியே.***

உயிர் ஈற்று மரப்பெயர்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் முற்கூறிய வல்லெழுத்தைப் பெறாமல் இனமான மெல்லெழுத்தைப் பெற்றும் முடியும்.

**(எ-டு)**

| | | | |
|---|---|---|---|
| விள+காய் | - | விளங்காய் | மெல்லினம் மிகுந்தது |
| மா+கொம்பு | - | மாங்கொம்பு | |
| புளி+செதிள் | - | புளிஞ்செதிள் | |
| விள+பழம் | - | விளம்பழம். | |

**அகரவீற்றுச் சிறப்பு விதி**

***செய்யிய என்னும் வினையெச்சம் பல்வகைப்***
***பெயரின் எச்சமுற்று ஆறன் உருபே***
***அஃறிணைப் பன்மை அம்மமுன் இயல்பே.***

செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம், பல வகைப்பட்ட பெயரெச்சங்கள், பலவகை வினைமுற்றுக்கள், ஆறாம் வேற்றுமை அகர உருபு, அஃறிணைப் பன்மைப் பெயர். அம்ம என்னும் உரையசை இடைச்சொல் ஆகியவற்றின் முன்னே வருகின்ற வல்லெழுத்துக்கள் இயல்பாம்.

**(எ.டு)**

உண்ணிய கொண்டான், உண்ணிய சென்றான் - செய்யிய என்னும் வினையெச்சத்தின் முன் வல்லினம் இயல்பாக வந்தது.

உண்ட குதிரை, வெளுத்த குதிரை; உற்ற குதிரை: கடிய குதிரை - பலவகைப் பெயரெச்சங்களின் முன் வல்லினம் இயல்பாக வந்தது.

உண்டன குதிரை, கரியன குதிரை, வாழிய கொற்றா - பலவகை வினைமுற்றுக்களின் முன் வல்லினம் இயல்பாக வந்தது.

தன கைகள், தன செவிகள் - ஆறாம் வேற்றுமை உருபின் முன் வலலினம் இயல்பாக வந்தது.

பல குதிரைகள், பல படித்தான், சில குணங்கள் - அஃறிணைப் பன்மைப் பெயர்களின் முன் வல்லினம் இயல்பாக வந்தது.

**வாழிய என்பதற்குச் சிறப்பு விதி**

***வாழிய என்பதன் ஈற்றின் உயிர்மெய்***
***ஏகலும் உரித்துஅஃதுஏகினும் இயல்பே.***

வாழிய என்னும் வியங்கோள் முற்றின் இறுதியிலுள்ள யகர மெய் உயிர்மெய் நீங்கலும் உரித்து. அவ்வுயிர்மெய் நீங்கி இகர இறுதி நின்றாலும் வல்லினம் வரின் பொதுவிதியினால் மிகாது சிறப்பு விதிப்படி இயல்பே ஆகும்.

**(எ.டு)**

ஆ வாழி, அந்தணர் வாழி - வாழிய என்னும் சொல்லின் ஈற்றுயிர் மெய் நீங்கியது
வாழி கொற்றா, வாழி சாத்தா - ஈற்றுயிர் மெய் நீங்கிய இடத்தும் வல்லினம் இயல்பாயிற்று.

### சாவ என்பதற்குச் சிறப்பு விதி

***சாவஎன் மொழியீற்று உயிர்மெய்சா தலும்விதி.***

சாவ என்னும் வினையெச்சத்தின் இறுதியில் உள்ள வகர உயிர்மெய் புணர்ச்சியில் கெடுதலும் விதியாகும்.

**(எ.டு)**

சாவ+குத்தினான் = சாக்குத்தினான்.

### பல, சில என்பனவற்றிற்குச் சிறப்புவிதி

***பலசில எனும்இவை தம்முன் தாம்வரின்***
***இயல்பும் மிகலும் அகரம் ஏக***
***லகரம் றகரம் ஆகலும் பிறவரின்***
***அகரம் விகற்பம் ஆகலும் உளபிற.***

பல, சில என்னும் சொற்கள் தமக்கு முன்னே தாம் வருமாயின் இயல்பாதலும், மிகுதலும், நிலைமொழி இறுதி அகரம்கெட லகரம் றகரமாகத் திரிதலும் இவ்விரு சொற்களின் முன் வல்லெழுத்தை முதலாக உடைய பிறமொழிகள் வரின் அகரம் நிற்றலும் நீங்கலும் உளவாம்.

**(எ.டு)**

பல + பல = பலபல; சில + சில = சிலசில - வல்லினம் இயல்பாயிற்று.
பல + பல = பலப்பல: சில + சில = சிலச்சில - வல்லினம் மிகுந்தது.
பல + பல = பற்பல; சில + சில = சிற்சில - அகரம் கெட லகரம் றகரமாயிற்று.

பலகலை, பல்கலை; பல தாழிசை, ப∴றாழிசை, பல ஞானம். பன்ஞானம், பலவணி, பல்லணி, பலவாயம், பல்லாயம் - பிறசொற்கள் வர அகரம் விகற்பமாயிற்று.

### ஆகார வீற்றுச் சிறப்பு விதி

***அல்வழி ஆமா மியரமுற்று முன்மிகா***

அல்வழிப் புணர்ச்சியில், ஆ. மா, மியா, ஆகார ஈற்று அ∴றிணைப் பன்மை வினைமுற்று, ஆகார ஈற்று எதிர்மறை வினைமுற்று ஆகியவற்றின் முன் வல்லினம் வரின் இயல்பாகும்.

**(எ.டு)**

ஆ குறிது, மா குறிது - ஆ. மா முன் வல்லினம் இயல்பாயிற்று (மா விலங்கு).

கேண்மியா கொற்றா, கேண்மியா சாத்தா - மியா என்னும் முன்னிலையசை முன் வல்லினம் இயல்பாயிற்று.

உண்ணா குதிரைகள், உண்ணா செந்நாய்கள் - எதிர்மறை வினைமுற்று முன் வல்லினம் இயல்பாயிற்று.

உண்ணாக் குதிரைகள் எனப் பொதுவிதியால் மிகுமாயின் உண்ணா என்பது உண்ணாத என்பதன் தகர இறுதி குறைந்த எதிர்மறைப் பெயரெச்சம் ஆகும்.

ஆமா என்று கூறியமையால் காட்டுப்பசு எனவும் பொருள்படும். எனவே ஆமா என்னும் பெயர் முன்னும் வல்லினம் மிகாது.

**(எ.டு)**

ஆமா குறிது, ஆமா சிறிது.

'முற்று முன்மிகா' என்றமையால், அருத்தாபத்தியால், அவ்வினையாலணையும் பெயர் முன்னும். அவ்வினை முற்று வினையெச்சம் ஆகியவற்றின் முன்னும் வல்லினம் மிகாது.

**(எ.டு.)**

உண்ணா கிடந்தன. உண்ணா சென்றான்.

**செய்யுளில் ஆகார ஈற்றுச் சொற்புணர்ச்சி**

***குறியதன் கீழ்ஆக் குறுகலும் அதனோடு***
***உகரம் ஏற்றலும் இயல்பும்ஆம் தூக்கின்.***

செய்யுளில் குற்றெழுத்தின் பின் நின்ற ஆகாரம் குறுகி அகரம் ஆகும். அந்த அகரத்துடன் உகரம் பெறும். இவ்விரண்டுமின்றித் தன்னியல்பில் நிற்கும். இம்மூன்று விதியையும் பெறும்.

**இகரவீற்றுச் சிறப்பு விதி**

***அன்றி இன்றிஎன் வினைஎஞ்சு இகரம்***
***தொடர்பினுள் உகர மாய்வரின் இயல்பே.***

அன்றி, இன்றி, என்னும் குறிப்பு வினையெச்சங்களின் இறுதியில் உள்ள இகரம் செய்யுளில் உகரமாய்த் திரிந்தால் வரும் வல்லினம் இயல்பாகும்.

**(எ-டு.)**

நானன்று போகி - (அன்றி + போகி)
உப்பின்று புற்கைஉண்மா - (இன்றி+புற்கை)

உகரமாகத் திரியாவிட்டால் அன்றிப்போகி, இன்றிப் புற்கை என வல்லினம் மிகும்.

**நாழி, உரி என்பனவற்றுக்குச் சிறப்பு விதி**

***உரிவரின் நாழியின் ஈற்றுயிர் மெய்கெட***
***மருவும் டகரம் உரியின் வழியே***
***யகர உயிர்மெய்யாம் ஏற்பன வரினே.***

உரி என்னும் அளவுப் பெயர் வருமொழியாக வந்தால் நிலைமொழியில் நின்ற நாழி என்னும் அளவுப்பெயரின் இறுதியிலுள்ள ழி என்னும் உயிர்மெய் கெடும். அவ்விடத்தில் டகர மெய் தோன்றும். உரி என்னும் அளவுப்பெயர் நிலைமொழியாக நிற்குமானால் ஏற்ற வருமொழி வர யகர உயிர்மெய் தோன்றும்.

**(எ.டு)**

நாழி + உரி = நாடுரி
உரி + உப்பு = உரியஉப்பு

**புளி என்பதற்குச் சிறப்பு விதி**

***சுவைப்புளி முன்இன மென்மையும் தோன்றும்.***

சுவையை உணர்த்தும் புளி என்னும் சொல்லுக்கு முன் வல்லினம் மிகுதலே அன்றி அதற்கினமான மெல்லினமும் மிகும்.ஸ

(எ.டு) புளி + கறி = புளிங்கறி
புளி + சோறு = புளிஞ்சோறு
புளி + தயிர் = புளிந்தயிர்
புளி + பாளிதம் = புளிம்பாளிதம்

**இகர, ஐகாரவீற்றுச் சிறப்பு விதி**

***அல்வழி இஐம் முன்னர் ஆயின்***
***இயல்பும் மிகலும் விகற்பமும் ஆகும்.***

இகர, ஐகார ஈற்றுப் பெயர்களுக்கு முன் வல்லினம் வருமாயின் இயல்பாக முடியும், பொதுவிதிப்படி மிக்கு முடியும், மிகுந்தும் மிகாமலும் விகற்பமாக முடியும்.

**(எ.டு)**

1. புலி + சிறிது = புலிசிறிது - எழுவாய்த் தொடர்
   யானை + குதிரை = யானைகுதிரை - உம்மைத் தொகை இவை இயல்பாயின.
2. மாசி + திங்கள் = மாசித்திங்கள் - பண்புத்தொகை
   பனை + கை = பனைக்கை - உவமைத் தொகை இவை மிக்கன.
3. கிளி + குறிது = கிளிகுறிது: கிளிக்குறிது
   தினை + குறிது = தினைகுறிது, தினைக்குறிது
   இவை எழுவாயில் விகற்பித்தன

## ஈகார ஈற்றுச் சிறப்பு விதி

### ஆப்பீ முன் வல்லினம்

*ஆமுன் பகரஈ அனைத்தும் வரக்குறுகும்*
*மேலன அல்வழி இயல்பா கும்மே.*

ஆப்பீ என்னும் சொல் முன் அல்வழி, வேற்றுமை ஆகிய இருவழிகளிலும் நாற்கணமும் வந்தால் இறுதி எழுத்து குறுகும். அவ்வாறு குறுகிய இகரம் அல்வழியில் இயல்பாக முடியும்.

**(எ.டு)**

ஆப்பீ + அரிது = ஆப்பியரிது
ஆப்பீ + குளிரும் = ஆப்பிகுளிரும் (அல்வழி)
ஆப்பீ + நன்று = ஆப்பிநன்று
ஆப்பீ + வலிது = ஆப்பிவலிது (வேற்றுமை)

### பீ, நீ, மீ புணரும் இலக்கணம்

*பவ்வீ நீ மீ முன்னர் அல்வழி*
*இயல்பாம்; வலிமெலி மிகலுமாம் மீக்கே*

பீ, நீ, மீ, என்னும் சொற்களின் முன் வருகின்ற வல்லினம் அல்வழியில் இயல்பாகும். மீ என்னும் சொல்லின் முன் வல்லினம் வரின் வல்லினமும் மிகும். மெல்லினமும் மிகும்.

(எ.டு) பீ + குறிது = பீகுறிது
நீ + குறியை = நீ குறியை
மீ + கண் = மீ கண் இவை அல்வழியில் இயல்பாயின.
மீ + கூற்று = மீக்கூற்று (வல்லினம் மிகுந்தது)
மீ + தோல் = மீந்தோல் - (மெல்லினம் மிகுந்தது)

## உகர ஈற்றுச் சிறப்பு விதி

உகரத்தை ஈறாக உடைய சொற்கள் நிலைமொழியாக நின்று வருமொழிகளோடு புணரும் புணர்ச்சியே உகர ஈற்றுச் சிறப்பு விதியாகும். உகரம் முற்றுகரம், குற்றுகரம் என இருவகைப் படுவதால் விதிகளும் அவற்றிற்கேற்ப அமைக்கப்பெற்றுள்ளன.

### முற்றுகர ஈற்றுச் சொற் புணர்ச்சி

***மூன்றுஆறு உருபுஎண் வினைத்தொகை சுட்டுஈறு***

***ஆகும் உகரம் முன்னர் இயல்பாம்.***

முற்றுகரத்தை ஈறாகக் கொண்ட மூன்றாம் வேற்றுமை உருபு (ஒடு) ஆறாம் வேற்றுமை உருபு (அது) முற்றுகர ஈற்று எண்ணுப் பெயர்கள் (ஒரு, இரு, அறு, ஏழு) வினைத்தொகை (அடு, விடு) சுட்டுப் பெயர் (அது, இது) ஆகியவற்றின் முன் வல்லினம் வர இயல்பாகும்.

**(எ-டு)**

அவனொடு+சென்றான் - அவனொடு சென்றான் (மூன்றாம் வேற்றுமை)
முருகனது+கை - முருகனது கை (ஆறாம் வேற்றுமை)
ஏழு+தலை - ஏழுதலை (இயல்பான எண்ணுப்பெயர்)
(ஒன்று) ஒரு+கை - ஒருகை (விகார எண்ணுப்பெயர்)
அடு+களிறு - அடுகளிறு (வினைத்தொகை)
அது+கண்டான் - அதுகண்டான் (சுட்டுப்பெயர்)

உதுகாண், உதுக்காண் என முற்றியலுகர ஈறு உறழ்ச்சி முடிவு. இது ‘இயல்பாயும் விகாரமாயும்’ (நன். நூ. 255) என்னும் சூத்திரத்துள் அன்ன பிறவும் என்பதனால் அமையும்.

### அது என்பதற்கு உரிய சிறப்பு விதி

***அதுமுன் வரும்அன்று ஆன்றாம் தூக்கின்.***

அது என்னும் சுட்டுப்பெயர் முன் வருமொழியாய் நிற்கும் அன்று என்னும் குறிப்பு வினைமுற்றுச் சொல்லின் அகரம் செய்யுளில் நீண்டு முடியும்.

**(எ-டு)**

அது+அன்று – அது+ஆன்று - அதான்று

அதுவன்று, அதன்று என வருவனவற்றையும் கொள்க. இவ்விதி இது, உது என்னும் சுட்டுப்பெயர்களுக்குப் பொருந்தாது.

### குற்றுகர ஈற்றுச் சிறப்பு விதி

***வன்தொடர் அல்லன முன்மிகா அல்வழி.***

வன்தொடர் எஞ்சிய பிற குற்றியலுகரத் தொடர்களில் அல்வழியில் ஒற்று மிகாது இயல்பாய் முடியும்.(எ-டு)

நாகு + கடிது -நாகு கடிது (நெடில் தொடர்)
எ்.கு+ கடிது - எ்.கு கடிது (ஆய்தத் தொடர்)

வரகு + கடிது - வரகு கடிது (உயிர்த் தொடர்)
குரங்கு + கடிது – குரங்கு கடிது (மென்த் தொடர்)
தெள்கு + கடிது – தெள்கு கடிது (இடைத் தொடர்)
கொக்கு + கடிது – கொக்குக் கடிது (வன் தொடரில் மிக்கது)
எடுத்து + கொண்டான் – எடுத்துக் கொண்டான் (வன்தொடரில் மிக்கது)

**குற்றுகர ஈற்று வேற்றுமைப் புணர்ச்சி**

***இடைத்தொடர் ஆய்தத் தொடர் ஒற்று இடையின்***
***மிகாநெடில் உயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை***

இடைத்தொடர், ஆய்ததொடர், ஒற்று இடை மிகா நெடில்தொடர். உயிர் தொடர் என்னும் நான்கின் முன் வரும் வல்லினம் வேற்றுமைப் புணர்ச்சிக் கண் மிகாது இயல்பாய் முடியும்.

**(எ.டு)**

1. தெள்கு + கால் - தெள்கு கால்
2. எ∴கு + கடுமை - எ∴கு கடுமை
3. நாகு + கால் - நாகு கால்
4. வரகு + கதிர் - வரகுகதிர்
5. கொக்கு+கால் - கொக்குக்கால் (வன்தொடரில் மிக்கது)
6. குரங்கு+குட்டி - குரங்குக்குட்டி (மென்தொடரில் மிக்கது)

வன்தொடர், மென்தொடர்களில் வேற்றுமையில் வல்லெழுத்து மிகும்.

**புணர்ச்சியில் ஒற்று இரட்டுதல்**

***நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுள்***
***டறஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே.***

ட, ற என்னும் குற்றியலுகர ஈறுகளைக் கொண்ட நெடில் தொடர், உயிர்த்தொடர் முன் வல்லினம் வர வேற்றுமைப் பொருள் புணர்ச்சியில் நிலைமொழியீற்று வல்லெழுத்துக்களின் ஒற்று இரட்டும்.

**(எ.டு)**

ஆடு + கால் - ஆட்டுக்கால்
பாறு + கால் - பாற்றுக்கால் (பாறு - பருந்து)
முருடு+கால் - முருட்டுக்கால் (முருடு - இசைக்கருவி)
முயிறு + கால் - முயிற்றுக்கால் (முயிறு -எறும்பு)
சிறுபான்மை ஒற்று இரட்டாது.
நாடு+கிழவோன் - நாடு கிழவோன்

அல்வழியில் காடு + அரண் - காட்டரண்
களிறு + யானை – களிற்றுயானை
எனச் சிறுபான்மை ஒற்று இரட்டியது } இருபெயரொட்டுப் பண்புத்தொகை

வெருகு + கண் - வெருக்குக் கண் (வெருகு – காட்டுப்பூனை)
எருது + கால் - எருத்துக்கால்
க், த் என்னும் பிற எழுத்துக்கள் இரட்டின.

**மென்றொடர் குற்றியலுகரப் புணர்ச்சி**

***மென்றொடர் மொழியுள் சிலவேற் றுமையில்***

***தம்மினம் வன்றொடர் ஆகா மன்னே***

மென்தொடர் குற்றியலுகரச் சொற்களுள் சில வேற்றுமைப் புணர்ச்சிக் கண் வன்தொடர் குற்றியலுகரங்களாக மாறும். எனவே பெரும்பான்மையான சொற்கள் வன்தொடர் குற்றியலுகரம் ஆகாவாம். வருமொழி வரையறுத்துக் கூறாமையின் நான்கு கணமும் கொள்க.

**(எ-டு)**

மருந்து + பை - மருத்துப்பை; சுரும்பு + நாண் - சுருப்பு நாண்,
கரும்பு+வில் -கருப்புவில்; கன்று + ஆ - கற்றா

வண்டுக்கால், பந்துத்திரட்சி - இவை வேற்றுமையில் வன்தொடர் ஆகாதவை. அல்வழியிலும் சில வன்தொடர் ஆதலும் உண்டு.

**(எ-டு)**

என்பு+உடம்பு - எற்புடம்பு (பண்புத்தொகை)
அன்பு + தளை - அற்புத் தளை (பண்புத் தொகை)
குரங்கு + மனம் - குரக்குமனம் (உவமைத் தொகை)

**உகர ஈறு ஐகாரச் சாரியையைப் பெறுதல்**

***ஐஈற்று உடைக்குற் றுகரமும் உளவே.***

ஐகாரச் சாரியையை ஈற்றில் பெற்று வரும் மென்தொடர் குற்றியலுகர மொழிகளும் சில உண்டு.

**(எ.டு)**

**அல்வழி**

பண்டு+காலம் - பண்டைக்காலம்; இன்று + நாள் - இற்றைநாள்
அன்று+கூலி - அற்றைக்கூலி; இன்று + நலம் - இற்றை நலம்
நேற்று+பொழுது - நேற்றைப்பொழுது
என வன்தொடர் குற்றியலுகரம் ஐகார ஈறு பெற்றது.

## திசைப்பெயர்க்குச் சிறப்பு விதி

திசைப் பெயர்கள் அனைத்தும் குற்றியலுகர ஈற்றுப் பெயர்கள் ஆகும். அத்திசைப் பெயர்களின் முன் திசைப் பெயர்களும் பிற பெயர்களும் வருமொழியாய்ப் புணர்வதே குற்றியலுகர ஈற்றுத் திசைப்புணர்ச்சி ஆகும்.

***திசையொடு திசையும் பிறவும் சேரின்***
***நிலைஈற்று உயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்***
***றகரம் னலவாத் திரிதலும் ஆம் பிற.***

திசைச் சொல்லொடு திசைச் சொல்லும் பிற சொற்களும் புணரும். அவ்விடத்து நிலைமொழி ஈற்றில் நின்ற உயிர்மெய்யும் (கு) அதன் பக்கத்தில் இருக்கும் மெய்யும் (க்) கெடும். கெடாது நின்ற றகர ஒற்று (ற்) னகர மெய்யாகவும் (ன்) லகர மெய்யாகவும் (ல்) திரிபடையும்.

**(எ-டு)**

1. வடக்கு + கிழக்கு - வட+கிழக்கு - வடகிழக்கு
   வடக்கு + மலை – வட+ மலை – வடமலை } ஈற்றெழுத்துக் (க்கு) கெட்டன.

2. தெற்கு + கிழக்கு - தெற்+கிழக்கு - தென்கிழக்கு - றகரம் னகரமாயிற்று
   மேற்கு+கடல் - மேற் + கடல் - மேல்கடல் - றகரம் லகரமாயிற்று

3. பிற என்றமையால்
   மேற்கு + திசை - மேற்+திசை - மேற்றிசை, மேலைத்திசை
   வடக்கு+ ஊர் - வடக்கூர்; தெற்கு + ஊர் - தெற்கூர்
   கிழக்கு +மேற்கு + தெற்கு + வடக்கு - கீழ்மேல் தென் வடல்

## தெங்கு என்பதற்குச் சிறப்பு விதி

***தெங்குநீண்டு ஈற்றுஉயிர் மெய்கெடும் காய்வரின்.***

காய் என்னும் சொல் வருமொழியாக வருகின்ற பொழுது தெங்கு என்னும் நிலைமொழியின் முதல் எழுத்து நீளும். இறுதியில் உள்ள உயிர்மெய் (கு) நீங்கும்.

**(எ.டு)**

தெங்கு + காய் - தேங்கு+காய் - தேங் + காய் - தேங்காய்

## குற்றியலுகர எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி

ஒன்று முதல் பத்து ஈறாகிய எண்ணுப்பெயர்களுள் ஏழ் என்பது நீங்கலாகிய அனைத்தும் குற்றியலுகர எண்ணுப் பெயர்களாகும். இவை நிலைமொழியாக நின்று புணரும்போது அடையும் மாற்றங்களே எண்ணுப் பெயர்ப் புணர்ச்சியாகும்.

### எண்ணுப் பெயர்களுக்குச் சிறப்பு விதி

***எண்நிறை அளவும் பிறவும் எய்தின்***
***ஒன்று முதல்எட்டு ஈறாம் எண்ணுள்***
***முதல்ஈர் எண்முதல் நீளும்; மூன்றுஆறு***
***ஏழ்குறு கும் ஆறு ஏழ்அல் லவற்றின்***
***ஈற்றுஉயிர் மெய்யும் ஏழன் உயிரும்***
***ஏகும் ஏற்புழி என்மனார் புலவர்.***

எண்ணுப் பெயரும் நிறைப்பெயரும் அளவுப் பெயரும் பிற பெயரும் வருமொழியாக வந்தவிடத்து நிலைமொழியாக நிற்கும் ஒன்று முதல் எட்டு ஈறாம் எண்கள் திரியும். ஒன்று, இரண்டு முதல் நீளும், மூன்று ஆறு, எழு முதல் குறுகும். ஆறு, ஏழு நீங்கிய பிற எண்களின் ஈற்றில் நின்ற உயிர்மெய்யும், ஏழு என்னும் எண்ணின் ஈற்று உயிரும் கெடும். இவை ஏற்கும் இடங்களில் பொருந்துமெனச் சொல்லுவர் புலவர்.

**(எ.டு)**

1. ஒன்று - ஒரு - ஓர்
   இரண்டு - இரு - ஈர் } முதல் இரு எண்களின் முதல் நீண்டன.
2. மூன்று + வட்டி - முவ்வட்டி
   ஆறு + கலம் - அறுகலம்
   ஏழு + கடல் - எழுகடல் } மூன்று, ஆறு, ஏழு முதல் குறுகின
3. ஒன்று - ஒன்; இரண்டு - இரண்;
   நான்கு - நான்; ஐந்து -ஐந்;
   எட்டு - எண் } ஈற்று உயிர்மெய் கெட்டன
4. ஏழு – ஏழ் - - ஈற்று உயிர் கெட்டது
5. இரண்டு படி; மூன்று படி;
   நான்கு பொருள்; ஏழு கடல் } தன்னியல்பில் புணர்ந்தன

குற்றியலுகரத்தோடு ஏழு என்னும் முற்றியலுகரத்திற்கும் ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல் என்னும் உத்தியான் விதி கூறப்பட்டது.

**ஒன்று, இரண்டு என்பனவற்றிற்குச் சிறப்பு விதி**

***ஒன்றன் புள்ளி ரகரம் ஆக***
***இரண்டன் ஒற்றுஉயிர் ஏகஉவ் வருமே.***

பொதுவிதிப்படி ஈறுகெட்டு நின்ற ஒன்று என்பதில் உள்ள னகர ஒற்று ரகர ஒற்றாகத் திரியும். இரண்டு என்பதில் உள்ள ணகர மெய்யும் ஒற்றை ஊர்ந்த அகரமும் கெடும். அவ்விரு ரகரத்தோடும் உகரம் பொருந்தும். மேல் உகரம் பெறும். இரண்டு என்பதில் உள்ள ணகர மெய்யும் ரகரம் ஊர்ந்த அகரம் கெட உகரம் வரும். ஸ

**(எ-டு)**

| | |
|---|---|
| ஒன்று + ஆயிரம் = ஓராயிரம் | ஒன்று என்பது முதல் |
| ஒன்று + கலம் = ஓர்கலம் | நீண்டு ஈற்று உயிர் |
| ஒன்று + நாழி = ஓர்நாழி | மெய் கெட்டு னகரம் |
| ஒன்று + யானை = ஓர்யானை | ரகர மாயிற்று |
| இரண்டு + ஆயிரம் = ஈராயிரம் | இரண்டு என்பது |
| இரண்டு + கலம் = ஈர்கலம் | முதல் நீண்டு ஈற்று |
| இரண்டு + நாழி = ஈர்நாழி | உயிர் மெய்யும் கெட்டு ணகரம் |
| இரண்டு + யானை = ஈர்யானை | அகர உயிரும் கெட்டது. |

**மூன்று**

***மூன்றன்உறுப் பழிவும் வந்ததும் ஆகும்.***

இறுதி மெய் கெட நின்ற மூன்றனது னகர மெய் கெடும். ஏற்ற எழுத்தாகத் திரிதலும் உண்டு.

**(எ-டு)**

மூன்று + ஆயிரம் - மூன் - மூ - மூவாயிரம் (னகரக்கேடு)
மூன்று+ மொழி - மூன் - மூ+மு - மும்மொழி (னகரம் வருமெழுத்தாதல்)
மூன்று+ யானை - மூன் - மூ+ மு- முவ்யானை (வகரத்திரிபு)

**நான்கு**

***நான்கன் மெய்யே லறஆ கும்மே.***

இறுதி உயிர்மெய் கெட நான்கனது னகரமெய் லகரமாயும் றகரமாயும் திரியும். உயிரும் இடையினமும் வர லகரமாகும். வல்லினம் வர றகரம் ஆகும்.

**(எ-டு)**

1. நான்கு +ஆயிரம் - நான் - நால் - நாலாயிரம்
நான்கு+ வழி - நான் - நால் - நால்வழி - னகரம் லகரமாயிற்று

2. நான்கு+கவி - நான் - நாற் - நாற்கவி - னகரம் றகரமாயிற்று
3. நான்கு+ மணி - நான் - நான்மணி (இயல்பு)

**ஐந்து**

***ஐந்தன்ஒற்று அடைவதும் இனமும் கேடும்.***

இறுதிக் கேடுற்ற ஐந்து என்பதன் மெய் வருகின்ற மெய்யாகத் திரியும். அதற்கு இனமாகவும் மாறும், கெட்டும் முடியும்.

**(எ-டு)**

1. ஐந்து + மூன்று = ஐந் - ஐம்- ஐம்மூன்று (வருமெய்யாதல்)
2. ஐந்து+கழஞ்சு+ஐந் - ஐங் - ஐங்கழஞ்சு (இனவெழுத்தாதல்)
3. ஐந்து+ஆயிரம் - ஐந் - ஐ - ஐயாயிரம் (கெடுதல்)
4. ஐந்து + நூறு -ஐந் - ஐந்நூறு (இயல்பாதல்)

**எட்டு**

***எட்டன் உடம்புணவ் ஆகும் என்ப.***

இறுதி உயிர்கெட்டு நின்ற எட்டு என்பதன் டகர ஒற்று ணகர ஒற்றாகத் திரியும்.

**(எ-டு)**

எட்டு + பத்து -எட் - எண் - எண்பது
எட்டு + குணம் - எட் - எண் - எண்குணம்

**ஒன்பது**

***ஒன்பா னொடுபத்தும் நூறும் ஒன்றின்***
***முன்னதின் ஏனைய முரணி ஒவ்வொடு***
***தகரம் நிறீஇப் ப.்.து அகற்றி னவ்வை***
***நிரலே ணளவாத் திரிப்பது நெறியே.***

ஒன்பது என்னும் எண் நிலைமொழியாய் நிற்கப் பத்து, நூறு ஆகிய இரண்டும் புணருமாயின் நிரல் நிறையாய்ப் பத்தை நூறாக்க வேண்டும். நூறை ஆயிரமாக்க வேண்டும். நிலைமொழியின் ஒகர உயிர்க்குத் தகரமெய்யை ஆதாரமாக நிறுத்திப் ப.்.து என்பதைக் கெடுக்க வேண்டும். ஒன் என்பதில் உள்ள னகர ஒற்றை ணகர ஒற்றாயும் ளகர ஒற்றாயும் திரிப்பதே முறையாகும்.

**(எ-டு)**

1. ஒன்ப.்.து + பத்து - ஒன்ப.்.து + நூறு -த் + ஒன் (ப.்.து)
   தொன் - தொண் + நூறு - தொண்ணூறு
2. ஒன்ப.்.து + நூறு - ஒன்ப.்.து + ஆயிரம் - த்+ஒன் (ப.்.து)
   தொன் - தொள் + ஆயிரம் - தொள்ளாயிரம்

**பத்துப் புணர்தல்**

***முதல்இரு நான்காம் எண்முனர்ப் பத்தின்***
***இடைஒற்று ஏகல் ஆய்தம் ஆகல்***
***எனஇரு விதியும் ஏற்கும் என்ப.***

ஒன்று முதல் எட்டு எண்களின் முன் பத்து வருமொழியாய் வரின் அதன் நடுவில் உள்ள தகர ஒற்று ஒருகால் கெடும். அவ்விடத்து ஆய்தம் வருதலும் உண்டு என்னும் இவ்விரண்டு விதியையும் ஏற்கும் என்று சொல்லுவர் புலவர்.

**(எ.டு)**

ஒன்று+பத்து - ஒரு + பது - ஒருபது
ஒன்று + பத்து –ஒரு + பது - ப.்.து – ஒரு - ப.்.து
எட்டு + பத்து - எண் + பது - எண்பது
எட்டு + பத்து - எண் + பது - ப.்.து - எண்ப.்.து.

**பது, ப.்.து ஈற்று எண்களின் புணர்ச்சி**

***ஒருப.்.து ஆதிமுன் ஒன்றுமுதல் ஒன்பான்***
***எண்ணும் அவைஊர் பிறவும் எய்தின்***
***ஆய்தம் அழியஆண்டு ஆகும் தவ்வே.***

ஒருப.்.து முதலிய எட்டு எண்களின் முன்னர் ஒன்று முதலாக ஒன்பது எண்ணும் அவற்றின் மீது ஏறி வந்த எண்களும் புணரும். நிலைமொழியில் உள்ள ஆய்தம் கெடும். அங்கு இயல்பாக இருந்த தகர ஒற்றுத் தோன்றும்.

**(எ.டு)**

இருப.்.து + ஒன்று - இருபது - இருபத்து - இருபத்தொன்று
இருபது + ஒன்று - இருபத்து - இருபத்தொன்று.

**பத்து, ஒன்பதின் முன் பிற எண்கள்**

***ஒன்றுமுதல் ஈரைந்து ஆயிரம் கோடி***
***எண்நிறை அளவும் பிறவரின் பத்தின்***
***ஈற்றுஉயிர் மெய்கெடுத்து இன்னும் இற்றும்***
***ஏற்பது ஏற்கும் ஒன்பதும் இனைத்தே.***

ஒன்று முதல் பத்து, ஆயிரம், கோடி ஆகிய எண், நிறை, அளவுப் பெயர்களும் பிற பெயர்களும் வருமொழியாய் வரும். அவ்விடத்து நிலைமொழியாய் நின்ற பத்து என்பதன்

ஈற்று உயிர் மெய் கெட்டு இன் சாரியையோ இற்றுச்சாரியையோ பெறும். இதைப்போல ஒன்பது நிலைமொழியாய் நிற்க இன்னையோ இற்றையோ சாரியையாகப் பெறும்.

**(எ-டு)**

பத்து + ஒன்று - பத் + இன் -பதின் - பதினொன்று
பத்து + ஒன்று - பத் + இற்று - பதிற்று - பதிற்றொன்று
பத்து + ஆயிரம் - பத்+இன் -பதின் - பதினாயிரம்
பத்து + ஆயிரம் - பத்+ இற்று - பதிற்று - பதிற்றாயிரம்.

### பத்து முன் இரண்டு புணர்தல்

***இரண்டு முன்வரின் பத்தின்ஈற்று உயிர்மெய்***
***கரந்திட ஒற்றுனவ் ஆகும் என்ப.***

இரண்டு என்னும் எண் வருமொழியாய் வரின் பத்து என்னும் நிலைமொழியின் ஈற்று உயிர்மெய் கெடும். தகர ஒற்று னகர ஒற்றாகத் திரியும் என்று சொல்லுவர் புலவர்.

**(எ-டு)**

பத்து + இரண்டு - பத் + பன் - பன்ன்- பன்னிரண்டு

### இரட்டிக்கும் எண்கள்

***ஒன்பது ஒழித்தஎண் ஒன்பதும் இரட்டின்***
***முன்னதின் முன்னல ஓட உயிர்வரின்***
***வவ்வும் மெய்வரின் வந்ததும் மிகல்நெறி.***

ஒன்பது என்னும் எண் ஒழிந்த எஞ்சிய ஒன்று முதலாகிய பத்து எண்களை இரட்டித்துக் கூறின் நிலைமொழியின் முதல் எழுத்து ஒன்று நிற்க ஏனைய கெடும். உயிர் முதலான எண்வரின் வகர ஒற்றுத் தோன்றும். மெய் முதலான எண் வரின் வந்த ஒற்று மிகுதல் நெறியாகும்.

**(எ-டு)**

ஒன்று + ஒன்று - ஒ - ஒவ் - ஒவ்வொன்று
இரண்டு + இரண்டு - இ - இவ் - இவ்விரண்டு
மூன்று + மூன்று - மு - மும் - மும்மூன்று
பத்து + பத்து - ப - பப் - பப்பத்து
நான்கு + நான்கு - நந்நான்கு (நா,ந எனக் குறுகியது)
ஐந்து + ஐந்து - ஐவைந்து (ஒற்று இரட்டாமை)
ஒன்று + ஒன்று - ஓர் - ஒரோஒன்று; ஒன்றொன்று
கழஞ்சு + கழஞ்சு - கழக் - கழக்கழஞ்சு
கலம் + கலம் - கல கலக்-கலக்கலம்.

## ஊகார ஈற்றுச் சிறப்பு விதி

***பூப்பெயர் முன்இன மென்மையும் தோன்றும்.***

பூ என்னும் ஊகார ஈற்று ஓரெழுத்து ஒருமொழி பலபொருள் பெயர்ச்சொல். இச்சொல் முன் வல்லினம் வரின் அது மிகுவதே அல்லாது அதற்கு இனமாகிய மெல்லினமும் மிகும்.

**(எ.டு)**

பூ+ கொடி - பூங்கொடி
பூ + சோலை - பூஞ்சோலை

பூ என்னும் சொல் மலர் என்னும் பொருள்படின் பூவை உடைய கொடி என இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை ஆகும். பொலிவு (அழகு) எனப் பொருள் கொண்டால் பூவாகிய கொடி எனப் பண்புத் தொகையாம். மென்மையும் என்னும் உம்மையால் பூக்கொடி என வல்லெழுத்தும் பெறும். வலிமிகுதலே பெரும்பான்மையாம். பூ + கூடை = பூக்கூடை.

## ஏகார, ஓகார ஈற்றுச் சிறப்பு விதி

***இடைச்சொல் ஏஓ முன்வரின் இயல்பே.***

இடைச்சொல்லான ஆறு ஏகாரத்தின் முன்னும் (நூ.42) எட்டு ஓகாரத்தின் முன்னும் (நூ. 423) வல்லினம் வரின் பொது விதியான வல்லினம் பெறாமல் இயல்பாய் முடியும்.

**(எ-டு)**

அவனே+கொண்டான் - அவனே கொண்டான்
அவனோ+ கொண்டான் - அவனோ கொண்டான்

## ஐகார ஈற்றுச் சிறப்பு விதி

ஐகார ஈற்றுச் சொற்கள் நிலைமொழியாய் நின்று வருமொழிகளோடு புணரும் புணர்ச்சியைக் கூறுவது ஐகார ஈற்றுச் சிறப்பு விதியாகும்.

***வேற்றுமை ஆயின் ஐகான் இறுமொழி***
***ஈற்றுஅழி வோடும்அம் ஏற்பவும் உளவே.***

ஐகாரத்தை ஈறாக உடைய சொல் முன் நிலைமொழியாக நின்று வருமொழியோடு வேற்றுமைப் புணர்ச்சியில் புணர ஐகாரம் கெடாது அம்முச் சாரியை பெறும். ஐகாரம் கெட்டு அம்முச் சாரியையைப் பெறுவனவும் சில உள

(எ.டு)

1. புன்னை + கானல் - அம் - புன்னையங்கானல்
   கொல்லை + சாரல் - அம் - கொல்லையஞ்சாரல்
2. வழுதுணை + காய் - வழுதுண் - அம் - வழுதுணங்காய்
   ஆவிரை + பூ - ஆவிர் + அம் - ஆவிரம்பூ

**பனை சிறப்பு விதி**

***பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரின்***
***ஐபோய் அம்மும் திரள்வரின் உறழ்வும்***
***அட்டுஉறின் ஐகெட்டுஅந் நீள்வுமாம் வேற்றுமை***

வேற்றுமைப் புணர்ச்சியில் பனை என்னும் சொல் நிலைமொழியாய் நிற்கக் கொடி என்பது வருமொழியாய் வரின் வல்லெழுத்து மிகும். ஐகாரம் கெட்டு அம்முச் சாரியை பெறுதலும், திரள் என்பது வரின் தகரம் மிகுதலும், ஐ கெட்டு அம்முச்சாரியை பெற்றுத் தம்முள் உறழ்தலும், அட்டு என்னும் பெயர் வருமாயின் நிலைமொழி ஐகாரம் கெடுதலும் வருமொழி அகரம், ஆகாரம் ஆதலும் ஆகும்.

(எ.டு)

1. பனை + கொடி – பனைக்கொடி (வலிமிகல்)
2. பனை + காய் - பன் + அம் - பனங்காய் (அம்மிகல்)
3. பனை + திரள் - பனைத்திரள் } அம் பெறாதும்
   பனை + திரள் - பன் + அம் - பனந்திரள் } பெற்றும்
4. பனை + அட்டு – பன் + அட்டு – ஆட்டு – பனாட்டு

## அலகு - 5

# மெய்யீற்றுப் புணரியல்

மெய் எழுத்துக்களை ஈறாகக் கொண்ட சொற்கள் நிலைமொழியாய் நிற்க அவற்றின் முன் உயிரையோ மெய்யையோ முதலாக உடைய சொற்கள் புணரும் புணர்ச்சியைக் கூறுவதால் இவ்வியல் மெய்யிற்றுப் புணரியல் என அழைக்கப்படுகிறது. இதன்கண் அமைந்த நூற்பாக்கள் 36.

### மெய்யீற்றின் முன் உயிர் புணர்தல்

***உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.***

நிலைமொழியின் ஈற்றில் நின்ற மெய்யின் மேல் வருமொழி முதலில் உள்ள உயிர் வந்து சேர்வது இயல்பு புணர்ச்சி ஆகும்.

**(எ-டு)**

தோன்றல்+அழகன் - தோன்றலழகன் (அல்வழி)
புகழ்+அரிது - புகழரிது

வேல்+எறிந்தான் - வேலெறிந்தான் (வேற்றுமை)

மெய்யோடு உயிர்கூடி உயிர்மெய்யாய் நிற்கும் இந்நிலை விகாரம் ஆகாது; இயல்பே ஆகும். உடலும் உயிரும் போல் மெய்யானது மாத்திரை உள்அடங்க ஒன்றுபட்டு இரட்டை இலை போல் ஒற்று ஒலி முன்னும் உயிரொலி பின்னுமாய் இணங்கி நிற்கும் சிறப்பால் ஒன்றுவது இயல்பெனக் கூறப்பட்டது.

### தனிக்குறில் முன்ஒற்று இரட்டுதல்

**தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்**

தனித்த குற்றெழுத்தின் முன்நின்ற மெய்யெழுத்து வருமொழி முதலில் உயிர்வந்தால் இரட்டிக்கும்.

**(எ.டு)**

மண் + அரிது = மண்ணரிது (அல்வழி)

பொன் + அணி = பொன்னணி (வேற்றுமை)

### மெய்யீற்றின் முன் மெய்

***தன்னொழி மெய்ம்முன் யவ்வரின் இகரம்***
***துன்னும் என்று துணிநரும் உளரே***

தன்னை (யகரத்தை) ஒழிந்த ஞ, ண, ந, ம, ன, ர, ல, வ, ழ, ள என்னும் மொழிக்கு இறுதியில் வரும் பத்து மெய்களின் முன்னும் யகரம் வந்தால் இகரச் சாரியை இடையில் வரும் என்று அரிதாகக் கொள்வாரும் சிலர் உள்ர்.

**(எ.டு)**

வேள் + யாவன் = வேளியாவன் (அல்வழி)
மண் + யானை = மண்ணியானை (வேற்றுமை)

### உகரம் பெறும் முதனிலைகள்

***ஞணநம லவளன ஒற்றுஇறு தொழிற்பெயர்***
***ஏவல் வினைநனி யவ்வல் மெய்வரின்***
***உவ்வுறும் ஏவல் உறாசில சில்வழி.***

ஞ் ண் ந் ம் ல் வ் ள் ன் என்னும் எட்டு மெய்களை இறுதியில் உடைய முதனிலைத் தொழிற்பெயரும் ஏவல் வினை முன்னும் யகரம் நீங்கிய பிற மெய்களை உடைய முதல் மொழி வருமிடத்து உகரச் சாரியையைப் பெறும். சில ஏவல் வினை சில இடங்களில் உகரச் சாரியை பெறா.

**(எ-டு)**

உரிஞ் + கடிது - உ - உரிஞுக்கடிது - அல்வழி (தொழிற்பெயர்)
உரிஞ் + கடுமை – உ - உரிஞுக்கடுமை - வேற்றுமை (உகரம் பெற்றன)
உரிஞ் + கொற்றா – உ - உரிஞுகொற்றா - ஏவல் (உகரம் பெற்றது)
உண் + கொற்றா - உண் கொற்றா; உண்ணு கொற்றா (உறழ்ச்சி)

### நகர ஈற்றுக்குச் சிறப்பு விதி

***நவ்இறு தொழிற்பெயர்க்கு அவ்வுமாம் வேற்றுமை.***

நகரத்தை ஈறாக உடைய முதனிலைத் தொழிற்பெயர் முன் உகரமே அன்றி அகரச் சாரியையும் (வேற்றுமைப்புணர்ச்சியில்) வரும்.

**(எ.டு)**

பொருந் + கடுமை -அ - பொருநக்கடுமை

பொருநுதல் - ஒருவர் மற்றொருவர் போல் வேடம் கட்டி ஆடும் தொழில்.

## ணகர, னகர ஈற்றுச் சொற்கள்

***ணனவல் லினம்வரட் டறவும் பிறவரின்***
***இயல்பும் ஆகும் வேற்றுமைக்கு; அல்வழிக்(கு)***
***அனைத்துமெய் வரினும் இயல்பா கும்மே.***

ணகர, னகாரங்கள் வேற்றுமைப்புணர்ச்சியில் வல்லினம் வந்தால் முறையே டகார, றகாரம் ஆகும். மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பாகும். அல்வழிக்கண் மூவினம் வரினும் இயல்பாகும்.

**(எ.டு)**

கண் + களிறு - கட்களிறு (கண்ணை உடையகளிறு - வேற்றுமை)
பொன் + தட்டு - பொற்றட்டு (பொன்னால் ஆகிய தட்டு - வேற்றுமை)
மண் + மாட்சி - மண்மாட்சி; பொன் + மாட்சி - பொன்மாட்சி (எ.தொ.)
மண் + பெரிது - மண் பெரிது; பொன் + பெரிது - பொன்பெரிது (எ.தொ.)

## ணகர, னகர ஈறு கெடுதல்

***குறில்அணைவு இல்லா ணனக்கள் வந்த***
***நகரம் திரிந்துழி நண்ணும் கேடே.***

குற்றெழுத்தைச் சாராத ஒரு மொழி, தொடர்மொழிகளில் ண, ன முன் நகரம் வந்தால் மயங்க விதி இல்லை. எனவே முதலில் திரிந்து இயல்பாகாமல் பின் கெடும்.

**(எ-டு)**

தூண் + நன்று - தூணன்று
பாண் + நன்று - பாணன்று } ஒரு மொழி

பசுமண் + நன்று - பசுமணன்று
செம்பொன் + நன்று - சொம்பொனன்று } தொடர் மொழி

## ணகர ஈற்றுப் புணர்ச்சிக்குச் சிறப்பு விதி

***சாதி குழூஉப்பரண் கவண்பெயர் இறுதி***
***இயல்பாம் வேற்றுமைக்கு; உணவுஎண் சாண்பிற***
***டவ்வா கலுமாம் அல்வழி யும்மே.***

சாதி, திரள் பற்றி வரும் பெயர்களிலும் பரண், கவண் என்னும் பெயர்களிலும் அமைந்த ஈற்று ணகரம் வேற்றுமைக் கண்ணும் வல்லினம் வர இயல்பாகும். எண்ணளவை அன்றி உணவிற்குரிய எண் என்னும் பெயரும் சாண் என்னும் பெயரும் வல்லெழுத்து வரின் அல்வழிக் கண்ணும் திரிந்து டகாரம் ஆகும்.

**(எ.டு)**

பாண் + குடி - பாண்குடி; - சாதிப்பெயர் உமண் + குடி - உமண்குடி – குழூஉப்பெயர்
பரண் + கால் - பரண்கால்; - பரண்பெயர் கவண் + கால் - கவண்கால் - கவண்பெயர்
எள் + கடிது - எண் -எட் - எட்கடிது
சாண்+கோல் - சாட் - சாட்கோல்
பிற என்ற மிகையால் பாண்+குடி - பாணக்குடி (அகரச்சாரியை)
அட்டுண்+ துழனி - அட்டுண்டுழனி (இயல்பு)
மண்+குடம் - மண்குடம், மட்குடம் (உறழ்ச்சி)

**னகார ஈற்றுச் சிறப்பு விதி**

***ன.்கான் கிளைப்பெயர் இயல்பும் அ.்கான்***
***அடைவும் ஆகும் வேற்றுமைப் பொருட்கே.***

னகர ஈற்றுச் சாதிப்பெயர் வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் வர இயல்பாதலும் அகரச் சாரியை பெறுதலும் உண்டு.

**(எ.டு)**

எயின்+குடி - எயின்குடி (இயல்பு)
எயின் + சேரி - அ – எயினச்சேரி(அகரச்சாரியை) } வேற்றுமை

பொருட்கே என்ற மிகையான் எயினமரபு
எயின அணி என அகரச் சாரியை பெற்றன } வேற்றுமை

எயினக்கன்னி, எயினப்பிள்ளை (பண்புத்தொகை) என அல்வழியில் அகரச் சாரியை பெற்றும் வரும்.

**மீன் என்பதற்குச் சிறப்பு விதி**

***மீன்றவ் வொடுபொரூஉம் வேற்றுமை வழியே.***

மீன் என்னும் மொழியின் இறுதி னகரம் வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லெழுத்து வர றகரத்தோடு உறழ்ந்து முடியும்.

**(எ.டு)**

மீன் + கண் - மீன்கண் (இயல்பு) மீற்கண் (திரிபு)

**தேன் என்பதற்குச் சிறப்பு விதி**

***தேன்மொழி மெய்வரின் இயல்பும் மென்மை***
***மேவின் இறுதி அழிவும் வலிவரின்***
***ஈறுபோய் வலிமெலி மிகலுமாம் இருவழி.***

தேன் என்னும் சொல் நிலைமொழியாய் நிற்க மூவின மெய்யும் வருமொழியாய் வரும். அவ்விடத்து னகரம் இயல்பாகும். மெல்லினம் வரின் இயல்பாதலே அன்றிக் கெடுதலும் உண்டு. வல்லினம் வர அவ்வெழுத்துப் பெறுதலும் இனவெழுத்துப் பெறுதலும் பொருந்தும்.

**(எ-டு)**

**அல்வழி**

தேன்+கடிது - தேன்கடிது; தேன் மாண்டது; தேன்யாது (எ.தொ)
தேன்+மொழி - தேன்மொழி; தேமொழி (உவமைத்தொகை)
தேன்+குழம்பு - தேன்குழம்பு; தேக்குழம்பு; தேங்குழம்பு (உவமைத்தொகை)

**வேற்றுமை**

தேன் + கடுமை - தேன்கடுமை; தேன்மாட்சி; தேன் யாப்பு
தேன் + மலர் - தேன் மலர், தேமலர்
தேன் + குடம் - தேன்குடம்; தேக்குடம், தேங்குடம்

தேன் என்பது பலபொருள் ஒரு சொல். அது மணம் என்னும் பொருளையும் தரும். அவ்விடத்தும் இவ்விதியைப் பொருந்தி நிற்கும். தேன்+கமழ்சோலை-தேங்கமழ்சோலை.

**எகின் என்பதற்குச் சிறப்பு விதி**

***மரம்அல் எகின்மொழி இயல்பும் அகரம்***
***மருவ வலிமெலி மிகலும் ஆகும்.***

மரத்தை அன்றி அன்னப்பறவையை உணர்த்தும் எகின் என்னும் சொல் வேற்றுமைக்கண் இயல்பாகும். அல்வழியிலும் வேற்றுமையிலும் அகரச் சாரியையைப் பொருந்த வரும். வல்லெழுத்தோ இனவெழுத்தோ மிக்கும் முடியும்.

**(எ.டு)**

1. எகின் + கால் - எகின் கால் (வேற் -இயல்பு)
2. எகின் + புள் - எகினப்புள் - எகினம்புள் (அல் -உறழ்ச்சி)
3. எகின் + கால் - எகினக்கால் - எகினங்கால் (அல் -உறழ்ச்சி)

எகின் என்பது ஒரு வகை மரத்தையும் அன்னப்பறவையையும் குறிக்கும்.

**குயின், ஊன் ஆகியவற்றிற்குச் சிறப்பு விதி**

***குயின்ஊன் வேற்றுமைக் கண்ணும் இயல்பே.***

குயின் என்னும் பெயரும் ஊன் என்னும் பெயரும் வேற்றுமைப் புணர்ச்சியிலும் வல்லினம் வர இயல்பாகும்.

**(எ-டு)**

குயின்+கடுமை - குயின் கடுமை (குயின் - மேகம்)
ஊன்+கடுமை - ஊன் கடுமை (ஊன் - தசை - இறைச்சி)

## குறில் ஒற்றுச் சொற்களின் புணர்ச்சி

***மின்பின் பன்கன் தொழிற்பெயர் அனைய***
***கன்அவ் ஏற்று மென்மையொடு உறழும்.***

மின், பின், பன், கன் என்னும் நான்கு சொற்களும் தொழிற்பெயரைப் போல யகரம் அல்லாத மெய்கள் வருமொழியாய் வரின் உகரச் சாரியையைப் பொருந்தும். கன் என்னும் சொல் வேற்றுமையில் சாரியை பெறுவதோடு வரும் வல்லெழுத்தையோ அதற்கு இனமான மெல்லெழுத்தையோ பெற்று முடியும்.

**(எ.டு)**

மின்+கடிது - மின்ன் + உ - மின்னுக்கடிது (அல்வழி)
மின்+கடுமை - மின்ன் + உ - மின்னுக்கடுமை (வேற்றுமை)
கன் + தட்டு - கன்ன் + அ - கன்னத்தட்டு - கன்னந்தட்டு (அல்வழி)
கன் + தூக்கு - கன்ன் + அ- கன்னத்தூக்கு - கன்னந்தூக்கு (வேற்றுமை)
(பன் - ஒரு வகைப்புல் ; கன் - தராசுத்தட்டு)

## குறில் ஒற்று இடச்சொற்களின் புணர்ச்சி

***தன்என் என்பவற்று ஈற்றுனவ் வன்மையொடு***
***உறழும்; நின்ஈறு இயல்பாம் உறவே.***

தன், என் என்னும் சொற்களின் இறுதியில் உள்ள னகர ஒற்று வல்லினம் வரின் றகர ஒற்றாகத் திரியும். நின் என்பதன் ஈறு திரியாமல் இயல்பாகும்.

**(எ-டு)**

தன் + பகை - தன்பகை; தற்பகை (உறழ்ச்சி)
என் + பகை என்பகை; எற்பகை (உறழ்ச்சி)
நின் + பகை - நின்பகை (இயல்பு)
தன் (தான்); என் (யான்); நின் (நீ) ஆகியவை நெடுமுதற்குறுகிய விகாரச் சொற்கள்.உறவே என்று மிகுத்துச் சொல்லியதனால்

மின் + கடிது - மின்கடிது; மின் + கடுமை - மின்கடுமை என இயல்பாக நின்றன.
மான் + குளம்பு - மான்குளம்பு; அழன் + கை - அழன் கை என வேற்றுமையில் இயல்பாயின.
வரின் + கொள்ளும் - வரிற்கொள்ளும் எனச் செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம் திரிந்தது.

## மகர ஈற்றுச் சொற்களின் முன் நாற்கணமும் புணர்தல்

***மவ்ஈறு ஒற்றழிந்து உயிர்ஈறு ஒப்பவும்***
***வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்.***

மகரத்தை ஈறாக உடைய சொற்களின் முன் நாற்கணமும் வர மகரம் கெட்டு உயிரீற்றுச் சொற்களாகிப் (விதி ஈறாகிப்) புணரும். உயிர் வரின் உடம்படுமெய் பெறும். வல்லினம் தொடரின் அவை மிகும். பிற வரின் இயல்பாகும். வல்லினம் வரின் மகரம் கெடாது அவற்றிற்கு இனமாயும் திரியும்.

**(எ.டு)**

1. வட்டம் + ஆழி - வட்ட ஆழி (மகரம் கெட்டது)
   வட்டம் + ஆழி - வட்ட ஆழி - வட்டவாழி (உடம்படுமெய்)
2. வட்டம் + கல் - வட்டக்கல் (வல்லினம் மிகுதல்)
3. மரம் + நீண்டது - மரம் நீண்டது (இயல்பு)
   நம் + கை - நங்கை; மரம் + தீது - மரந்தீது (இனமாய்த் திரிந்தன)

**மகர ஈற்றுச் சொற்களின் சிறப்பு விதி**

***வேற்றுமை மப்போய் வலிமெலி உறழ்வும்***

***அல்வழி உயிர்இடை வரின்இயல் பும்உள.***

வேற்றுமைப் புணர்ச்சியில் மகரம் கெட அவற்றின் முன் வரும் வல்லெழுத்தோ அவற்றின் இன எழுத்தோ மிகும். அல்வழியில் உயிரும் இடை இனமும் வரக் கெடாது இயல்பாகும்.

**(எ.டு)**

குளம் + கரை - குளக்கரை : குளங்கரை (உறழ்ச்சி)
குளம் + அழகிது - குளமழகிது; குளம் + யாது - குளம்யாது (இயல்பு)

**நும், தம், எம், நம் என்பனவற்றிற்குச் சிறப்புவிதி**

***நுந்தம்***

***எம்நம் ஈறாம் மவ்வரு ஞநவே.***

விகாரம் எய்திய சொற்களாகிய நும் (நீர்) தம் (தாம்) எம் (யாம்) நம் (நாம்) என்பவற்றின் இறுதியில் உள்ள மகர ஈறு வருமொழி முதலில் ஞ, ந வரின் அவையாய்த் திரியும்.

**(எ.டு)**

நும் + ஞாண் - நுஞ்ஞாண்; தம் + ஞாண் - தஞ்ஞாண்
எம் + நூல் - எந்நூல்; நம் + நூல் - நந்நூல்
மகரம் வரின் இயல்பாகும். நும் + மணி - நும்மணி

**அகம் என்பதற்குச் சிறப்புவிதி**

***அகமுனர்ச் செவிகை வரின்இடை யனகெடும்.***

அகம் என்னும் இடப்பெயர் முன்னர்ச் செவி, கை என்னும் சினைப்பெயர்கள் வந்தால் மகரம் வன்மைக்கு இனமாய்த் திரியும். நிலைமொழியின் நடுவில் உள்ள உயிர்மெய் (க) கெடும்.

**(எ.டு)**

அகம் + செவி - அம்செவி; அகம் + கை - அம்கை (இடைகெடுதல்)
அம் + செவி - அஞ்செவி; அம் + கை - அங்கை (மகரம் திரிதல்)

**ஈம்,கம், உரும் என்பனவற்றிக்குச் சிறப்புவிதி**

***ஈமும்***
***கம்மும் உருமும் தொழிற்பெயர் மானும்***
***முதலன வேற்றுமைக்கு அவ்வும் பெறுமே.***

ஈம், கம், உரும் என்னும் மகர ஈற்றுச் சொற்கள் அல்வழி, வேற்றுமை ஆகிய இருவழிகளிலும் முதல் நிலைத் தொழிற் பெயர்களைப் போல உகரச் சாரியை பெறும். ஈம், கம் என்னும் இரண்டும் வேற்றுமைக்கண் அகரச் சாரியையும் பெறும்.

கம் என்பது மண்டையோடு, காற்று, மேகம், உயிர், கம்மியர் தொழில் எனப் பலபொருள் தரும் ஒரு சொல். எப்பொருள் உணர்த்தினும் இவ்விதியைப் பெறும். உரும் - இடி; ஈம் - இறுதிச்சடங்கு

**அல்வழி (எழுவாய்த் தொடர்)**

**(எ.டு)**

| **அல்வழி** | **வேற்றுமை** |
|---|---|
| ஈம் + கடிது - ஈமுக்கடிது; | ஈம் + நீட்சி = ஈமுநீட்சி |
| கம் + நீண்டது – கம்முநீண்டது | கம்+ வன்மை = கம்முவன்மை |
| உரும் + வலிது = உருமுவலிது | உரும் + கடுமை = உருமுக்கடுமை |

- இருவழியிலும் உகரச் சாரியை பெற்றது

ஈம் + குடம் = ஈமக்குடம்
கம் + குடம் = கம்மக்குடம்

- ஈம், கம் என்பன வேற்றுமையில் அகரச் சாரியை பெற்றன.

**ய, ர, ழ, ஈறு**

***யரழ முன்னர்க் கசதப அல்வழி***
***இயல்பும் மிகலும் ஆகும் வேற்றுமை***
***மிகலும் இனத்தோடு உறழ்தலும் விதிமேல்***

ய ர ழ என்னும் இம்மூன்று ஈற்றுச் சொற்களின் முன்னர்க் கசதபக்கள் வந்து அல்வழியில் புணர, இயல்பாதலும், மிகுதலும் உண்டு, வேற்றுமையில், மிகுதலும், வல்லினமோ அதற்கு இன எழுத்தோ மிகுதலும் விதியாகும்.

**(எ.டு)**

| **இயல்பு** | **மிகுதி** |
|---|---|
| 1. வேய் + கடிது - வேய்கடிது; | மெய் + கீர்த்தி - மெய்க்கீர்த்தி, |
| 2. வேர் + சிறிது = வேர்சிறிது | கார் + பருவம் = கார்ப்பருவம் |

**தமிழ், தாழ் என்பனவற்றிற்குச் சிறப்புவிதி**

***தமிழ்அவ் உறவும் பெறும்வேற் றுமைக்கே;***
***தாழும் கோல்வந்து உறுமேல் அற்றே.***

தமிழ் என்னும் சொல்முன் நாற்கணமும் வரின் வேற்றுமைப் புணர்ச்சியில் அகரச் சாரியை பொருந்தும். தாழ் என்னும் நிலைமொழி முன் கோல் என்பது வருமொழியாய் வந்தால் அவ்அகரச் சாரியையைப் பெறும்.

**(எ-டு)**

தமிழ் + பல்லவன் - தமிழப்பல்லவன்; தமிழ் + நாகன் தமிழநாகன்
தாழ் + கோல் - தாழக்கோல் (திறவுகோல் -சாவி)
தாழைத் திறக்கும் கோல் (இரண்டாம் வே.உ.ப.உ.தொக்கதொகை)
தாழாய கோல் (இருபெயரொட்டுப் பண்புத்தொகை)

**கீழ் என்பதற்கு சிறப்புவிதி**

***கீழின்முன் வன்மை விகற்பமும் ஆகும்.***

கீழ் என்னும் சொல்லின் முன் வல்லினம் வந்தால் இயல்பாயும் மிக்கும் முடியும். உறழ்ச்சி முடிபையும் பெறும்.

**(எ.டு)**

கீழ் + குலம் - கீழ்குலம், கீழ்க்குலம்
கீழ் + படி - கீழ்படி, கீழ்ப்படி.

**லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சி**

***லளவேற் றுமையில் றடவும் அல்வழி***
***அவற்றொடு உறழ்வும் வலிவரின் ஆம்மெலி***
***மேவின் னணவும் இடைவரின் இயல்பும்***
***ஆகும் இருவழி யானும் என்ப.***

நிலைமொழி ஈற்றில் லகர, ளகர ஈறுகள் நிற்க வருமொழியில் வல்லெழுத்து வந்து வேற்றுமைப் பொருண்மையில் புணர லகரம் றகரமாகவும் ளகரம் டகரமாகவும் திரியும்.

அல்வழியில் இவை உறழ்ந்து வருவனவாம். இருவழியிலும் மெல்லினம் வரின் னகார, ணகாரங்களாய். இடையினம் வரின் இயல்பாகும் என்று சொல்லுவர் புலவர்.

**(எ.டு)**

1. கல் + குறை - கற்குறை; முள் + குறை - முட்குறை (வேற்றுமை)
2. கல் + குறிது - கற்குறிது; முள் + குறிது -முட்குறிது (அல்வழி)
3. கல் + ஞெரிந்தது - கன்ஞெரிந்தது<br>முள் + ஞெரிந்தது - முண்ஞெரிந்தது } ல, ள-ன, ண ஆகத் திரிந்தன
4. கல் + யாது - கல்யாது (இயல்பு)

**லகர,ளகரம் ஆய்தம் ஆதல்**

***குறில்வழி லளத்தவ் அணையின் ஆய்தம்***
***ஆகவும் பெறூஉம் அல்வழி யானே.***

தனிக்குறிலின் பின் நிற்கும் ல, ளக்கள் அல்வழியில் வருமொழி முதலில் தகரத்தை முதலாக உடைய சொல் வர முறையே ற, ட ஆதலோடு ஆய்தமாகவும் திரியும்.

**(எ-டு)**

கல் + தீது - கற்றீது - க.்.றீது (ல்-ற் - ∴ ஆதல்)
முள் + தீது - முட்டீது - மு.்.டீது (ள் - ட் -∴ ஆதல்)

**லகர, ளகர ஈற்றின் கேடு முதலியன**

***குறில்செறி யாலள அல்வழி வந்த***
***தகரம் திரிந்தபின் கேடும் ஈர்இடத்தும்***
***வருநத் திரிந்தபின் மாய்வும் வலிவரின்***
***இயல்பும் திரிபும் ஆவன உளபிற.***

தனிக்குறிலைச் சாராது தொடர்மொழியீற்று ல, ளக்கள் வருமொழி முதலில் தகரம் வந்து திரியும் இடத்துக் கெடும். வருமொழி முதலில் நகரம் வந்து திரியும் இடத்தும் கெடும். வல்லினம் வரின் அல்வழிக்கண் உறழாது இயல்பாகும் வேற்றுமைப்புணர்ச்சியில் திரியாமல் இயல்பாகும்.

**(எ-டு)**

1. தோன்றல் + தீயன் - தோன்றல் - றீயன் - தோன்றறீயன்
   வேள் + தீயன் - வேள் + டீயன் - வேடீயன்

2. தோன்றல் + நல்லன் - தோன்றல் - னல்லன் - தோன்றனல்லன்
வேள் + நல்லன் - வேள் + ணல்லன் - வேணல்லன்
தோன்றல் + நன்மை - தோன்றனன்மை; வேள் + நன்மை - வேணன்மை
3. கால் + கடிது – கால்கடிது; மரங்கள் + கடிய – மரங்கள் கடிய (இயல்பு)
வேல் + படை - வேற்படை; வாள் + படை – வாட்படை (திரிபு)
4. கால் + குதித்து - கால்குதித்து; வாள் + போழ்ந்து – வாள்போழ்ந்து (இயல்பு)
பிற என்று மிகுத்துச் சொல்லியதால்
தோன்றல் + தீமை - தோன்றறீமை; வேல்+தீமை - வேறீமை (வேற்றுமையில் திரியக் கெட்டது)
கால் + துணை - காற்றுணை; தாள் + துணை - தாட்டுணை (கெடாமல் நின்றது)
வில் + படை - விற்படை – (உறழாமல் திரிந்தது)
கொல் + களிறு - கொல்களிறு; கொள் + பொருள் - கொள்பொருள் (வினைத்தொகையில் இயல்பாயின)

### லகர, ளகர ஈற்றுத் தொழிற்பெயர் புணர்ச்சி

***லளஇறு தொழிற்பெயர் ஈர்இடத்தும் உவ்வுறா***
***வலிவரின் அல்வழி இயல்பும்ஆ வனஉள.***

லகார, ளகார ஈற்று விகுதி பெற்ற தொழிற்பெயரும் னகார ஈற்று முதனிலை திரிந்த தொழிற்பெயரும் அல்வழி, வேற்றுமை ஆகிய இரண்டிடத்தும் யகரம் அல்லாத மெய்கள் வரின் உகரம் பெற மாட்டா. வல்லினம் வந்தால் அல்வழியில் இயல்பாவனவும் உண்டு.

**(எ-டு)**

| | | | |
|---|---|---|---|
| ஆடல் + சிறந்தது | - | ஆடல் சிறந்தது<br>ஆடற் சிறந்தது | அல்வழியில் உறழ்ச்சி உகரம் பெறவில்லை |
| ஆடல் + நன்று<br>ஆடல் + வலிது | -<br>- | ஆடல் நன்று<br>ஆடல் வலிது | மெல், இடை இனம் உகரம் பெறவில்லை |
| ஆடல் + நன்மை<br>ஆடல் + வன்மை | -<br>- | ஆடல் நன்மை<br>ஆடல் வன்மை | வேற்றுமையில் உகரம் பெறவில்லை |

ஆடு – முதல்நிலை; அல் - விகுதி; ஆடல் என்பது தொழிற்பெயர்

| | | | |
|---|---|---|---|
| கோள் + கடிது | - | கோள்கடிது<br>கோட்கடிது | அல்வழியில் உறழ்ச்சி |
| கோள் + நன்று<br>கோள் + வலிது | -<br>- | கோணன்று<br>கோள்வலிது | மெல். இடை, இனம், உகரம் பெறவில்லை |
| கோள் + கடுமை | - | கோட்கடுமை - | வேற்றுமையில் உகரம் பெறவில்லை |

கோள் + நன்மை - கோள் நன்மை
கோள் + வன்மை - கோள் வன்மை } பிற மெய்யினம் உகரம் பெறவில்லை

கொள், கோள் எனத் திரிந்ததால் இது முதல்நிலை திரிந்த தொழிற்பெயர்

நடத்தல் + கடிது - நடத்தல் கடிது (அல்வழியில் இயல்பு)

**வல் என்னும் தொழிற்பெயர் - சிறப்பு விதி**

***வல்லே தொழிற்பெயர் அற்றுஇரு வழியும்***

***பலகைநாய் வரினும் வேற்றுமைக்கு அவ்வும் ஆம்.***

வல் என்னும் லகர ஈற்றுச் சூதாடு கருவியின் பெயர் முன் யகரம் அல்லாத மெய்கள் வந்து வேற்றுமை, அல்வழி ஆகிய இருவழியிலும் புணர உகரச்சாரியை பெறும் பலகை, நாய் என்னும் இரு பெயர்கள் வேற்றுமையில் புணர அகர, உகரச் சாரியைகளைப் பெறும்

**.(எ-டு)**

வல் + கடி - வல்லுக்கடிது (அல்வழி உகரப்பேறு)
வல் + கடுமை - வல்லுக்கடுமை (வேற்றுமை உகரப்பேறு)
வல் + பலகை - வல்லப்பலகை (வேற்றுமையில் அகரப்பேறு)
வல் + நாய் - வல்லநாய்
வல் + பலகை - வல்லுப்பலகை; வல் + நாய் வல்லுநாய் (வேற்றுமையில் உகரப்பேறு)
வல் + நாய் - வல்நாய் (வல்லாய நாய்)
(அல்வழி - இருபெயரொட்டுப் பண்புத்தொகை-இயல்பு)

**நெல், செல், கொல், சொல் இவற்றிற்குச் சிறப்புவிதி**

***நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்***

***அல்வழி யானும் றகரம் ஆகும்.***

நெல், செல், கொல், சொல் என்னும் சொற்களின் லகர ஈறுகள் அல்வழியில் வேற்றுமை போல றகரமாய்த் திரிந்து முடியும்.

**(எ-டு)**

1. நெல் + கடிது - நெற்கடிது; 2. செல் + கடிது - செற்கடிது
3. கொல் + கடிது - கொற்கடிது; 4. சொல் + கடிது - சொற்கடிது

**இல் என்னும் பண்புப்பெயர் புணர்ச்சி**

***இல்லென் இன்மைச் சொற்குஐ அடைய***

***வன்மை விகற்பமும் ஆகா ரத்தொடு***

***வன்மை ஆகலும் இயல்பும் ஆகும்.***

இன்மைப் பண்பை உணர்த்தும் இல் என்னும் சொல். ஐகாரச் சாரியையைப் பெற்று வல்லினம் மிக்கும் இயல்பாயும் முடியும். ஊறழ்ச்சி முடிவையும் பெறும். ஆகாரச்சாரியை பொருந்த வல்லெழுத்து மிகும். இவ்விரு விதியையும் பொருந்தாமல் இயல்பாதலும் உண்டு.

**(எ-டு)**

| | | |
|---|---|---|
| இல் + பொருள் | - | இல்லைப்பொருள் (ஐகாரச் சாரியை) இல்லை பொருள் |
| இல் + பொருள் | - | இல்லாப்பொருள் (ஆகாரச் சாரியை ) |
| இல் + பொருள் | - | இல்பொருள் (இயல்பு) |

**பிரகணங்கள் வரின் ஐகார, ஆகாரச் சாரியை பெறுதல்**

இல் + ஞானம் - இல்லை ஞானம்; இல்லா ஞானம்

இல் என்னும் லகர ஈற்றுச் சொல் வீடு, மனைவி, இல்லாமை எனப் பலபொருள் தரும் ஒரு சொல். ஈண்டு இல்லாமை என்னும் பண்பை உணர்த்தியது.

இவ்விதியில் வருகின்ற ஐ, ஆ என்பன இரண்டும் சாரியைகள். இவற்றைக் குறிப்பு முற்று விகுதியாகவோ எச்சத்தின்கண் வந்த எதிர்மறை விகுதியாகவோ கொள்ளக் கூடாது.

**புள், வள் என்பவற்றிற்குச் சிறப்பு விதி**

***புள்ளும் வள்ளும் தொழிற்பெயர் மானும்.***

புள் (பறவை), வள் (வாள்) என்னும் சொற்களின் முன் யகரமல்லாத மெய்கள் முதலில் வந்தால் இருவழியிலும் தொழிற்பெயர் போல உகரச் சாரியை பெறும்.(எ-டு)

| | | | |
|---|---|---|---|
| புள் + கடிது | - | புள்ளுக்கடிது | அல்வழியில் உகரப்பேறு |
| வள் + கடிது | - | வள்ளுக்கடிது | |
| புள் + கடுமை | - | புள்ளுக்கடுமை | |
| வள் + சுடுமை | - | வள்ளுக்கடுமை | வேற்றுமையில் உகரப்பேறு |

**வகர ஈற்றுச் சுட்டுப்பெயர்**

***சுட்டு வகரம் மூவினம் உற முறையே***
***ஆய்தமும் மென்மையும் இயல்பும் ஆகும்***

அவ், இவ், உவ் என்னும் சுட்டெழுத்தை முதலாகக் கொண்ட வகர ஈற்றுச் சொற்களுக்கு முன் வருமொழியில் மூவினமும் வர வகரம் முறையே ஆய்தமும் மெல்லினமும் இயல்பும் ஆகும்.

**(எ.டு)**

| | | |
|---|---|---|
| அவ்+கடிய | = அ.்.கடிய | |
| இவ்+கடிய | = இ.்.கடிய | வல்லினம் வர வகரம் |
| உவ்+கடிய | = உ.்.கடிய | ஆய்தமாயிற்று |

அவ் + மணி = அம் மணி
இவ் + மணி = இம் மணி — மெல்லினம் வர வகரம்
உவ் + மணி = உம் மணி — மெல்லினமாயிற்று
அவ் + யாவை = அவ்யாவை
இவ் + யாவை = இவ்யாவை — இடையினம் வர வகரம்
உவ் + யாவை = உவ்யாவை — இயல்பாயிற்று

**தெவ் என்பதற்குச் சிறப்பு விதி**

***தெவ்என் மொழியே தொழிற்பெயர் அற்றே***

***மவ்வரின் வ.:.கான் மவ்வும் ஆகும்.***

தெவ் என்னும் சொல், யகரமல்லாத மெய்கள் வருமொழியில் வரின் தொழிற்பெயர் போல் இருவழியிலும் உகரச்சாரியை பெறும். வருமொழியில் மகரமெய் வருமானால் உகரச்சாரியை பெறுதலேயன்றிச் சிலவிடங்களில் வகர மெய், மகர மெய்யாகவும் திரியும்.

**(எ.டு)**

| **அல்வழி** | **வேற்றுமை** |
|---|---|
| தெவ் + கடிது = தெவ்வுக்கடிது | தெவ் + கடுமை = தெவ்வுக்கடுமை |
| தெவ் + நன்று = தெவ்வுநன்று | தெவ் + நன்மை = தெவ்வுநன்மை |
| தெவ் + வலிது = தெவ்வுவலிது | தெவ் + வன்மை = தெவ்வுவன்மை |

**வருமொழித் தகர நகரத் திரிபு**

***னலமுன் றனவும் ணளமுன் டணவும்***

***ஆகும் தநக்கள் ஆயும் காலே***

ன, ல என்னும் மெய்களின் முன்வருகின்ற த, ந என்னும் மெய்கள் முறையே ற, ன என்னும் மெய்களாகத் திரியும். ண, ள என்னும் மெய்களின் முன் வருகின்ற த, ந என்னும்மெய்கள் முறையே ட, ண என்னும் மெய்களாகத் திரியும்.

**(எ.டு)**

| **அல்வழி** | **வேற்றுமை** |
|---|---|
| பொன் + தீது = பொற்றீது | பொன் + தீமை = பொற்றீமை |
| - நகரத்தின்முன் தகரம், றகரமாயிற்று | |
| பொன் + நன்று = பொன்னன்று | பொன் + நன்மை = பொன்னன்மை |
| - னகரத்தின்முன் நகரம், னகரமாயிற்று | |
| கல் + தீது = கற்றீது | கல் + தீமை = கற்றீமை |
| கல் + நன்று = கன்னன்று | கல் + நன்மை = கன்னன்மை |
| - லகரத்தின் முன் நகரம், னகரமாயிற்று. | |
| மண் + தீது = மண்டீது | மண் + தீமை = மண்டீமை |
| - ணகரத்தின் முன் தகரம், டகரமாயிற்று. | |
| மண் + நன்று = மண்ணன்று | மண் + நன்மை = மண்ணன்மை |
| - ணகரத்தின் முன் நகரம், ணகரமாயிற்று. | |

முள் + தீது = முட்டீது முள் + தீமை = முட்டீமை

- ளகரத்தின் முன் தகரம், டகரமாயிற்று.

முள் + நன்று = மு்ணன்று முள் + நன்மை = முண்ணன்மை

- ளகரத்தின் முன் நகரம், ணகரமாயிற்று.

-

**வேற்றுமைப்புணர்ச்சிச் சிறப்பு விதி**

***உருபின் முடிபவை ஒக்கும்அப் பொருளினும்***

உருபு புணர்ச்சிக்கு உரியனவாகக் கூறப்படும் முடிவுகள் அவ்வுருபுகள் தொக்கு நின்று அவ்வுருபின் பொருள் தோன்றுமாறு முடியும் பொருட்புணர்ச்சிக்கும் பொருந்தும்.

**(எ.டு)**

எல்லாவற்றதும் - உருபு புணர்ச்சி
எல்லாவற்றுக்கோடும் - வேற்றுமைப் பொருட் புணர்ச்சி
- அ.்.றிணையில் வந்தன.

**புணரியல்களுக்குப் புறனடை**

***இடைஉரி வடசொலின் இயம்பிய கொளாதவும்***
***போலியும் மரூஉவும் பொருந்திய வாற்றிற்கு***
***இயையப் புணர்த்தல் யாவர்க்கும் நெறியே***

இடைச் சொற்களுள்ளும் உரிச் சொற்களுள்ளும் வட சொற்களுள்ளும் உயிரீற்றுப் புணரியல் மெய்யீற்றுப் புணரியல்களில் கூறப்பெற்ற புணாச்சி இலக்கணங்கள் பொருந்தாமல் வேறுபட்டு வரும் சொற்களும் இலக்கணப்போலியும், மரூஉச் சொற்களும் ஆகிய இவற்றை உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்னும் இருவகை வழக்கிற்கும் ஏற்பப் பொருந்தும் முறை அறிந்து கூட்டி முடித்தல் அறிவுடையார் யாவருக்கும் இயல்பாம்.

**(எ.டு)**

ஆன் + கன்று = ஆன்கன்று
வண்டின் + கால் = வண்டின்கால்

வேற்றுமையில் இடைச் சொற்களான 'ன்' 'இன்' சாரியைகள் இயல்பாயின.

மழ + களிறு = மழகளிறு
தட + தோள் = தடந்தோள்

உயிரை இறுதியாக உடைய உரிச்சொல் வல்லெழுத்துவர இயல்பாயும் மெல்லெழுத்து மிகுந்தும் முடிந்தது.

அளி + குலம் = அளிகுலம்
தன + தடம் = தனதடம்

உயிரை இறுதியாக உடைய வடசொல் வல்லினம் வர இயல்பாயிற்று.

| | |
|---|---|
| இல் + முன் = முன்றில்<br>பொது + இல் = பொதியல் | இலக்கணப் போலிகள்<br>முற்கூறிய விதிபெறாமல்<br>தமக்கு ஏற்றவாறு<br>விகாரப்பட்டன. |
| அருமருந்தன்ன பிள்ளை - அருமந்தபிள்ளை<br>சோழநாடு – சோணாடு<br>தஞ்சாவூர் - தஞ்சை<br>ஆதன்தந்தை –ஆந்தை | மரூஉச்சொற்கள் முற்கூறிய விதி பெறாமல் தமக்கு ஏற்றவாறு விகாரப்பட்டன. |

## உருபு புணரியல்

வேற்றுமை உருபுகள் நிலைமொழியோடும் வருமொழியோடும் புணரும் இயல்பினைக் கூறுவதால் இவ்வியல் உருபு புணரியல் என அழைக்கப் பெறுகிறது. இதன்கண் அமைந்த நூற்பாக்கள் 18.

### உருபுகள்

**வேற்றுமை உருபுகளும் அவை சார்தற்கு உரிய இடங்களும்**

***ஒருவன் ஒருத்தி பலர்ஒன்று பலஎன***
***வருபெயர் ஐந்தொடு பெயர்முதல் இருநான்கு***
***உருபும் உறழ்தர நாற்பதாம் உருபே.***

ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல என்பன இருதிணைக்கும் உரிய ஐம்பாற் பெயர்களாகும். இவற்றுடன் எழுவாய் வேற்றுமை முதலாக விளி ஈறாக நின்ற எட்டு உருபினையும் உறழ வேற்றுமை உருபுகள் நாற்பதாம்.

**(எ-டு)**

நம்பி, சாத்தி, மக்கள், மரம், மரங்கள்.
நம்பி (எழுவாய்), நம்பியை, நம்பியால், நம்பிக்கு, நம்பியின், நம்பியது, நம்பிகண், நம்பியே

### வேற்றுமை உருபுகள் நிற்கும் இடம்

***பெயர்வழித் தம்பொருள் தரவரும் உருபே.***

வேற்றுமை உருபுகள் தம்பொருளைக் கொடுக்கப் பெயருக்குப் பின்னர் வரும்.

**(எ.டு)**

நம்பி + பெற்றான் - நம்பி பெற்றான் (எழுவாய்)
நம்பி + ஐ + பெற்றான் - நம்பியைப் பெற்றான் (2 ஆம் வேற்றுமை)
நம்பி + ஆல் + பெற்றான் - நம்பியால் பெற்றான் (3ஆம் வேற்றுமை)

தம்பொருள் தரவருவன எழுவாய் முதலிய எட்டு உருபுகளுள், பெயர் முழுவதும் உருபாய் நிற்கும் எழுவாயைத் தவிர எஞ்சிய ஏழும் பெயரின் வழி வருவன.

### வேற்றுமை உருபுகள் மொழிகளுடன் புணர்தல்

***ஒற்றுஉயிர் முதல்ஈற்று உருபுகள் புணர்ச்சியின்***
***ஒக்குமன் அப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே.***

வேற்றுமை உருபுகள் வெளிப்பட்டு நின்று நிலைமொழியோடும் வருமொழியோடும் புணரும். அவ்வாறு புணரும் மெய்யையும் உயிரையும் முதலும் ஈறுமாக உடைய ஐ முதலிய ஆறு வேற்றுமை உருபுகளும் இடைச்சொல்லாகும். புணர்ச்சியில் மெய்யையும் உயிரையும் (முன் இயல்களில்) இறுதியாகக் கொண்ட பெயர்களின் புணர்ச்சி விதிகளைப் பெரும்பான்மை ஒத்து நிற்கும். சிறுபான்மை ஒவ்வாது.

நம்பி + கண் + வாழ்வு - நம்பிகண் வாழ்வு என்பதில் நம்பி இகர ஈற்றுப் பெயர் பெயர். இதன்முன் வேற்றுமை உருபாகிய கண் புணர்த்து 'ஆவியரமுன் வன்மை மிகா' (நூ. 159) என்னும் விதிப்படி நம்பிகண் என இயல்பாயிற்று. கண்+வாழ்வு என்பது 'ணன வல்லினம் வர டறவும் பிறவரின் இயல்பும் ஆகும் வேற்றுமைக்கு" (நூ.209) என்னும் விதிப்படி கண்வாழ்வு என இயல்பாயிற்று. உறிக்கண் தயிர் என்பதில் உறி + கண் என்பன 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' (நூ.165) என்னும் விதிப்படி உறிக்கண் என வல்லெழுத்து மிக்கது. கண் + தயிர் என்பன ணனமுன் வல்லினம் வர டறவும் என்னும் விதிப்படி கண் உருபின் முதலும் ஈறும் கட்டயிர் என விகாரமெய்தியது. மேலும்,

பழி+கு+அஞ்சி - பழிக்கு+அஞ்சி - பழிக்கஞ்சி

நம்பி+கு-பிள்ளை - நம்பிக்கு+பிள்ளை-நம்பிக்குப்பிள்ளை என அமைத்து ஏற்ற விதி கூறி முடித்துக் கொள்க.

### சாரியை

வேறாகி நிற்கும் இருமொழிகள் தம்முள் சார்தற் பொருட்டு இயைந்து நிற்கும் எழுத்தோ மொழியோ சாரியை என்று பெயர்பெறும். இவை சார்ந்து வரும் மொழிப்பொருட்டு உபகாரமாய் நிற்கும். மொழியைச் சார்ந்து நிற்கும் இம்மொழிச் சாரியைகள், பொதுச்சாரியை என்றும் கூறப்பெறும், இச்சாரியை வரும் முறைகளையும் சாரியை இவை என்பதையும் நன்னூலார் மிகச்சிறப்பித்து விளக்குகிறார்.

### சாரியை வரும் முறை

***பதமுன் விகுதியும் பதமும் உருபும்***
***புணர்வழி ஒன்றும் பலவும் சாரியை***
***வருதலும் தவிர்தலும் விகற்பமும் ஆகும்.***

ஒரு பதத்தின்முன் விகுதியோ பதமோ உருபோ புணரும். அவ்விடத்துச் சாரியை ஒன்றேனும் பலவேனும் வரும். வராது ஒழிதலும் ஆகிய இவ்விரு விகற்பத்தைப் பெறுதலும் உண்டு.

(எ-டு)

**விகுதிப்புணர்ச்சி**

நடந்தவன் - நட +த் + த் + அன் + அன் - அன்சாரியை வந்தது
நடந்தான் - நட + த் + த் + ஆன் - சாரியை வரவில்லை

**பதப்புணர்ச்சி**

புளியங்காய் - புளி + அம் + காய் - அம் சாரியை வந்தது
புளிக்கறி – புளி + கறி - சாரியை வரவில்லை
நெற்குப்பை - நெல் + குப்பை - சாரியை வரவில்லை
நெல்லின்குப்பை - நெல் + இன் + குப்பை - இன் சாரியை வந்தது.

**உருபு புணர்ச்சி**

மரத்தை - மரம் + அத்து + ஐ - அத்துச் சாரியை வந்தது
தன்னை - தான் + ஐ - சாரியை இல்லை

**பல சாரியை பெறுதல்**

மரத்தினுக்கு - மரம் + அத்து + இன் + உ+கு (அத்து, இன், உ)

### சாரியைகள்

***அன்ஆன் இன்அல் அற்றுஇற்று அத்துஅம்***
***தம்நம் நும்ஏ அஉ ஐகுன***
***இன்ன பிறவும் பொதுச்சாரி யையே.***

அன் முதலாக ன ஈறாகியவும் பிறவும் விகுதி, பதம், உருபு என்னும் மூன்று புணர்ச்சிக்கண்ணும் தனிமொழிக்கண்ணும் வருகின்ற பொதுச் சாரியை ஆவனவாம். (எ-டு)

| | |
|---|---|
| ஒன்றன்கூட்டம் - அன்; | ஒருபாற்கு - ஆன் |
| வண்டின்கால் - இன்; | தொடையல் -அல் |
| பலவற்றை - அற்று; | பதிற்றுப்பத்து - இற்று |
| மரத்திலை - அத்து; | மன்றம் - அம் |
| எல்லார் தம்மையும் - தம்; | எல்லார் நம்மையும் - நம் |
| எல்லீர் நும்மையும் நும்; | கலனே தூணி - ஏ |
| நடந்தது - அ; | சாத்தனுக்கு - உ |

ஏற்றை -ஐ; உய்குவை-கு; ஆன்- ன்

இன்னபிற என்றதனால்

அவன்தனை - தன்; அவன்தான் -தான்.

அவர்தாம் - தாம்; புற்றாஞ்சோறு - ஆம்; இல்லாப்பொருள் -ஆ என்பனவும் சாரியைகளாகும்.

**எல்லாம் என்பதற்கு உரிய சிறப்பு விதி**

***எல்லாம் என்பது இழிதிணை ஆயின்***
***அற்றொடு உருபின் மேல்உம் உறுமே***
***அன்றேல் நம்மிடை அடைந்துஅற் றாகும்.***

எல்லாம் என்னும் இருதிணைப் பொதுப்பெயர் அ∴றிணையைக் குறிக்கும் சொல்லாக நின்று உருபுகளுடன் புணரும்போது அற்றுச்சாரியை பெறுவதோடு ஈற்றில் முற்றும்மையையும் பெறும். உயர்திணையைக் குறிக்கும் போது நம்முச் சாரியையும் முற்றும்மையையும் பெறும்.

**(எ-டு)**

எல்லாம் + அற்று + ஐ + உம் - எல்லாவற்றையும் (அ∴றிணை)
எல்லாம் + நம் + ஐ + உம் - எல்லா நம்மையும் (உயர்திணை)

தாம், நாம், நீர் என்னும் மூவிடப்பெயர் தம், நம், நும் என விகாரப்பட்டு மூவிடப் பெயர்களைச் சார்ந்து நின்று சிறப்புப் பொருள் தாராமையின் இம்மூன்றும் சாரியை இடைச்சொல் எனப்பட்டன. இவற்றுள் தம் படர்க்கைப் பெயருக்கும் நும் முன்னிலைப் பெயர்க்கும் நம் தன்மைப் பெயர்க்குமாய் அமைந்தன.

**எல்லாரும் எல்லீரும் சொற்களின் புணர்ச்சி**

***எல்லாரும் எல்லீரும் என்பவற்று உம்மை***
***தள்ளி நிரலே தம்நும் சாரப்***
***புல்லும் உருபின் பின்னர் உம்மே.***

எல்லாரும் என்னும் உயர்திணைப் படர்க்கைப் பெயரொடும் எல்லீரும் என்னும் முன்னிலைப் பொதுப் பெயரொடும் ஆறு உருபும் புணரும். அவ்விடத்து இரு பெயர்களின் முற்றும்மைகள் நீங்கும். படர்க்கைப் பெயர்க்குத் தம்முச் சாரியையும் முன்னிலைப் பெயர்க்கு நும்முச் சாரியையும் பொருந்தும். அந்நிலையில் நீக்கப்பட்ட முற்றும்மைகள் உருபுகளின் பின்வந்து பொருந்தும்.

**(எ-டு)**

எல்லாரும் + தம் - எல்லார் (உம்) தம் + ஐ + உம் - எல்லார் தன்மையும்

எல்லீரும் + நும் - எல்லீர் (உம்) + நும் + ஐ + உம் எல்லீர் நும்மையும்

எல்லாரும் + ஐ + உம் - எல்லாரையும் (தம் சாரியை இல்லை)

எல்லீரும் + ஐ + உம் - எல்லீரையும் (நும் சாரியை இல்லை)

நம் + தம் + ஐ - நந்தம்மை; எம் + தம் + ஐ - எந்தம்மை எனப் படர்க்கைக்கு உரிய தம்முச் சாரியை தன்மை, முன்னிலைக்கு வருதல் இடவழுவமைதியாகும்.

**நெடுமுதற் குறுகும் சொற்களின் புணர்ச்சி**

***தான்தாம் நாம்முதல் குறுகும் யான்யாம்***
***நீநீர் என்எம் நின்நும் ஆம்பிற***
***குவ்வின் அவ்வரும் நான்கு ஆறு இரட்டல.***

இருதிணைப் பொதுவாய மூவிடப் பெயர்கள் தான், தாம், நாம், யான், யாம், நீ, நீர் என்பனவாகும். இவற்றுள் தான், தாம், நாம் என்பனவற்றோடு உருபுவரின் தன், தம், நம் எனக் குறுகும். யான், யாம், நீ, நீர் என்பவை குறுகுவதோடு என், எம். நின், நும் எனத் திரிந்து உருபொடு புணரும்.இவ் ஏழு சொற்களும் கு என்னும் நான்காம் வேற்றுமை உருபுடன் புணரும் போது இடையில் அகரச் சாரியை வரும். அகரச் சாரியை பெறும் குவ்வுருபும் ஆறாம் வேற்றுமையும் இச்சொற்களின் முன் வரின் ஒற்று இரட்டுவதில்லை.

(எ-டு)

1. தான் + ஐ - தன் + ஐ - தன்னை; தாம் + ஐ - தம்மை; நாம் + ஐ - நம்மை
2. யான் + ஐ - என்னை; யாம் + ஐ எம்மை; நீ + ஐ - நின் + ஐ - நின்னை
3. தாம் + கு - தம் + கு - தம் + அ + கு - தமக்கு
4. தாம் + அது - தம் + அது – தம + து - தமது

கு, அது என்பவை புணரத் தனிக்குறில் முன் ஒற்று இரட்டிக்கும் என்னும் விதிப்படி தம்மக்கு, தம்மது என மாற வேண்டும். அவ்வாறு வழக்கு இல்லாமையால் ஒற்று இரட்டாது நின்றனவாம்.

பிற என மிகுத்துச் சொல்லியதால் நீ என்பது உன் எனவும் நீர் என்பது உம் எனவும் திரிந்து, உன்னை, உம்மை என உருபேற்கும். நீர் என்பது நீம் ஆகிக் கள் விகுதி பெற்று நீங்கள் எனத் தற்காலத்து வழங்கப் பெறுகிறது.

## ஓரெழுத்து ஒருமொழிகளின் புணர்ச்சி

***ஆமா கோனவ் அணையவும் பெறுமே***

பசுவை உணர்த்தும் ஆ என்னும் பெயரும் விலங்கை உணர்த்தும் மா என்னும் பொதுப்பெயரும், இறைவனை உணர்த்தும் கோ என்னும் பெயரும் உருபுகளோடு புணருமிடந்து னகரச் சரியை பொருத்தவும் பெறும்

(எ.டு)

ஆ+ஐ - ஆன் + ஐ - ஆனை, மானை: கோனை என னகரச் சாரியை பெற்று வந்தன

னகரச் சாரியை பொருத்தவும் பெறும் என்பதால் பொருந்தாமையும் உண்டு

ஆ + ஐ - ஆவை; மாவை; கோவை.

அணையவும் என்பதை எதிரது தழீஇய எச்சவும்மையாகக் கொண்டு பிறவாறும் கொள்ளலாம்.

உகரச்சாரியை பெற்று ஆவுக்கு, மாவுக்கு, கோவுக்கு என அமையும். உகரம், இன் சாரியை பெற்று ஆவினுக்கு, கோவினுக்கு என அமையும். இன் உருபு நீங்கப் பிறவற்றோடு இன் சாரியை மட்டும் பொருந்த ஆவினை, கோவினை, மாவினை என அமையும்.

## எண்ணுப் பெயருடன் உருபுகள் புணர்தல்

***ஒன்று முதல்எட்டு ஈறாம் எண்ணூர்***
***பத்தின்முன் ஆன்வரின் பவ்வொற்று ஒழியமேல்***
***எல்லாம் ஓடும் ஒன்பதும் இற்றே.***

ஒன்று முதல் எட்டு ஈறாகிய எண்களோடு புணர்ந்த பத்து என்னும் எண் முன்னர் உருபுகள் புணருமிடத்து ஆன் சாரியை வந்து புணரும். அவ்விடத்துப் பத்து என்னும் எண்ணினது பகர ஒற்று மட்டுமே நிற்க மேல் நின்ற எல்லா எழுத்தும் கெடும். ஒன்பது என்னும் எண் முன்னரும் உருபுகள் புணருமிடத்து ஆன் சாரியை வரின் அதன் பகரவொற்று நிற்க மேல்நின்ற எல்லா எழுத்தும் கெடும்.

(எ-டு)

ஒன்று + பத்து + ஐ - ஒரு + பத்து + ஆன் + ஐ
ஒரு + ப் + ஆன் + ஐ - ஒரு பானை
ஒன்பது + ஐ - ஒன்ப் + ஆன் + ஐ - ஒன்பானை
ஒன்ப∴து + ஐ - ஒன்ப் + ஆன் + ஐ - ஒன்பானை
பது, ப∴து என்பவற்றில் முறையே அது, அ∴து என்பன கெட்டன.

### வகர ஈற்றுக்குச் சிறப்பு விதி

***வவ்விறு சுட்டிற்கு அற்றுஉறல் வழியே.***

அஃறிணைப் பன்மைப்பால் உணர்த்தும் வகர ஈற்றுச் சுட்டுப் பெயர்கள் மூன்றும் உருபுகளோடு புணருமிடத்து அற்றுச் சாரியை பெறும். (எ-டு)

அவ் + ஐ - அவ் + அற்று + ஐ - அவற்றை

இவ் + ஐ - இவ் + அற்று + ஐ - இவற்றை

உவ் + ஐ - உவ் + அற்று + ஐ - உவற்றை

வழி என்னும் மிகையால் அற்றும் இன்னும் ஒருங்கு வருதலும் அமையும்.

அவ்+அற்று+ இன்+ஐ - அவற்றினை, இவற்றினை, உவற்றினை

இச்சாரியை புணர்ச்சியில் அவ்+அற்று என்பதில் தனிக்குறில் முன் ஒற்று இரட்டா.

### அஃது என்பதற்குச் சிறப்புவிதி

***சுட்டின்முன் ஆய்தம் அன்வரின் கெடுமே.***

அஃது, இஃது, உஃது என்னும் சுட்டுப் பெயர்களின் முன் அன் சாரியை வந்து புணர நிலைமொழியின் இடைநிற்கும் ஆய்தம் கெடும். (எ-டு)

அஃது + அன் + ஐ - அது + அன் + ஐ - அதனை; இதனை; உதனை
அஃது + ஐ - அஃதை; அது + ஐ - அதை

சாரியை வர ஆய்தம் கெடும். வாராவழி இயல்பாகப் புணரும்.

அன் வருதலை வற்புறுத்திக் கூறாமையால் நான்காம் வேற்றுமை உருபு புணர்வழி அதனுக்கு என உகரச் சாரியை வரும்.

### அத்துச்சாரியை புணர்தல்

***அத்தின் அகரம் அகரமுனை இல்லை.***

அத்துச் சாரியையின் அகர உயிர் இயல்பினும் விதியினும் நின்ற அகர உயிரீற்றின் முன் வரின் வகர உடம்படுமெய் பெறாது கெடும். (எ-டு)

மக + அத்து + கை - மகத்துக்கை (இயல்பீறு)

மர(ம்) + அத்து + கிளை - மரத்துக்கிளை (விதியீறு)

### சாரியைக்குப் புறனடை

***இதற்குஇது சாரியை எனின்அளவு இன்மையின்***
***விகுதியும் பதமும் உருபும் பகுத்துஇடை***
***நின்ற எழுத்தும் பதமும் இயற்கையும்***
***ஒன்ற உணர்த்தல் உரவோர் நெறியே.***

விகுதி முதலிய புணர்ச்சிக்கண் இதற்கு இது சாரியை என்று தனித்தனியாகச் சொல்லப் புகுந்தால் அதற்கு வரையறை இல்லை. ஆதலால் விகுதிப்புணர்ச்சி பதப்புணர்ச்சி, உருபு புணர்ச்சி ஆகிவற்றைக் கண்டு அவற்றைப் பிரித்துப் பார்க்க இடை நிற்கும் ஏ, அ போன்ற எழுத்துச் சாரியையும் அன், ஆன் போன்ற பதச்சாரியையும் இவ்விருவகை சாரியை தோன்றா இயல்பினையும் பொருந்துமாறு அறிவித்தல் பெரியோரது நெறியாகும்.

**(எ.டு)**

ஆ + மணி - ஆனமணி - ஆ என்பதன் முன் ன் சாரியையோடு 'அ'கரச் சாரியையும் உடன் நின்றன.
பாட்டு + பொருள் - பாட்டின் பொருள் - பாட்டு என்னும் வன்தொடர் குற்றியலுகரம் இன் சாரியை பெற்றது.
மரம் + இலை - மரத்திலை - மகர ஈற்றுக்கு அத்தும் சாரியை ஆயிற்று.
தன் + கை - தன்கை; என் + கை - என்கை; சாரியை பெறாது இயல்பாயின.

**நான்கு வகைப் புணர்ச்சிக்கும் புறனடை**

***விகுதி பதம்சா ரியைஉருபு அனைத்தினும்***
***உரைத்த விதியின் ஓர்ந்து ஒப்பன கொளலே.***

விகுதி, பதம், சாரியை, உருபு என்னும் நால்வகைப் புணர்ச்சிக் கண்ணும் விதிகள் பொதுப்படக் கூறப்பட்டன. அவற்றுள் இவ்விதி இதற்குப் பொருந்தி வராது என ஆராய்ந்து பார்த்து எவ்விதி எதற்குப் பொருந்தி வருமோ அவ்விதியை அதற்குக் கொள்ளல் வேண்டும்.

**(எ.டு)**

விகுதிப் புணர்ச்சியுள் 'றவ்வொடு உகர உம்மை நிகழ்பல்ல' (நூ.145) எனக் கூறியது பொதுவிதி. ஆயினும் சென்று இறந்த காலமும் சேறு நிகழ்காலமும் பொருந்துமென அமைத்துக் கொள்ள வேண்டும்.

பதப்புணர்ச்சியுள் 'அல்வழி ஐ அம் முன்னராயின் இயல்பும் மிகலும் விகற்பமும் ஆகும்' (நூ. 176) எனப் பொதுப்படக் கூறப்பட்ட விதி. ஆயினும் ஆடி திங்கள், குவளைகண் என இயல்பாகக் கொள்ளக்கூடாது. ஆடித்திங்கள் குவளைக்கண் என வல்லெழுத்து மிக வேண்டும்.

சாரியை புணர்ச்சியுள் உருபு புணர்வுழிச் சாரியை வருதல் வலியுறுத்தப்பட்டது (நூ.242). ஆயினும் இப்பொது விதி நாட்டினின் நீங்கினான் என்பதற்குப் பொருந்தாது. நாட்டின் நீங்கினான் என்பதே பொருந்துவதாகும்.

உருபு புணர்ச்சியுள் 'ஒற்றுயிர் ........... புணர்ப்பே' (நூ.242) என்னும் பொது விதியைக் கொண்டு நம்பி + கு - நம்பிகு என உயர்திணைப் பெயர் முன் வந்த கு உருபு மிகாது எனக் கொள்ளாமல் நம்பிக்கு என மிகுத்தும் நம்பிகண் என மிகாதும் கொள்வதே பொருந்துவதாகும்.

**இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிக்குச் சிறப்பு விதி**

***இயல்பின் விகாரமும் விகாரத்து இயல்பும்***
***உயர்திணை இடத்து விரிந்தும் தொக்கும்***
***விரவுப் பெயரின் விரிந்து நின்றும்***
***அன்ன பிறவும் ஆகும் ஐஉருபே.***

வேற்றுமைப் புணர்ச்சிக்குக் கூறப்பட்ட பொது விதியிலிருந்து மாறி இயல்பிடத்து விகாரம் அடைதல், விகாரம் அடைய வேண்டிய இடத்து இயல்பாதல். உயர்திணைப் பெயரிடத்து வெளிப்பட்டும் மறைந்தும் உறழ்ச்சி முடிவைப் பெறுதல். அஃறிணைப் பெயரிடத்தும் உறழ்ச்சி முடிவைப்பெற்று நிற்றல் ஆகிய இவற்றுடன் இவைபோன்ற பிற வேறுபாடாயும் வரும் இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி.

**(எ.டு)**

தலைவன் + புகழ்ந்தான் - இச்சொற்கள் தலைவன் புகழ்ந்தான் என இயல்பாதல் வேண்டும். ஆனால் தலைவற் புகழ்ந்தான் என விகாரப்பட்டு வரும்.

தமிழ் + படித்தான் - இச்சொற்கள் தமிழ்ப் படித்தான் என விகாரப்பட வேண்டும். ஆனால் தமிழ் படித்தான் என இயல்பாக வரும்.

நம்பி + கொணர்ந்தான் - இச்சொற்கள் உயர்திணைப் பெயருக்கு உரிய விதிப்படி நம்பி கொணர்ந்தான் என உருபு மறைந்து வரவேண்டும். ஆனால் நம்பியைக் கொணர்ந்தான் என உருபு விரிந்து வரும்.

மகன் + பெற்றான் - இச்சொற்கள் உயர்திணைப் பெயருக்கு உரிய விதிப்படி மகனைப் பெற்றான் என உருபு விரிந்து வர வேண்டும். ஆனால் மகற் பெற்றான் என உருபு மறைந்து வரும்.

## மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சிக்குச் சிறப்பு விதி

***புள்ளியும் உயிரும் ஆஇறு சொல்முன்***
***தம்மின் ஆகிய தொழில்மொழி வரினே***
***வல்லினம் விகற்பமும் இயல்பும் ஆகும்.***

மூன்றாம் வேற்றுமைத் தொகைப் புணர்ச்சியுள் உயிரீறு, மெய்யீறுகளின் முன் மூன்றாம் வேற்றுமைக்கு உரிய கருத்தாவின் பொருளால் அமைந்த தம்மினாகிய தொழிற்சொல் வந்தால் வல்லினம் பொதுவிதியால் மிக்கு முடிதலே அன்றி உறழ்ந்தும் இயல்பாயும் முடியும்.

**(எ.டு)**

பேய் கோட்பட்டான்; பேய்க்கோட்பட்டான் (மெய்யிறுதி)
புலிகோட்பட்டான்; புலிக்கோட்பட்டான் (உயிரிறுதி) - இவை உறழ்ந்து வந்தன.
பேய்பிடிக்கப்பட்டான்; புலிகடிக்கப்பட்டான்; (இயல்பு)
கோள் - கொள்ளுதல் - தன் தொழில் (கருத்தாவின் தொழில்)
கொள்ளப்படுதல் (கோட்படுதல்) தம்மினாகிய தொழிற்சொல்.

## எழுத்ததிகாரத்துக்குப் புறனடை

***இதற்குஇது முடிபு என்று எஞ்சாது யாவும்***
***விதிப்புஅளவு இன்மையின் விதித்தவற்று இயலான்***
***வகுத்துரை யாதவும் வகுத்தனர் கொளலே.***

இதற்கு இது முடிபாகும் என்று குறையாமல் இந்த எழுத்ததிகாரத்தில் கூறப்பட்டன. அவற்றைத் தனித்தனியே வரையறுத்துச் சொல்ல முற்பட்டால் அவை எல்லையின்றிப் பெருகும். ஆகையால் விதித்தனவற்றின் இலக்கணங்களை அடிப்படையாகக் கொண்டு விதி கூறப்படாதவற்றையும் கருதி ஆராய்ந்து விதி உரைத்துக் கொள்ள வேண்டும்

**(எ.டு)**

1. மொழிமுதற் காரணமாம் அணுத்திரள் ஒலி எழுத்து (நூ. 58) எனக் கூறப்பட்டது. கட்புலன் இல்லாக் கடவுளைக் காட்டும் சட்டகம் போலச் செவிப்புலனாகிய ஒலியை அறிவதற்கு இடும் உருவாம் வடிவெழுத்தே எனப் பிறர் கூறியவாறு ஒலி வடிவைப் புலப்படுத்துவதற்கு ஒரு கருவியாக எழுதிக் கொள்ளப்பட்டது வரிவடிவம் என அறிதல் வேண்டும்.

2. ஆள் விகுதி (நூ. 140) பெண்பாலுக்குரியது. பெருமாள் என்பது பெருமையை உடையவன் எனப் பொருள் தரும். பெருமான் என்னும் சொல்லின் திரிபாகும். இதன்வழி ஆன் விகுதி சில இடங்களில் திரிந்து ஆண்பாலை உணர்த்தியதாகக் கொள்ள வேண்டும்.

3. ணன வல்லினம் வரட்டறவும் என்றவிடத்து ட் மிகுத்துக் கூறப்பட்டது. டகரம் வல்லினம் ஆதலின் இயல்பினும் விதியினும் என்னும் விதிப்படி (நூ.165) மிகுந்ததாகக் கொள்ள வேண்டும்.

நும்தம் எம்நம் ஈறாம் மவ்வரு ஞநவே (நூ.211) என்னும் சொற்களைப் போல அம் என்னும் குற்றொற்றின் முன் மெல்லினம் வரின் அதுவாய்த் திரிந்ததாய்க் கொள்ள வேண்டும். அம் + நலம் - அந்நலம் (அழகினது நலம்).

வகர ஈற்றுச் சுட்டுப் பெயர்க்கு அற்றுச் சாரியை (ந. 250) அதுபோல எவ் என்னும் வினாவும் வற்றுச் சாரியை பொருந்த எவற்றை என அமைக்க வேண்டும்.

2 ஆம் 3 ஆம் வேற்றுமைகளுக்குப் புறனடை உரைக்கப்பட்டது. ஏழாம் வேற்றுமை மண் புகுந்தும் விண்பறந்தும் எனப் புறநடைக்கு ஏற்பப் பொதுவிதிக்குப் பொருந்தாது தொக்கு நின்றது.

எனவே எழுத்தியல் முதலான ஐந்து இயல்களில் கூறப்படாத சொற்களுக்கு உரிய விதியை இப்புறனடையால் அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதாம்.

**சரியான விடையை எழுதுக**

1. நூலின் பயன் யாது?
2. உயிரும் உடம்புமாம் _________ ம் முதலே
   அ) இருபது ஆ) இரண்டு இ) பத்து ஈ) முப்பது
3. பகுப்பத உறுப்புகள் யாவை?
4. ஆநின்று, கின்று, கிறு என்பன
   அ) இறந்தகால இடைநிலை ஆ) நிகழ்கால இடைநிலை
   இ) எதிர்கால இடைநிலை ஈ) காலம் காட்டும் விகுதி
5. சுவைப்புளி முன் _______தோன்றும்
   அ) வன்மை ஆ) இனவன்மை இ) இனமென்மை ஈ) மென்மை

6. புணர்ச்சி என்றால் என்ன?

7. அகம் என்னும் சொல் எவ்வாறு புணரும்?

8. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. உயிர் முன் உயிர் | - | அணி தந்தான் |
| 2. உயிர் முன் மென் | - | சாத்தன் உண்டான் |
| 3. பெயர் முன் பெயர் | - | மணியடித்தான் |
| 4. பெயர் முன் வினை | - | சாத்தன் கை |

அ) 3, 2, 1, 4
ஆ) 4, 1, 2, 3
இ) 2, 4, 1, 3
ஈ) 3, 1, 4, 2

9. நெடு முதற் குறுகும் சொற்கள் யாவை?

10. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. விகுதிப்புணர்ச்சி | - | மரத்தை |
| 2. பதப்புணர்ச்சி | - | நடந்தனன் |
| 3. உருபு புணர்ச்சி | - | மரத்தினுக்கு |
| 4. பலசாரியை | - | புளியங்காய் |

அ) 2, 4, 1, 3
ஆ) 2, 4, 3, 1
இ) 3, 1, 4, 2
ஈ) 1, 3, 4, 2

**குறுவினா**

1. நல்லாசிரியருக்குக் காட்டப்படும் உவமைகள் யாவை?
2. மாணாக்கர் ஆவதற்கு உரியவர் யார்?
3. இடுகுறி காரணப்பெயர் பொதுச்சிறப்பின – விளக்கம் தருக.
4. சுட்டு, வினா எழுத்துக்கள் யாவை?
5. பகுபதம், பகாப்பதம் - எழுத்து வரையறைகளை குறிப்பிடுக.
6. இறந்த காலம் காட்டும் இடைநிலைகளுக்குச் சான்று தருக.
7. புணர்ச்சியில் அமையும் மூவகை விகாரங்கள் யாவை?
8. பூப்பெயர் முன் இனமென்மையும் தோன்றும் - சான்று தருக.
9. வருமொழியில் தகர, நகரத் திரிபுகளுக்குச் சான்று தருக.
10. எல்லாம், எல்லாரும், எல்லீரும் என்பன அடையும் மாற்றங்கள் யாவை?

**பெருவினா**

1. முப்பத்திரண்டு உத்திகளை நிரல்படுத்துக.
2. ஆசிரியர் இயல்பு பற்றிய கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

3. எழுத்துகளின் பிறப்பு முறையை விவரித்தெழுதுக.
4. மெய்ம்மயக்கம் பற்றி ஒரு கட்டுரை வரைக.
5. மையீற்றுப் பண்புப் பெயர்களையும் அவை புணர்ச்சியில் அடையும் மாற்றங்களையும் விவரித்தெழுதுக.
6. பதவியல் கூறும் கருத்துகளை தொகுத்தெழுதுக.
7. குற்றியலுகர எண்ணுப்பெயர்ப் புணர்ச்சியை விவரி.
8. உயிரீற்றுச் சொற்களின் புணர்ச்சியைத் விவரிக்க.
9. ல, ளகர ஈற்றுச்சொற்களின் புணர்ச்சியை சான்றுடன் விளக்குக.
10. உருபியல் கூறும் சாரியைப் பற்றி விளக்குக.

**முனைவர். இரா. சொர்ண பமிலா**
உதவிப் பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம்
தெ.தி. இந்துக்கல்லூரி
நாகர்கோவில் - 629002.